REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஓகஸ்ட் 20 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 198 | Tuesday 20, August, 2024 | 16 பக்கங்கள் | 50/-




## வரலாற்று சிறப்புமிக்க கண்டி ரந்தோலி பெரஹெரா



வரலாற்று சிறப்புமிக்க கண்டி எசல பெரஹெராவின் இறுதி ரந்தோலி பெரஹெரா நேற்று நடைபெற்றது. புத்த பெருமானின் புனித தந்த பேழையை ஏந்திய இந்திரராஜா யானை பெரஹெரா ஊர்வலத்தில் கலந்து கொள்ள வருவதை காணலாம்.

*(படம்: சுலோச்சனா கமகே)*



**03 இலங்கையர்களுடன் சொகுசு படகு மூழ்கியது**

ஏழு பேரைக் காணவில்லை

# அரசாங்கத்தின் திட்டங்களை இடைநடுவில் கைவிட முடியாது

## கைவிட்டால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும்

### ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது எதிர்காலம் குறித்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் என்கிறார் ஜனாதிபதி



எவராலும் தீர்க்க முடியாமல் போன பொருளாதார நெருக்கடியை தன்னால் தீர்க்க முடிந்திருந்தாலும், சரியான பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தாமல், இந்த வேலைத்திட்டத்தை இடைநடுவில் கைவிட்டால், நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது எதிர்காலம் குறித்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

Ask Ranil நிகழ்ச்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமூக வலைத்தளங்கள் ஊடாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

06

## அரசியல்வாதிகளுக்கு மதுபான விற்பனை அனுமதிப்பத்திரமா?

### கலால் திணைக்கள ஆணையாளர் குணசிறி மறுப்பு



அரசியல்வாதிகளுக்கு மதுபான விற்பனை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டை வன்மையாக நிராகரிப்பதாக கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜே. குணசிறி தெரிவித்தார்.

மதுபான வரி அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு இதுவரை அரசியல்வாதிகள் எவரும் கோரிக்கை விடுக்கவில்லை எனவும் ஆணையாளர்

06

## வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை பொறுப்பேற்க மறுத்த சஜித்

### அன்று தட்டிக்கழித்ததாக சாகல குற்றச்சாட்டு



வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை பொறுப்பேற்க யாரும் இல்லாத நிலையில் ஜனநாயக முறையில் பொறுப்பேற்க வேண்டியவர் எதிர்க்கட்சித் தலைவர். ஆனால் அவர் அந்த பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிறிகொத்த தலைமையகத்தில் நேற்று (19) நடைபெற்ற பிராந்திய அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள்

06

## கறுப்பு பணத்தை வெள்ளையாக்க சிலர் ஜனாதிபதி தேர்தலில் போட்டி

### மல்வத்து மகாநாயக்க தேரர் முன்னிலையில் பிரதமர்



எந்த வகையிலும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாத நபர்கள் ஜனாதிபதி தேர்தலில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளதாகவும், இவர்களில் சிலர் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவதற்காக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக சந்தேகம் இருப்பதாக பிரதமர் தினேஷ் குணவர்தன மல்வத்து மகாநாயக்க தேரர் முன்னிலையில் தெரிவித்தார்.

பிரசார நடவடிக்கைகளுக்காக கணக்கு வெளியிடப்படாத பணத்தைச் செலவழித்து பிரபலமடையலாம் என்ற நம்பிக்கையில் சிலர் இருப்பதாகவும், மக்கள் மத்தியில் உரையாற்றுவதற்காக அனைத்து வேட்பாளர்களும் தொலைக்காட்சி ஒளிபரப்பு நேரத்தைப் பெறுவதற்கு ஜனாதிபதி வேட்பாளர்களாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

06

## உலகை அச்சுறுத்தும் வைரஸ் "குரங்கம்மை" தீவிர பரவல்

### விமான நிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள்




உலகளாவிய ரீதியில் குரங்கம்மை வைரஸ் தொற்று பரவி வரும் நிலையில், இலங்கையில் அதன் தாக்கத்தை கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய கட்டுநாயக்க விமான நிலையம் உட்பட நாட்டிலுள்ள விமான நிலையங்கள், துறைமுகங்கள் ஆகியவற்றில் அதிகப்படியான பாதுகாப்பு நடவடிக்கைகள்

06

## ஜனாதிபதித் தேர்தல்; கண்காணிப்பு பணியில் ஐரோப்பிய ஒன்றியம்



ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக, இலங்கைக்கான தமது தேர்தல் கண்காணிப்புக் குழுவின் பிரதானியாக ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் நாச்சோ சான்செஸ் அமோரை (Nacho Sanchez Amor) ஐரோப்பிய ஒன்றியம் நியமித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பைத் தொடர்ந்து, எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித்

06

## அநுராதபுரம் ஐ.தே.க அமைப்பாளராக இஷாக்



அநுராதபுரம் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று (19) இதற்கான கடிதத்தை பாராளுமன்ற உறுப்பினர் பெற்றுக்கொண்டார். அநுராதபுரம் மாவட்ட

06

## தினமும் 1000 கடவுச்சீட்டுகள் விநியோகிக்க நடவடிக்கை

### திணைக்கள கட்டுப்பாட்டாளர் தெரிவிப்பு



கடவுச்சீட்டு விநியோகத்தில் தற்போது நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளமையால், நாளாந்தம் 1000 கடவுச்சீட்டுகளை வழங்க

06

## தமிழர் ஒற்றுமையாக வாக்களிக்க வேண்டும்

### தமிழ் பொதுவேட்பாளர் கோரிக்கை



முல்லைத்தீவு நிருபர்

இணைந்த வடகிழக்கில் தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதற்காகத் தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாக்களிக்க வேண்டும் என தமிழ்த் தேசிய பொது

06

## தேர்தல் கடமைகளில் 2,25,000 அரச ஊழியர்கள்

### 13,000 வாக்களிப்பு நிலையங்களில் கடமை



எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான அரச ஊழியர்கள் கடமையில்

06

## நிறைவேற்று அதிகார முறை முற்றாக ஒழிக்கப்படும்

### ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச சூளுரை



தனக்கு பட்டம் பதவிகளில் ஆசைகள் இல்லாத காரணத்தினால், தான் அதிகாரத்திற்கு வந்தவுடனே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாது செய்து பாராளுமன்றத்தை மையமாகக் கொண்ட ஜனநாயக ஆட்சி முறையை உருவாக்குவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

06

## முஸ்லிம்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் தீவிர அக்கறை

### ரணில் ஜனாதிபதியாவது உறுதி



இலங்கையில் 6 முறை பிரதமராகவும், ஒருமுறை ஜனாதிபதியாகவும் இருந்து அனுபவமும், அறிவும் உள்ள ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைவது உறுதியாகும் என முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஐக்கிய மக்கள் சக்தி மூலம், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் 14 பேர் தற்போது ரணில் விக்கிரமசிங்கவுடன் உள்ளனர்.

06

## சுப்பிரமணியன் சுவாமி நாமலுக்கு வரவேற்பு

### மஹிந்த ராஜபக்ஷவுக்கும் புகழாரம்



ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியுள்ள நாமலின் வருகை வரவேற்கத்தக்கது என இந்தியாவின் முன்னாள் அமைச்சர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார். ராஜபக்ஷவின் பாரம்பரியத்தை இந்தியா

06

## ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்கும் விஜயகலா மகேஸ்வரன்

### வடக்கில் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபாடு




ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தீர்மானித்துள்ளார். அதற்கமைவாக நேற்று முன்தினம் (18) யாழ்ப்பாணத்தில் பிரசாரத்தை அவர் ஆரம்பித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்கள் தன்னிடம் ஆதரவைக் கோரியிருந்த போதிலும், இம்முறை ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்க

06

# நகர்வலம்



## ஜனாதிபதி வேட்பாளர்களும் சின்னங்களும்

அட்டவணை

| வாக்குச் சீட்டில் காட்டப்பட்டுள்ளவாறு வேட்பாளரின் பெயர் | சின்னம் |
|---|---|
| அக்மீமன தயாரதன தேரர் | கரும்பலகை |
| அபூபக்கர் முஹம்மது இன்பாஸ் | இரட்டை இலைகள் |
| சிறிபால அமரசிங்க | ரயர் |
| ஐதுரூஸ் முஹம்மது இல்யாஸ் | மருந்தேற்றல் குழல் |
| கே.கே. பியதாச | கணிப்பான் |
| சரத் கீர்த்திரத்ன | கைப்பந்து |
| கே.ஏ. குணரத்ன | புத்தகம் |
| கே.ஆர். கிரிஷான் | திருகுழாய் |
| பள்ளிமுல்ல கட்டுகமகே அநுர சிட்னி ஜயரத்ன | பலாப்பழம் |
| திலித் ஜயவீர | நட்சத்திரம் |
| சிறிதுங்க ஜயசூரிய | முச்சக்கர வண்டி |
| லலித் த சில்வா | வாழைப்பழச் சீப்பு |
| அஜந்த த சொய்ஸா | அன்னாசி |
| அநுர குமார திசாநாயக்க | திசைகாட்டி |
| மஹிந்த தேவகே | பலூன் |
| அரியநேத்திரன் பாக்கியசெல்வம் | சங்கு |
| விக்டர் பெரேரா | மோட்டார் சைக்கிள் |
| அனுருத்த பொல்கம்பல | குதிரை லாடம் |
| சஜித் பிரேமதாச | தொலைபேசி |
| சரத் பொன்சேகா | லாந்தர் |
| திசாநாயக்க முதியன்சேலாகே பண்டாரநாயக்க | மேசை மின்விசிறி |
| சரத் பண்டாரநாயக்க | தேங்காய் |
| பத்தரமுல்லே சீலரதன தேரர் | உழவு இயந்திரம் |
| நுவன் போபகே | குடை |
| சரத் மனமேந்திர | வில்லும் அம்பும் |
| பேமசிறி மானகே | மூக்குக் கண்ணாடி |
| அனுருத்த ரொஷான் ரணசிங்க | கிரிக்கட் மட்டை |
| ஜனக ரத்நாயக்க | கோப்பை |
| நாமல் ராஜபக்ச | கதை உறை |
| நாமல் ராஜபக்ச | மலர் மொட்டு |
| விஜயதாச ராஜபக்ஷ | மோட்டார் கார் |
| ஏ.எஸ்.பீ. லியனகே | கங்காரு |
| கீர்த்தி விக்கிரமரத்ன | கொடி |
| பிரியந்த விக்ரமசிங்க | மேசை |
| ரணில் விக்ரமசிங்ஹ | எரிவாயு சிலிண்டர் |
| பாணி விஜேசிறிவர்தன | கத்தரிக்கோல் |
| ஓஷல ஹேரத் | உண்டியல் |

## இஸ்லாமிய மார்க்கச் சொற்பொழிவு






**பேருவளை விசேட நிருபர்**

இஸ்லாமிய சிந்தனைகளும் நவீன சவால்களும் என்ற தலைப்பில் மாபெரும் இஸ்லாமிய மார்க்கச் சொற்பொழிவு நிகழ்வொன்று பேருவளை காலி வீதி ஸிமிச் (ZMICH) வரவேற்பு மண்டபத்தில் நேற்று முன்தினம் (18) நடைபெற்றது.

கட்டார் ஹம்மாத் பின் கலீபா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழக மத ஒப்பாய்வுத்துறை மற்றும் இஸ்லாமிய கற்கைநெறித்துறை பேராசிரியர் கலாநிதி தீன் முஹம்மத் (அல்அஸ்ஹரி) விசேட பேச்சாளராக கலந்து கொண்டார்.

பேராசிரியர் கலாநிதி தீன் முஹம்மத் (அல் அஸ்ஹரி) இஸ்லாமிய தஹ்வா பிரசாரப் பணிக்காக ஆற்றும் மாபெரும் சேவைகளுக்காக சங்கைக்குரிய அஷ் செய்ஹ் அப்துல் ரஸ்ஸாக் ஆலீம், சங்கைக்குரிய அஷ் செய்ஹ் அப்துர் ரஹீம் ஆலிம்,மௌலவி ஏ.ஸி.ஏ.ஏ.ஸஹில் (அல்அஸ்ஹரி) அப்துல் ஹாதி முஹம்மத் இஜ்லான் ஹாஜியார் ஆகியோர் இந்த நிகழ்வில் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

அத்தோடு சாதனைகளையும் பல்வேறு முக்கிய அடைவுகளையும் அடைந்த மார்க்க அறிஞர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யமன் ஹளரமௌத் தாருல் முஸ்தபா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் ஷரீஆத் துறையில் கற்கைநெறியைப் பூர்த்தி செய்துள்ள அஷ் செய்ஹ் அப்துல் காதர் ஆலிம் பின் அஷ் செய்ஹ் அப்துல் முஹீஸ் ஆலிம் (யமனி), அஷ் செய்ஹ் முஹம்மத் இஸ்மாயில் ஆலிம் பின் அஷ் செய்ஹ் அப்துஸ் ஸமி ஆலிம் (யமனி), அஷ் செய்ஹ் அப்துல் காதர் ஆலிம் பின் முஹம்மத் முஸ்தபா (யமனி), அஷ் செய்ஹ் முஹம்மத் இஸ்மாயில் ஆலிம் அப்துல் ரஷீத் (யமனி), மற்றும் யமன் ஹளரமௌத் ரிபாத் அல் இமாம் முஹாஜிர், இஸ்லாமிய கற்கை நிலையத்தில் இஸ்லாமிய ஷரீஆ துறை கற்கையை பூர்த்தி செய்துள்ள அஷ் செய்ஹ் இஸ்மாயில் ஆலிம் அஹமத் (யமனி) ஆகியோரே இவ்வாறு கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

பேராசிரியர் தீன் முஹம்மதின் உரையின் பின்னர் கேள்வி பதில் நிகழ்ச்சியும் இடம்பெற்றது.சீனன் கோட்டை ஜாமியத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட பணிப்பாளர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.ஜே.எம். பஸ்லான் (அஷ்ரபி பீ.ஏ.) இதனை நெறிப்படுத்தினார். பேராசிரியர் கேள்விகளுக்கு சிறந்த முறையில் பதிலளித்தார். சங்கைக்குரிய அஷ் செய்ஹ் ஸக்கி அஹமத் பின் அஷ் செய்ஹ் காலிப் அலவி ஹாஜியார் அலவியதுல் காதிரி நன்றியுரை நிகழ்த்தினார். சீனன் கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத் ஆசிகுர் ரஸூல் குழுவினரின் கஸீதா இடம் பெற்றதோடு காரி மௌலவி எம்.எஸ்.எம்.ரஸீன் (கபூரிஜமாலி)யின் கிராஅத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. மௌலவி ஏ.ஸி.ஏ.ஏ.ஸஹில் (அல்அஸ்ஹரி) தலைமையிலான குழுவினர் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

## பேருவளையில் 'புலுவன் ஸ்ரீலங்கா' இளைஞர் மாநாடு




பியால் நிஷாந்த இளைஞர் அறக்கட்டளை அமைப்பு "புலுவன் ஸ்ரீலங்கா" என்ற தொனிப்பொருளின் கீழ் நடாத்திய பேருவளை இளைஞர் மாநாடு அதன் தலைவர் தரிது நிஷாந்த டி சில்வா தலைமையில் (18) அளுத்கம டச்சு கேட் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிதிகளாக அமைச்சர்களான விதுர விக்கிரமநாயக்க, இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த மற்றும் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார, பாராளுமன்ற உறுப்பினர்களான மிலன் ஜயதிலக, மொஹமட் முசம்மில், மதுர விதான உட்பட மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் என பெருந்திரளான இளைஞர், யுவதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

## காட்டு யானைகள் கணக்கெடுக்கும் பணி ஆரம்பம்

திறப்பனை தினகரன் நிருபர்

நாடு முழுவதுமான காட்டு யானைகள் கணக்கெடுக்கும் பணியொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. காட்டு யானைகளைப் பாதுகாப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் இந்த கணக்கெடுப்பு நடத்தப்படுகின்றது.

கடந்த 2011ம் ஆண்டு காலப்பிரிவில் இலங்கையில் யானைகள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன் பிரகாரம் இந் நாட்டு காடுகளில் 5879 காட்டு யானைகள் வாழ்வதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் கணக்கெடுப்புக்கு அமைய அநுராதபுரம் வனவிலங்கு வலயத்தில் இருந்து 1310 அதிகாரிகள் கணக்கெடுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் வலயத்திற்குப் பொறுப்பான வனஜீவராசிகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கீர்த்தி சந்திரரத்ன தெரிவித்தார். அதன்படி அநுராதபுரம் பிராந்தியத்தில் 623 இடங்களில் அதிகாரிகளை வைத்து கணக்கெடுப்பு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 'கதிர்காமத் திருமுருகன்' நூல் வெளியீட்டு விழா பழனியில்




பதுளை சமத்துவ சங்க ஸ்தாபகர் வி. ஞானபண்டிதன் 1940 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட 'கதிர்காமத் திருமுருகன்' என்ற நூலின் எட்டாவது பதிப்பு தமிழ் நாடு பழனியில் இம் மாதம் 24 25 ஆம் திகதிகளில் நடைபெறும் முத்தமிழ் முருகன் சர்வதேச மகாநாட்டில் (2024) வெளியிடப்படவுள்ளது. கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் நூலின் முதற்பிரதியைப் பெற்று வெளியிட்டு வைப்பார்.

பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுதர்சன் செல்லத்துரையின் காத்திரமான அணிந்துரையுடன் கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளை சார்பில் எச்.எச். விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் இந்து சமய வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றிய ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய அறங்காவலர்களான அமரர்கள் தேசபந்து வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை, க.சி.சிவசங்கரன் பிள்ளை, ஏ.எஸ்.எஸ். சோமசுந்தரம் பிள்ளை, ஜி.எஸ். விஸ்வநாதபிள்ளை இன்றும் சமூக சமய பணிகளை ஆற்றி வரும் கே. சௌந்தரராஜன் ஆகியோருக்கு இந்த புனித நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற ஓய்வுபெற்ற உரைபெயர்ப்பாளர் காலமானார்



பாராளுமன்றத்தின் ஓய்வு பெற்ற சிரேஷ்ட உரைபெயர்ப்பாளரும், ஓய்வு பெற்ற ஆசிரியருமான எம். எம். ராசிக் (வயது 84) சனியன்று இரவு காலமானார். அன்னாரின் ஜனாஸா தெஹிவளை ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நேற்று முன்தினம் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரின் ஜனாஸா நல்லடக்கத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம் பௌஸி, ரவூப் ஹக்கீம், இம்தியாஸ் பாகீர் மாக்கார் உட்பட பாராளுமன்ற உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். ஹெம்மாத்தகம, ஹிஜ்ராகமவை சேர்ந்த இவர், ஹெம்மாத்தகமவின் முதலாவது ஆசிரியரான மர்ஹூம் முபாரக்கின் மகனாவார். நான்கு பிள்ளைகளின் தந்தையான மர்ஹூம் ராசிக், 'ஹெம்மாதகம முஸ்லிம்களின் வாழ்வும் வரலாறும்' என்ற ஆய்வு நூலை எழுதி வெளியிட்டுள்ளதோடு சிங்கள மொழி நூல்கள் பலவற்றை தமிழ்மொழிக்கும் மொழிபெயர்த்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மலையக சிறுகதை போட்டி முடிவு திகதி நீடிப்பு




மலையக எழுத்தாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மலையக சிறுகதை போட்டிக்கான முடிவுத் திகதி செப்டம்பர் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இளைய தலைமுறையினரிடம் வாசிப்பையும் எழுத்தாற்றலையும் மேம்படுத்தும் முகமாக அவுஸ்திரேலிய எழுத்தாளர் சங்கம் மலையக சிறுகதை முன்னோடிகளும் மலைநாட்டு எழுத்தாளர் மன்ற முன்னாள் தலைவர்களுமான அமரர் என்.எஸ். எம் ராமையா, எஸ். திருச்செந்தூரன் ஆகியோர் நினைவாக மலையக சிறுகதை போட்டி நடத்தப்படுகிறது.

இதில் இலங்கையின் எப்பகுதியிலும் வாழ்பவர்கள் கலந்து கொள்ள முடியும். ஆனால் மலையக மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்ட கதைகளே போட்டியில் தெரிவு செய்யப்படும்.

இப்போட்டி தொடர்பாக அவுஸ்திரேலிய எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும் முன்னணி எழுத்தாளருமான மாத்தளை சோமு கருத்து தெரிவிக்கையில்,

கைபேசியின் ஆதிக்கத்தால் உலகம் முழுவதும் இளைய தலைமுறையினர் அதன் உள்ளே ஆழ்ந்து கிடக்கின்றனர். நூல் வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. இந்நிலை மாற மூத்தோரும் அமைப்புகளும் அக்கறை காட்ட வேண்டும். ஆகவே நாங்கள் மலையக சிறுகதைப் போட்டியை நடத்த முனைந்துள்ளோம்.

மொத்த பரிசு தொகை இரண்டு இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதற் பரிசு 80,000 ரூபா, இரண்டாம் பரிசு 40,000 ரூபா, மூன்றாம் பரிசு 20,000 ரூபா, 5000 ரூபா வீதம் 12 பரிசுகள் வழங்கப்படும்.

இம்முயற்சிக்கு சிட்னி வாழ் தமிழ் அன்பர்கள், பிரதேசம் கடந்து ஆதரவு வழங்கியுள்ளனர்.

மலையக மக்கள் இலங்கையில் 200 ஆண்டு கால வரலாற்றைக் கொண்டமையால் அதன் இலக்கியம் காலத்திற்கு காலம் தட்டி எழுப்பப் பட வேண்டும்.

அதன் அடிப்படையில் இந்த சிறுகதை போட்டி நடைபெறுகிறது. இதன் மூலம் அடுத்த தலைமுறைக்கான எழுத்தாளர்களை உருவாக்குவதே எமது நோக்கமாகும். பரிசளிப்பு விழா கொழும்பில் நடைபெறும். பரிசு பெறும் பன்னிரண்டு கதைகளை ஒன்றாக தொகுத்து நூலாக வெளியிட இருக்கின்றோம் என்றார்.மலையக சிறுகதைப் போட்டியை சிறப்புற நடத்த பேராசிரியர் மு. நித்தியானந்தம் ஆதரவு வழங்கி வருகின்றார். மலையக நூல்களின் பதிப்பாசிரியர் எச்.எச். விக்கிரமசிங்க போட்டி இணைப்பாளராக பணியாற்றுகிறார்.

சிறுகதை எட்டு பக்கங்களுக்குள் கணினி தட்டச்சு 12 அளவில் யுனிகோட் சொற்களில் இருக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய மின்னஞ்சல்
ausawriter@gmail.com
hendry220649@gmail.com

## சீனன் கோட்டையில் ஆத்மீக ஞானி செய்குனா அப்பா (ரஹ்) அவர்களின் ஞாபகர்த்த மஜ்லிஸ்

**பேருவளை பீ.எம். முக்தார்**

தென்னிந்தியா, முத்துப்பேட்டையைச் சேர்ந்த ஆத்மீக ஞானி மர்ஹூம் மௌலானா மௌலவி அல்ஹாஜ் அஹம்மது லெப்பை ஆலிம் (ரஹ்) அவர்களின் ஞாபகார்த்தமாக வருடாந்த கத்தமுல் குர்ஆன் தமாம் மஜ்லிஸ் பேருவளை சீனன்கோட்டை பிட்டவளை மிர்அதுஷ் ஷாதுலியா ஸாவியாவில் எதிர்வரும் 21.08.2024 மாலை சீனன் கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர் கலீபதுஷ் ஷாதுலி அஷ் ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி)யின் வலிகாட்டலின் கீ;ழ் கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி எம்.எம். செய்னுல் ஆப்தீன் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறும்.

அன்றைய தினம் அஸர் தொழுகையின் பின்னர் கத்தமுல் குர்ஆன் மஜ்லிஸ் ஆரம்பமாகும்.

மஃரிப் தொழுகையின் பின்னர் வலீபா யாகூத்தியாவும் இஷாத் தொழுகையின் பின்னர் ஹழரா (திக்ர்) மஜ்லிஸூம் அதனைத் தொடர்ந்தும் முஸாக்கராவும் இடம்பெறும். கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி எம்.எம். செய்னுல் ஆப்தீன் (பஹ்ஜி) விஷேட சொற்பொழிவாற்றுவார்.

## வாஹல்கட விபத்தில் இளம் குடும்பஸ்தர் பலி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

வாஹல்கட பொலிஸ் பகுதிக்குட்பட்ட வெலிவெவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்துள்ளவர் பதவிய நகரிலிருந்து கஹட்டகொல்லாவ அவரது வீட்டுக்கு மோட்டார் சைக்கிள் சென்று கொண்டிருக்கும் போது வீதியின் குறுக்கே வயிற்றில் கன்றை சுமந்திருந்த எருமை மாடு ஒன்றின் மீது மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. அயலவர்கள் இணைந்து காயமடைந்தவரை வவுனியா வைத்தியசாலையில் சேர்த்தனர். இதில் 23 வயது திருமணமான இளம் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.குறித்த விபத்தின் போது கன்றை வைற்றில் சுமந்திருந்த எருமை மாடு சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

# USA விபத்தில் தமிழ் குடும்பத்தில் மூவர் பலி

## வீட்டிலிருந்த சிறுவன் உயிர் தப்பினார்



அமெரிக்காவின் (US) டெக்சாஸ் மாகாணத்தில் இடம்பெற்ற கார் விபத்தில் தமிழ் குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலியாகியுள்ளனர்.

வடக்கு டெக்சாஸில் அமைந்துள்ள கல்லூரி ஒன்றில் தனது மகளுடன் புறப்பட்ட அரவிந்த் மற்றும் பிரதீபா என்ற தம்பதியினர் பயணித்த காரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த காரின் மீது மற்றொரு வாகனம் மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், சம்பவத்தின் போது, தமிழ் குடும்பம் பயணித்த காரில் இருந்தவர்கள் மற்றும் மற்றைய வாகன ஓட்டுநர் உட்பட மொத்தம் ஐவர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதேவேளை, அதே குடும்பத்தை சேர்ந்த 14 வயதுடைய சிறுவன் காரில் பயணிக்காத நிலையில் விபத்தில் சிக்காமல் உயிர் தப்பியுள்ளார். இருப்பினும், சிறுவனின் எதிர்காலம் கருதி பொதுமக்களிடம் இருந்து நிதி திரட்ட முடிவு செய்து அதிகாரிகளால் அறிவிப்பு ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இதுவரை 700,000 அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக திரட்டப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி மாளிகையை பார்வையிட்ட சுமார் 35,000 பாடசாலை மாணவர்கள்



கடந்த இரண்டு வருடங்களில் சுமார் முப்பத்தைந்தாயிரம் பாடசாலை மாணவர்களுக்கு கொழும்பை சுற்றியுள்ள ஜனாதிபதி மாளிகை, பழைய பாராளுமன்ற கட்டடத்திலுள்ள ஜனாதிபதி அலுவலகம், துறைமுக நகரம், மத்திய வங்கி, பாராளுமன்றம் மற்றும் தாமரை கோபுரம் உட்பட கல்விக்கு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பார்வையிடும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலின் கீழ் இலங்கை பாராளுமன்றம், கல்வி அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்து, ஜனாதிபதி அலுவலகத்தின் முப்படைகளின் ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் தலைமையில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது

இலங்கை பாராளுமன்றம், கல்வி அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து செயற்படுத்தப்பட்டது. வரலாற்றில் முதல் தடவையாக இவ்வளவு அதிகமான மாணவர்கள் குழுவிற்கு இந்த அரிய சந்தர்ப்பம் கிடைத்தது.

இந்தக் களப்பயணத்தின் போது, இலங்கையின் ஜனநாயக வரலாற்றின் பல்வேறு மைல்கற்கள், வரலாற்றுத் தகவல்கள் அடங்கிய அறிக்கைகள் மற்றும் விசேடமான நினைவுச் சின்னங்கள் போன்றவற்றைப் பார்வையிட மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க ஆகியோருடன் கலந்துரையாடும் வாய்ப்பும் இதன்போது கிடைத்தது.

06

# ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 631 முறைப்பாடுகள்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி வரை) 631 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 346 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 261 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 23 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

### வடக்கு ஆளுநர் சார்ள்ஸின் கோரிக்கைக்கு அமைய

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அரசு ரூ. 100 மில். நிதி ஒதுக்கீடு



வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கைக்கு அமைய, மத்திய சுகாதார அமைச்சினால் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சுமார் 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் காணப்படும் அவசர தேவைகள் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் எடுத்து கூறியதற்கு அமைய மத்திய சுகாதார அமைச்சுக்கு, ஆளுநரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதற்கமைய, சுமார் நூறு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியின் ஊடாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கான 500 KW வலுவுடைய மின்பிறப்பாக்கி பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது. அத்துடன் வைத்தியசாலை ஊழியர்களுக்கான விடுதி புனரமைப்பு மற்றும் உள்ளக நடைபாதை புனரமைப்பு ஆகிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# கலைஞர் கருணாநிதிக்கு ரூ.100 நாணயம் வெளியீடு

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

சென்னையில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடந்த விழாவில், முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு நாணயத்தை மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட, முதல்வர் ஸ்டாலின் பெற்றுக் கொண்டார்.

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு, அவரது உருவம் பொறிக்கப்பட்டு, 'தமிழ் வெல்லும்'. என்ற வாசகத்துடன் ரூ.100 மதிப்புள்ள நாணயம் அச்சிடப்பட்டுள்ளது.



இந்த நாணயம் வெளியீட்டு விழா சென்னை கலைவாணர் அரங்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.


ST&IS SINCE 1892
softlogic Finance

சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி
மாபெரும் வாகன ஏலவிற்பனை

28 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்கள்
2024 ஆகஸ்ட் 23 வெள்ளிக்கிழமை
இல. 463, கண்டி வீதி, களனி
என்ற முகவரியில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

| | | |
|---|---|---|
| **கார்கள்:** | | |
| CAA-0XXX | டொயோட்டா DAA-NHP10 | 2012 |
| KK -0XXX | ஜகுவார் XJL | 2010 |
| KE -2XXX | செர்ரி QQ | 2006 |
| JK -5XXX | டொயோட்டா கேம்ரி | 2004 |
| GS -1XXX | மிட்ஷுபிஷி கலன்ட் | 2001 |
| 65 -2XXX | நிசான் SU14 | 1998 |
| 302-0XXX | சுசூகி கல்டாஸ் | 1997 |
| 65-8XXX | நிசான் BLUE BIRD | 1997 |
| 64 -1XXX | இசுசு ஜெமினி | 1989 |
| **வேன்:** | | |
| GS-8XXX | மிட்ஷுபிஷி DELICA | 997 |
| **பஸ்:** | | |
| NE -1XXX | மிட்ஷுபிஷி SKG-BE640J ரோசா | 2012 |
| **முச்சக்கர வண்டிகள்:** | | |
| AAY-4XXX | TVS கிங் | 2015 |
| QT -3XXX | பஜாஜ் 4 S | 2009 |

| | | |
|---|---|---|
| **லொறிகள்:** | | |
| DAB-5XXX | டாட்டா 207 FX பிக் அப் | 2015 |
| LO-9XXX | இசுசு TPG-NPR85AN எல்ப் | 2015 |
| LL -3XXX | எல்ச்சர் 11-12 டிரக் | 2014 |
| PV -7XXX | மஹின்ட்ரா மெக்ஸிமோ பிளஸ் | 2013 |
| PV -8XXX | DFSK EQ1020DR | 2013 |
| PT-2XXX | மஹின்ட்ரா மெக்ஸிமோ | 2012 |
| PS -6XXX | டாட்டா 207DI | 2012 |
| LG -5XXX | டாட்டா - LPT 709E | 2007 |
| LA -3XXX | இசுசு டம்ப் டிரக் | 2000 |
| 47 -6XXX | டாட்டா -1313 | 1995 |
| 47 -3XXX | மஸ்டா டைட்டன் | 1990 |
| **மோட்டார் சைக்கிள்கள்:** | | |
| BIG-0XXX | யமஹா ரே ZR | 2019 |
| BHV-6XXX | ஹீரோ மெஸ்ட்ரோ | 2018 |
| BGT-5XXX | மஹின்ட்ரா | 2018 |
| BHE-1XXX | மஹின்ட்ரா கஸ்ட்ரோ | 2017 |

பார்வையிடல் - ஏலவிற்பனை நிலையத்தில்
2024 ஆகஸ்ட் 21 புதன் மற்றும் 22 வியாழன் ஆகிய தினங்களில்
(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)

விற்பனை நிபந்தனைகள்
- **நுழைவு** : ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- **கொடுப்பனவுகள்** : விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் **2024 ஆகஸ்ட் 27ஆந் திகதி செவ்வாய்க்கிழமை** பி.ப 3.00 மணிக்கு முன்னர், இல. 305B, நாவல வீதி, நாவல என்ற முகவரியில் அமைந்துள்ள சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்பட வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாரர் / சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி யின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்
CELEBRATING 132 Years
011 2671468
www.sandslanka.com


# ஜனாதிபதியின் ஆலோசகராக ஹரினுக்கு புதிய பதவி



ஜனாதிபதியின் விசேட ஆலோசகராக முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். அரசியலமைப்பின் 41 (1) பிரிவின் கீழ் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலா, காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் தொடர்பான ஜனாதிபதியின் விசேட ஆலோசகராக முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளதாக அவருக்குக் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் பொது வேட்பாளருக்கு தமிழரசுக்கட்சி தடை விதிப்பு

## இரு வாரங்களில் விளக்கமளிக்க அவகாசம்



தமிழ் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள அரியநேத்திரனுக்கு தமிழரசுக்கட்சி தடை விதித்துள்ளதோடு இரண்டு வார கால அவகாசம் கொடுத்து கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. அதுவரை கட்சிக் கூட்டங்களிலும் பங்கேற்க தடைவிதித்துள்ளதாகவும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் (18) இடம்பெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பிரதான வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எமது அடிப்படை நிலைப்பாடு வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஆகும்.

மூன்று பிரதான வேட்பாளர்களுடனும் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பாகவும், பேசிய விடயங்களையும் கூட்டத்தில் தெரியப்படுத்தினோம். சில முன்னேற்றகரமான கருத்துக்களை அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அவர்களது தேர்தல் அறிக்கை வெளிவந்த பின்னரே எமது இறுதி முடிவு எடுக்கப்படும். நாமல் ராஜபக்ஷ என்னுடைய வீட்டிற்கு வந்து சந்தித்து இருந்தார். அவர்களிடம் உள்ள விடயங்களை தெரியப்படுத்தினார்.

அது அதி தீவிர சிங்கள வாக்குகளை பெற்றுக் கொள்வதை நோக்கமாக கொண்டிருந்தது. அதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் கலந்துரையாடியிருந்தோம். தற்போது தெற்கில் சிங்கள பௌத்த பேரினவாதம் தலைத்தூக்காமல் உள்ளது.

அது தொடர்பில் கலந்துரையாடினோம். எமது மக்களை வழிகாட்டுவதற்காக நாங்கள் ஆவணம் ஒன்றை தயாரிக்கவுள்ளோம். அதற்கான சிறு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. தெளிவாக மக்களை வழிப்படுத்துவற்காக தேர்தலுக்கு முன்பாக நாங்கள் ஆவணம் ஒன்றை தெளிவாக வழங்கவுள்ளோம்.

தமிழ் பொது வேட்பாளராக வர்ணிக்கப்பட்டுள்ள அரியநேந்திரன் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. சென்ற கூட்ட தீர்மானத்தின் படி விளக்கம் கோரி இரண்டு வார கால அவகாசம் கொடுத்து அவருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்குரிய பதில் கிடைத்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுப்போம்.

அதுவரைக்கும் எமது கட்சியின் எந்தக் கூட்டத்திலும் அவர் கலந்து கொள்ள மாட்டார். அந்தப் பின்னணியில் எதிர்வரும் நாட்களில் இடம்பெறும் பிரசாரக் கூட்டங்கள் தொடர்பில் கேள்விகள் எழுந்துள்ளன என குறிப்பிட்டார்.

# இந்திய யுவதி மீது துஷ்பிரயோகம்: கடற்படை முகாமின் தளபதி கைது

பம்பலப்பிட்டி டூப்ளிகேஷன் வீதியிலுள்ள இரவு விடுதியில் இந்திய யுவதி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் கடற்படையின் ரங்கலா முகாமின் தளபதி ஒருவர் கைது செய்யப்பட்டதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஜூன் மாதம் 20ஆம் திகதி இலங்கை தோழி ஒருவருடன் இரவு விடுதிக்கு வந்த இந்திய யுவதி மதுபானம் அருந்திக் கொண்டிருந்த போது சந்தேக நபரான தளபதி பின்னால் வந்து பாலியல் சேஷ்டை செய்ததாக பம்பலப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

துஷ்பிரயோகத்தை மேற்கொண்ட கமாண்டர் இரவு விடுதியிலிருந்து வேறு சிலருடன் காரில் சென்றதாகவும் அந்த கார் கடற்படை வாகனத்துக்குரிய பதிவு எண்ணைக் கொண்டதாகவும் இந்திய யுவதி முறைப்பாடு செய்துள்ளார்.

பம்பலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கையர்களுடன் சொகுசு படகு மூழ்கியது

## ஏழு பேரைக் காணவில்லை



இத்தாலியின் சிசிலி தீவில் வீசிய சூறாவளியில் 180 அடி உயர சொகுசு படகு ஒன்று நீரில் மூழ்கியுள்ளது. இந்த பயணிகள் படகில் 22 பேர் பயணித்துள்ளனர். இலங்கை ,பிரித்தானிய பிரஜைகள், நியூசிலாந்து, அயர்லாந்து மற்றும் இரட்டை பிரஜாவுரிமை கொண்ட பிரித்தானிய பிரஜைகள் மற்றும் இரண்டு பிரெஞ்சு பிரஜைகள் பயணித்துள்ளனர் என்று வெளிநாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அவர்களில் நான்கு பிரிட்டன் மற்றும் இரண்டு அமெரிக்கர்கள் உட்பட ஏழு பேரைக் காணவில்லை என ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
குரோதி வருடம் ஆவணி மாதம் 03ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 14

## குறள் தரும் சிந்தனை



பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்

பிறன் மனைவியிடத்து விருப்பம் கொள்ளும் அறியாமை, உலகில் அறநூல்களையும் பொருள் நூல்களையும் ஆராய்ந்து உணர்ந்தவர்களிடம் இல்லை.

# மற்றொரு அச்சுறுத்தலாக உருவெடுக்கும் குரங்கம்மை!

இன்றைய காலகட்டத்தில் உலகளாவிய கவனத்தை ஈர்த்த நோயாக குரங்கம்மை மாறியுள்ளது. ஆபிரிக்கா கண்டத்தின் கொங்கோ குடியரசில் தோற்றம் பெற்ற இந்நோய் அந்தக் கண்டத்தின் பல நாடுகளிலும் பதிவாகியுள்ளது. அத்தோடு அந்தக் கண்டத்திற்கு வெளியே பதிவாகக் கூடிய நோயாகவும் குரங்கம்மை விளங்குகிறது. இந்நோயின் மூலகாரணியாக விளங்கும் வைரஸில் அண்மையில் ஏற்பட்டுள்ள திரிபு இதற்கு பெரிதும் பங்களித்திருப்பதாக நம்பப்படுகிறது.

இந்த நிலையில் குரங்கம்மை நோயின் பரவுதல் மற்றும் தாக்கங்கள் குறித்து கவனம் செலுத்திய உலக சுகாதார ஸ்தாபனம் இதனை உலகளாவிய பொதுச் சுகாதார அவசர நிலையாக அறிவித்திருக்கிறது.

கொங்கோ குடியரசில் இந்நோயினால் அதிகளவிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு நில்லாது கொங்கோவுக்கு வெளியே புருண்டி, மத்திய ஆபிரிக்க குடியரசு, கென்யா, ருவண்டா ஆகிய நாடுகளிலும் இந்நோய்க்கு உள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும் ஆபிரிக்கக் கண்டத்திற்கு வெளியே சுவீடனிலும், பாகிஸ்தானிலும் கூட இந்நோய்க்கு உள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

2019 ஆண்டின் இறுதிப்பகுதியில் சீனாவின் வூஹானில் தோற்றம் பெற்ற கொவிட் 19 பெருந்தொற்று போன்று குரங்கம்மை தீவிரமடைய இடமளிக்கக் கூடாது என்பதில் உலகம் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளது. அந்தத் தொற்று காரணமாக உலகம் இழந்தவை கொஞ்சநஞ்சமல்ல. பல நாடுகளின் பொருளாதாரங்கள் அதல பாதாளத்தில் விழுந்தன. அவ்வாறான பாதிப்புக்கு உள்ளான நாடுகள் பல இன்னும் முழுமையான பொருளாதார மீட்சியைப் பெற்றுக் கொண்டதாக இல்லை.

அதற்கிடையில் குரங்கம்மை பரவுவது எவ்விதத்திலும் சாதக நிலையை அளிக்கப் போவதில்லை. அதன் காரணத்தினால் உலக சுகாதார ஸ்தாபனமும் உலக நாடுகளும் குரங்கம்மையைக் கட்டுப்படுத்தி தவிர்ப்பதில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளன

இந்த நிலையில் இலங்கையின் விஷேட மருத்துவ நிபுணர் சமல் சஞ்ஜீவ, உல்லாசப் பயணிகள் ஊடாக குரங்கம்மை நோய் நாட்டுக்குள் வந்து சேரக் கூடிய அச்சுறுத்தல் நிலவுவதாக குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் உலக சுகாதார ஸ்தாபனம் குரங்கம்மை குறித்த உலகளாவிய பொதுசுகாதார அவசரநிலையை அறிவித்ததைத் தொடர்ந்து இலங்கையின் சுகாதாரத் துறையும் இந்நோய் தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளது. குறிப்பாக இந்நோயைத் தவிர்த்துக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்களை நாட்டுக்கு அறிமுகப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குரங்கம்மை இலங்கைக்கு உடனடியான அச்சுறுத்தலாக இல்லாத போதிலும், அது நாட்டுக்குள் வந்து சேருவதைத் தவிர்த்துக் கட்டுப்படுத்தும் வகையில் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் விஷேட நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்தும் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தி இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குரங்கம்மையானது ஒரு வைரஸ் நோயாகும். இதன் தொற்றுக்கு உள்ளான ஒருவருடன் மிக நெருக்கமான தொடர்பாடலைப் பேணும் போது இவ்வைரஸ் சுகதேகிக்கு தொற்றும். குறிப்பாக உடலுறவு, தோலுக்கு தோல் தொடர்பு, இத்தொற்றுக்கு உள்ளானவருடன் நெருங்கி பேசுவதும் சுவாசிப்பதும் இதன் தொற்றுக்கு மிகவும் சாதகமான சந்தர்ப்பங்களாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இவ்வாறு இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளான ஒருவருக்கு பலவிதமான அறிகுறிகள் வெளிப்படலாம். அந்த அறிகுறிகள் சிலருக்கு தீவிரமாகவும் இன்னும் சிலருக்கு சாதாரணமாகவும் இருக்கலாம்.

குறிப்பாக காய்ச்சல், தலைவலி, தசைவலி, முதுகுவலி, சோர்வு போன்றவாறானவை இந்நோய்த் தொற்றுக்கான அறிகுறிகளாக இருக்கும். அத்தோடு 2 முதல் 4 வாரங்களுக்கு உடலில் அரிப்பு காணப்படும். தோலில் கொப்புளங்களும் ஏற்படும். அவை புண்களாக மாற முடியும். அவை முகம், உள்ளங்கைகள், உள்ளங்கால்கள், இடுப்பு, பிறப்புறுப்பு மற்றும் குதப் பகுதிகளை பாதிக்கலாம். அத்தோடு இப் புண்கள் வாய், தொண்டை, ஆசனவாய், மலக்குடல் அல்லது கண்களில் கூட காணப்படலாம்.

இவ்வாறான அறிகுறிகளை வெளிப்படுத்தக் கூடிய இந்நோய்க்கு எதிராகப் பயன்படுத்தவென சில தடுப்பூசிகளை உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரை செய்துள்ளது. அதேநேரம் இவ்வைரஸ் தடுப்புக்கென தனியான தடுப்பு மருந்தை உருவாக்குமாறும் அந்த ஸ்தாபனம் வேண்டுகோள் விடுத்து இருப்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அதன் காரணத்தினால் குரங்கம்மை தவிர்ப்பு தொடர்பில் எடுக்கப்படும் முயற்சிகளை சாதாரணமாக நோக்கலாகாது. அந்நோயைத் தவிர்த்துக் கட்டுப்படுத்திக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதற்கேற்ப தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# இணையத்துறையில் புரட்சியை ஏற்படுத்திய ஸ்டார்லிங் இலங்கையிலும் அறிமுகமாகிறது

ஸ்டார்லிங்க் என்பது சைபர் ஸ்பேஸுடன் எங்களை இணைப்பதற்கான சமீபத்திய வழியாகும். உலகில் புரட்சியை ஏற்படுத்திய இந்தச் சேவை இலங்கைக்கும் வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் நிலையில், இவ்விடயம் தொடர்பில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவிடம் விபரங்களை அறிய அதன் பணிப்பாளர் நாயகம் மதுசங்க திஸாநாயக்கவுடன் நடத்திய கலந்துரையாடல் இதுவாகும்.

**கே: கடலுக்கு அடியில் இருந்து வரும் கேபிள் அமைப்பின் மூலம் இணையத்தை அணுக முடிந்துள்ளது. எங்களிடம் 4G முதல் 5G வரையிலான தொழில்நுட்பமும் உள்ளது. நாம் ஏன் செயற்கைக்–கோள்கள் மூலம் இணையத்துடன் இணைய வேண்டும்?**

பதில்: இணையம் என்பது ஒரு சேவை. இந்த இணையத்தை வழங்கும் பல தொழில்நுட்ப முறைகள் உலகில் உள்ளன. இலங்கையில் மொபைல் இணையம் மூலம் இணையத்தை வழங்குகிறோம். அது 2ஜியில் இருந்து 5ஜிக்கு வளர்ந்துள்ளது.ஃபைபர் கேபிள் மூலம் இணைய அணுகலை வழங்குவது மற்றொரு முறை. இது வேகமான சேவையாகும். அந்த இரண்டு முறைகளிலும் தனித்தனியான சிக்கல்கள் உள்ளன. ஏனெனில் மொபைல் முறை கோபுரங்கள் வழியாக வழங்கப்படுவதால், அந்த முறையின் மூலம் 100% பௌதிக 'கவரேஜ்' வழங்க முடிவதில்லை. சில பகுதிகளுக்கு கோபுரங்கள் மூலம் வழங்குவதில் சிக்கல்கள் உள்ளன. மற்றொரு பிரச்சினை என்னவென்றால், இதற்கு அதிக முதலீடு தேவைப்படுகிறது.






மேலும் கோபுரங்களுக்கு மின்சாரம் தேவைப்படுகிறது. தவிர, சுற்றுச்சூழல் வலயங்களில் இந்த கோபுரங்களை நிறுவுவதில் சிக்கல்கள் எழுகின்றன. அதில் அதிக அளவு முதலீடு தேவைப்படுகிறது. சுற்றுச் சூழல் பகுதிகள் என்பதால் அனுமதி பெறுவது கடினம். கோபுரத்தை நிறுவுவது என்றாலும், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை செய்து தருவது கடினமான விஷயம். இதற்காக வனபாதுகாப்பு வலயங்களில் வீதி அமைக்க வேண்டும். இதுபோன்ற இடத்துக்கு மட்டும் பல கிலோ மீட்டர் கம்பிகளை மின்சாரசபை அமைக்க வேண்டியுள்ளது. அதற்கு, காடுகள் அகற்றப்பட வேண்டும். இவ்வளவு செலவில் செய்தாலும், ஒரு சில குடும்பங்களுக்கே சேவை கிடைக்குமென்றால் , இந்த முதலீட்டை ஈடுசெய்ய முடியுமா?

இவ்வாறு சிரமங்களுக்கு மத்தியில், கோபுரங்கள் நிறுவப்பட்டதும் சுற்றுவட்டார மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்குகிறார்கள். அவர்கள் மின்னல் தாக்கம் ஏற்படுமென குற்றம் சாட்டுகிறார்கள். அதற்கு எந்த அடிப்படையும் இல்லை என்றாலும், இதுபோன்ற பிரச்சினைகள் எப்போதும் எழுகின்றன. அதிக முதலீடு ஃபைபர் கேபிள்களுக்கு தேவை. இந்த இரண்டு முறைகளிலும் நாம் இணையதள சேவையை வழங்க முடியாத பகுதிகள் உள்ளன. தற்போது, இலங்கையின் 80% சனத்தொகையை 4G உள்ளடக்கியுள்ளது. ஸ்டார்லிங்க் இ தே போன்ற இணைய வலையமைப்பை வழங்கும் முறை. செயற்கைக்கோள் தொழில்நுட்பம் மூலம் இந்த சேவையை நமக்கு வழங்குகிறது. எங்கள் அலைவரிசைகள் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

**கே: நமது தற்போதைய இணைய அணுகலில் உள்ள குறை–பாடுகளை களைய மட்டுமே ஸ்டார்–லிங்க் சேவை அவசியமா?**

## எலான் மஸ்க் இலங்கைக்கு வருகை தருகிறாரா?

பதில்: இந்தச் சேவை தொடங்கியவுடன், அனைத்து புவியியல் பகுதிக்கும் 100% 'கவரேஜ்' வழங்குவோம். இணைய அணுகலில் இது ஒரு புரட்சிகரமான படியாகும். நமது கடல் எல்லையும் இதன் மூலம் முழுமையாக இணைய வசதிக்குள் உள்ளடக்கப்படும்.

**கே: இந்தச் சேவை உலகிற்கு ஒரு புதிய தொழில்நுட்பமா?**

பதில்: இல்லை. செயற்கைக்கோள் தொழில்நுட்பம் உலகிற்கு புதிதல்ல. இந்த மாதிரி அமைப்பு உலகிற்கு புதிதல்ல. ஆனால் நாம் இப்போது அனுபவிக்கும் இரண்டு அணுகுமுறைகளை விட இது ஒரு பெரிய முதலீடு. இதில் பெரிய அளவில் முதலீடு செய்ய யாரும் முன்வரவில்லை. எலான் மஸ்க் போன்ற பாரிய வர்த்தகர்கள் இந்தத் தொழில்நுட்பத்தை அங்கீகரித்து, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கின்றனர். அதன் மூலம், உலகிற்கு ஒரு புதிய வணிகச் சூழலை உருவாக்கினார்கள். இத்தொழில்நுட்பத்தை உலகுக்கு அறிமுகப்படுத்திய பிறகு, நம் நாட்டிற்கு இணைய வசதியை வழங்க அவர்கள் தனி முதலீடு செய்யத் தேவையில்லை. எங்கள் அனுமதி மற்றும் உரிமம் மட்டுமே தேவைப்பட்டது. அந்த இரண்டையும் பெற்றவுடன், அவர்கள் தங்கள் செயல்பாடுகளைத் தொடங்குவார்கள். எங்கள் பிராந்தியத்தில், இந்தத் தொழில்நுட்பம் தற்போது மாலைதீவில் மட்டுமே காணப்படுகிறது. தீவுகளில் இணையத்தை அணுகுவதில் அவர்களுக்கு உள்ள சிரமங்கள் காரணமாக, இந்த சேவை முதலில் அங்கு நிறுவப்பட்டது. இந்த அணுகுமுறை இன்னும் இந்தியாவில் இல்லை.

**கே: இந்நாட்டில் சில காலமாக புரட்சிகர இணைய வசதி வழங்கப்பட்டு வருவதாக கூறப்படு–கிறது. இலங்கைக்கே உரித்தான செயற்கைக்கோள் மூலம் இவ்–வாறான இணைப்புகள் வழங்கப்–படுகின்றன என்பது எமது முதல் அனுபவம். இரண்டாவது அனு–பவம் கூகுள் பலூன்கள். இவை–யெல்லாம் அரசியல் ஏமாற்று வேலைகளாக மக்கள் மனதில் நிற்கின்றன. இப்போது ஸ்டார்–லிங்க் பற்றி பேசப்படுகிறது. தேர்தல் நேரம் என்பதால் இந்த நிகழ்ச்சியும் தேர்தல் பிரசாரம் என்று மக்கள் நினைக்கலாம் அல்லவா?**

பதில்: இதற்கான விண்ணப்பம் கடந்த ஆண்டு கிடைத்தது. அங்கு எங்களுக்கு தொலைத்தொடர்பு சட்டத்தில் சிக்கல் ஏற்பட்டது. எங்கள் தொலைத்தொடர்பு சட்டம் 1996 இல் கடைசியாக புதுப்பிக்கப்பட்டது. இருபத்தெட்டு ஆண்டுகளுக்குப் பிறகும், சட்டம் புதுப்பிக்கப்படவில்லை. முதலாவதாக, அப்போது தொழில்நுட்பத்திற்காக தயாரிக்கப்பட்ட சட்டத்தை இன்றைக்கு ஏற்ற வகையில் புதுப்பிக்க வேண்டிய தேவை இருந்தது. இந்தத் தொழிலுக்கான சட்டத்தில் பல கடுமையான சிக்கல்கள் இருந்தன. இதற்கான நடவடிக்கைகளை எடுத்து கடந்த மாதம் இந்த மசோதாவை நிறைவேற்றினோம். அதன் மூலம் இதற்கான உரிமம் வழங்க முடிந்தது. இதில் எந்த அரசியல் நோக்கமும் இல்லை. இருந்தும் இதற்கான அரசியல் தலைமைத்துவம் எமக்கு கிடைத்துள்ளது. இதற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி எமக்கு பெரும் ஆதரவையும் ஆலோசனைகளையும் வழங்கினார். இந்த நாட்டின் இளம் மற்றும் தொழில் முனைவோர் தலைமுறையினருக்கு அதிவேக மற்றும் வரம்பற்ற இணைய சேவைகளை வழங்குவதற்கான வலுவான தேவை அவருக்கு இருந்தது. இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்தும் இதற்காக பெரும் முயற்சி எடுத்து எமக்கு தலைமைத்துவத்தை வழங்கினார். இது அரசியல் ஏமாற்று வேலையல்ல என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். உலகின் அதிநவீன தொழில்நுட்பத்தை இந்த நாட்டிற்குக் கொண்டு வருவதற்கு நாங்கள் பெரும் அர்ப்பணிப்பை செய்துள்ளோம். அதற்காக எடுத்த முயற்சியின் பலனை இந்த நாடு நிச்சயம் பெறும்.

## இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மதுஷங்க திஸாநாயக்க விபரிப்பு

**கே: இந்தத் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த எவ்வளவு காலம் ஆகும்?**

பதில்: வீடு கட்டுவதற்கான அடித்தளம் அமைத்து முடித்துவிட்டோம். இது ஒரு பொறுப்பான வேலை. இதற்காக எங்கள் குழு பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. ஸ்டார்லிங்குக்கான தொலைத்தொடர்பு சேவை உரிமத்தை வழங்கியுள்ளோம். இதற்குத் தேவையான அலைவரிசை உரிமத்தை இன்றோ நாளையோ வழங்குவோம். நிறுவனம் ஒன்றரை மாதங்களுக்குள் இலங்கையில் இந்தப் பணிகளை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கிறோம்.

**கே: ஆரம்ப நிகழ்வில் பங்–கேற்க எலான் மஸ்க் இலங்கை வரவுள்ளதாக ஒரு வதந்தி பரவி வருகின்றதல்லவா?**

பதில்: ஆரம்பகட்ட கலந்துரையாடலின் போது அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் எமக்கு இது தொடர்பில் தெரிவித்தனர். பதவியேற்பு விழாவிற்கு அவர் இலங்கை வரத் தயாராக இருப்பதாக அந்தக் குழுவினர் எமக்குத் தெரிவித்தனர். செப்டம்பர் இறுதிக்குள் அதற்கான திட்டத்தை தயாரிக்க அந்நிறுவனம் எதிர்பார்த்துள்ளது. எவ்வாறாயினும், உரிய திகதி தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. எவ்வாறாயினும், அதற்காக அவர் இலங்கை வருவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒசித அத்தநாயக்க...
தமிழில்: வீ.ஆர்.வயலட்
புகைப்படங்கள்:
நிஷங்க விஜேரத்ன

# தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற மல்வத்தை வைத்தியசாலை

தொற்றா நோய் சம்பந்தமான கிளினிக் நடத்துவதில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தை பெற்ற மல்வத்தை வைத்தியசாலை சமூகத்தை வாழ்த்திப் பாராட்டும் விழாவும், அங்கு சேவையாற்றி இடமாற்றலாகிச் செல்லும் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர்ஏ.ஜி.சி.எஸ். அங்குளுககா சமத்திற்கான சேவை நலன் பாராட்டு விழாவும் மல்வத்தை பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்றன.

மல்வத்தை பிரதேச மக்களும் மல்வத்தை பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரும் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு அபிவிருத்தி குழுவின் உபதலைவர் பொன்.நடராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் டொக்டர் திருமதி றித்மந்தி ரத்னாயக்க தாதிய உத்தியோகத்தர்களான தி ருமதி ரி.பிரசாந்தி, செல்வி. யுஎம். லக்ஷாணி ஜயவர்தன, செல்வி என்.நிலக்ஸிகா மற்றும் ஊழியர்கள் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரும் கலந்து கொண்டனர்.

மல்வத்தை பிரதேச வைத்தியசாலையில் இருந்து இடமாற்றம் பெற்று கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு செல்லும் வைத்தியர் சமத்திற்கு பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கி பிரியாவிடை விமரிசையாக நடைபெற்றது.

உலக வங்கியின் அனுசரணையுடன் இணைந்து இளவயது மரணங்களை தடுக்கும் முகமாக 35 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு இடையே தொடற்றா நோய்களை கண்டறிந்துசிகிச்சை அளிக்கும் முகமாக செயல்படுத்தப்படும் PSSP நிகழ்ச்சித் திட்டத்தில் குறுகிய கால இடைவேளையில் அதிகளவான சனத்தொகையினரை உள்வாங்கி செயல்திட்டத்தை திறம்பட செய்தமைக்காக அகில இலங்கை ரீதியில் மல்வத்தை பிரதேச வைத்தியசாலையானது தங்கப் பதக்கத்தை பெற்று முதலிடத்தை தனதாக்கிக் கொண்டது.



## தொற்றாநோய் கிளினிக் நடத்துவதில் பங்களித்தோருக்கான பாராட்டுவிழா

தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றமைக்காக பாராட்டி கௌரவித்து வாழ்த்து தெரிவிக்கும் நிகழ்வும் இடம் பெற்றது.

வைத்தியசாலை பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி த.பிரசாந்தி 'இந்த நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக எவ்வாறு கொண்டு செல்லப்பட்டது?' என்பது பற்றிய விரிவான விளக்கத்தை அனைவருக்கும் மிகத் தெளிவாக வழங்கினார்.

அபிவிருத்திக் குழுவின் செயலாளரும் சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் உப தவிசாளருமான வெ.ஜெயச்சந்திரன் பிரதான உரையாற்றினார்.

வைத்தியசாலை பொறுப்பு அதிகாரிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன், அவருடைய சேவையைப் பாராட்டி அவருக்கு நினைவுச் சின்னமும் மல்வத்தை பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரால் வழங்கப்பட்டது

ஏராளமான பொதுமக்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

காரைதீவு குறூப் நிருபர்...

# பிறருக்காக நாம் பயன்படாத நாட்கள் நாம் வாழாத நாட்கள்

## திவ்விய நற்கருணை உணர்த்தும் வாழ்க்கைப் பாடம்

நாம் பாவிகளாய் இருந்தும் கிறிஸ்து நமக்காகச் சிலுவையில் கைகளை விரித்துப் பாடுபட்டுப் பலியானார்.

அவரின் கல்வாரிப் பலியைக் காலமெல்லாம் நினைவு கூருவதுதான் நற்கருணைத் திருப்பலியாகும். நற்கருணை ஒரு திரு உணவு மட்டுமன்று; அது உண்மையில் ஒரு திருப்பலியுமாகும்.

இந்த ஞாயிறு நற்செய்தியில், "என் சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்" (யோவா 8:51) என்கிறார் கிறிஸ்து.



இவ்வாறு நற்கருணை உணவும் பலியுமாகும் என்பதை அவர் உணர்த்துகிறார். தமது உடலை உலக மீட்பிற்காகக் கையளிக்கிறார். இறுதி இரவு உணவின்போது அவர் அப்பத்தை எடுத்து, "இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் என் உடல்" (லூக் 22:19) என்றும், அவ்வாறே திராட்சை இரசம் நிறைந்த கிண்ணத்தை எடுத்து, "இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிறது எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் உடன்படிக்கை (லூக் 22:20) என்றும் கிறிஸ்து கூறினார்.

“கொடுத்தல்", " சிந்துதல்" என்ற சொற்கள் கிறிஸ்து தம்மையே பலியாகக் கொடுத்தார். தமது இரத்தத்தைச் சிந்தினார் என்பதை உணர்த்துகின்றன.

கிறிஸ்துவே கொலைக்களத்திற்கு இட்டுச் செல்லப்பட்ட (எசா 53:712). உலகின் பாவங்களைப் போக்கும் உண்மையான செம்மறி (யோவா 1:29). பாஸ்கா செம்மறியின் எலும்புகள் முறிக்கப்படவில்லை (விப 12:48); அவ்வாறே கிறிஸ்துவின் எலும்பும் முறிக்கப்படவில்லை ) (யோவா 19:36). நமது பாஸ்காப் பலி நிறைவேறிவிட்டது. கிறிஸ்துவே அப்பாஸ்கா (1 கொரி 5:7). தமது ஒரே பலியினால் கிறிஸ்து நம்மைத் தூயவராக்கி, நிறைவுள்ளவராக்கினார். (எபி 10:14). அவரின் ஒப்புயர்வற்ற பலியை, அவர் பணித்தவாறே திருச்சபை நிறைவேற்றுகிறது,

திருப்பலி குருவின் பலி மட்டுமன்று; நம் அனைவரின் பலி: முழுத் திருச்சபையின் பலி. அதில் ஒவ்வொருவரும் முழுமையாக, ஈடுபாட்டுடன் பங்கேற்று. குருவுடன் இணைந்து தம்மையே காணிக்கையாக்க வேண்டும். கொடுப்பதிலே மூவகை உண்டு; உள்ளதிலிருந்து கொடுப்பது முதல்வகை. சக்கேயு தன்னிடமிருந்ததிலிருந்து பாதியைக் கொடுத்தார். (லூக் 13:8). உள்ளதையெல்லாம் கொடுப்பது இரண்டாம் வகை, ஏழைக் கைம்பெண் தன்னிடம் இருந்த அனைத்தையுமே உண்டியலில் போட்டுவிட்டார் (மாற் 12:4144). தன்னையே கொடுப்பது மூன்றாம் வகை. இயேசு கிறிஸ்து தம்மையே நமக்காகக் கையளித்தார். 'தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை (யோவா 15:13) என்று அன்பிற்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த கிறிஸ்து. உலக மீட்பிற்காகத் தன் இன்னுயிரையே தாரை வார்த்துக் கொடுத்தார்



எங்கும், எல்லாருக்கும், எல்லா வகையிலும் நாம் நம்மைப் பயனுள்ளவர்களாகச் செய்ய முடியும், இரத்தமின்றி உயிர் இழப்பவர்களுக்கு இரத்த தானம் செய்வது சிறந்தது. "இரத்தத்தைத் தானம் செய்வதால் நாம் சாக மாட்டோம். ஆனால் ஒருநாள் இரத்தமின்றி நாம் சாவோம்" என்பதை நெஞ்சில் நிறுத்துவோம். பிறருக்காக நாம் பயன்படாத நாள்கள் நாம் வாழாத நாள்கள்!

தன்னுடைய ஐந்து பெண் பிள்ளைகளுடன் வறுமையின் பிடியில் சிக்கித் தவித்த ஓர் ஏழைக் கைம்பெண் என்னிடம், "சாமி! கர்த்தர்தான் எங்களைப் படைத்தார்; கண்ணீரைத்தான் எங்களுக்குக் கொடுத்தார், அக்கண்ணீரையே அக்கர்த்தருக்குக் காணிக்கையாக்குகிறோம்" என்றார், அவருடைய கடவுள் நம்பிக்கை நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது!

கடவுளுக்குக் கொடுக்க நம்மிடம் வேறு காணிக்கை இல்லை என்றாலும் நமது கண்ணீரையாவது அவருக்குக் காணிக்கை ஆக்கலாமே? "கடவுளுக்கு ஏற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே" (திபா 51:1617). நம் வாழ்வில் நாம் பல விதங்களில் வெந்துபோய், நொந்துபோய் வேதளைத் தீயில் துடிக்கிறோம், வறுமை, நோய் நோக்காடு, உறவின் முறிவுகள், விரிசல்கள். பிசகுகள், வலிப்புகள், மன இறுக்கங்கள், பாவங்கள், பலவீனங்கள் ஆகியவற்றைக் கடவுளுக்குக் காணிக்கையாக்குவோம்.

பலாப்பழத்தில் பலாச் சுளையை எடுக்கக் கத்தி தேவைப்படுகிறது. வாழ்வைச் சுவைத்து வாழ புத்தியுடன் ஞானமும் தேவைப்படுகிறது.

கிறிஸ்துவே கடவுளின் ஞானம் (1 கொரி 1:24). அவரைப் பின் சென்று, அவர் அருள்வாக்கைக் கேட்டு, அவருடைய திருவுடலை உண்டால் அவர் நமது அக இருளை அகற்றி ஞான ஒளி ஏற்றுவார்.

முட்டாள்களாக நாம் வாழலாம். ஆனால் முட்டாள்களாக நாம் சாகக்கூடாது. ஒரு முட்டாள், தான் முட்டாள் என்பதை உணரும்போது அவன் ஞானியாகிறான். ஒரு பாவி தான் பாவி என்பதை உணரும்போது அவன் நீதிமானாகிறான்.

**அருட்தந்தை இருதயராஜ்**




# நமது வாழ்க்கை நோக்கமற்ற பயணமல்ல

## திருத்தந்தை பிரான்சிஸ்



இறைவனை நோக்கிய நம் பயணத்தில் அன்னை கன்னி மரியாள் நம்மை முன்னோக்கி நடத்திச்செல்லக் கூடியவர் என்றும், நமது வாழ்வும் இயேசுவுடன் இறுதியான ஒன்றிப்பை நோக்கிய ஒரு தொடர் பயணம் என்பதை நினைவூட்டுகிறது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று அன்னையாம் திருஅவை புனித அன்னை மரியாளின் விண்ணேற்புப் பெருவிழாவை சிறப்பித்த தினத்தில் வத்திக்கானின் புனித பேதுரு பேராலய வளாகத்தில் கூடியிருந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய சிறப்பு செப உரையில் திருத்தந்தை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அன்னை மரியாள் எலிசபெத்தை சந்தித்தது ஒரு திருப்பயணம் (லூக் 1:3956) என்றும் தான் தாயாகப்போகும் அறிவிப்பை ஆண்டவரின் தூதரிடமிருந்து பெற்றதை பெருமையாக நினைத்ததைவிட, தம் உறவினராகிய வயது முதிர்ந்த எலிசபெத்திற்கு ஓடிச்சென்று பணிவிடை புரிந்ததையே அவர் பெரும்பேறாகக் கருதினார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அன்னை மரியாளின் இந்த முதல் பயணம், உண்மையில் அவருடைய முழு வாழ்க்கைக்கும் ஒரு உருவகமாக அமைந்துள்ளது. ஏனென்றால் அந்தத் தருணத்திலிருந்து அன்னை மரியாள் எப்போதும் இயேசுவைப் பின்தொடரும் பாதையில் இறையாட்சியின் சீடராக விளங்குகிறார். இறுதியில் அவரது மண்ணக வாழ்வுக்குரிய இந்தப் பயணமானது அவரது விண்ணக வாழ்விக்குரிய விண்ணேற்றத்துடன் முடிவடைகிறது. அங்கு அவர் தன் மகனுடன் இணைந்து நிலைவாழ்வின் மகிழ்வை என்றென்றும் அனுபவிக்கின்றார் என்றும் திருத்தந்தை விளக்கினார்.

இயேசு நம்மை விண்ணக வாழ்வின் மகிழ்ச்சிக்காகவே படைத்தார், நாம் நிலைவாழ்வில் என்றென்றும் வாழ நம்மை அவருடன் அழைத்துச் செல்வதே அவரது கனவாக இருந்தது. எனவே, நமது வாழ்க்கை என்பது அர்த்தமற்ற மற்றும் நோக்கமற்ற பயணம் அல்ல. மாறாக அது இறைவனுடைய அன்பின் திட்டம்.

நாள்தோறும் அவரைச் சந்திப்பதற்கும் அவர் நமக்காகத் தயாரித்திருக்கும் முடிவில்லாத மகிழ்ச்சிக்கும் நம்மை அழைத்துச் செல்லும் ஒரு திருப்பயணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நம்பிக்கை என்பது நம் வாழ்க்கையின் பயணத்திற்கு குறிப்பாக, நமது சோர்வின் போது ஊட்டமளிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார் திருத்தந்தை.

நான் இயேசுவுடன் இருப்பதையும் மண்ணக வாழ்வுக்குரிய இந்தப் பயணத்தின் முடிவில் அவர் எனக்காகக் காத்திருக்கிறார் என்பதையும் அறிந்து இந்த நம்பிக்கையை நான் என்னில் வளர்க்கின்றேனா? நான் எனது வாழ்க்கையின் பயண



ஓட்டத்தில் இருக்கிறேனா அல்லது ஓரிடத்தில் நிலைபெற்றுவிட்டேனா? இறைவனைத் தேடுவதன் வழியாகவும் என் சகோதர சகோதரிகளை அன்புகூர்வதன் வழியாகவும் நான் விண்ணக வாழ்விற்காகப் படைக்கப்பட்டவன் என்பதை நினைவில் கொள்கிறேனா? அல்லது என்னைப் பற்றி மட்டும் நினைத்துக்கொண்டு மண்ணகத்திற்குரிய விடயங்களில் அடைபட்டுக் கிடக்கிறேனா? என்பன போன்ற கேள்விகளை நமக்குள்ளே எழுப்பிச் சிந்திப்போம் என்றும் திருப்பயணிகளுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

**செல்வராஜ் சூசைமாணிக்கம்**




# திருச்சபையின் சொத்துக்களை ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்த புனிதர் லோரன்ஸ்

“சிறியவற்றில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்தாய், ஆதலால் உன்னைப் பெரியவற்றிற்கு அதிகாரியாக்குவேன்" (மத் 25:21).

கத்தோலிக்கத் திருச்சபை திருத்தொண்டர் புனித லோரன்ஸின் திருவிழாவைக் கடந்த வாரம் சிறப்பித்தது. திருத்தந்தை இரண்டாம் சிக்ஸ்டசிடம் திருத்தொண்டராகப் பணிபுரிந்த புனித லோரன்ஸ் திருச்சபையின் சொத்துக்களைப் பாதுகாத்து வரும் பணத்திலிருந்து ஏழைகளுக்கு வழங்குவதை பணியாகக் கொண்டிருந்தார்.

வேத கலாபனை தோன்றியபோது. திருத்தந்தையைப் பிடித்து கொலைக்களத்திற்கு கொண்டு போனார்கள். லோரன்ஸ் அழுது கொண்டே பின் சென்றார். திருத்தந்தை திருச்சபையின் செல்வங்களை ஏழைகளுக்கு வழங்கும்படி அவருக்கு உத்தரவிட்டார்.

உரோமை அதிகாரி ஒருவன் லோரன்ஸை நோக்கி, "திருச்சபையின் சொத்துக்களை அனைத்தையும் எனக்குக் காட்டு" என்றான்.

மூன்று நாட்களுக்குள் அவ்விதம் செய்வதாக லோரன்ஸ் வாக்களித்தார். ஆனால் குருடர், செவிடர், சப்பாணி ஆகிய ஏழைகளுக்குக் கோவில் உடைமைகளைப் பகிர்ந்தளித்து விட்டு, அவர்களையே கூட்டமாக சேர்த்துக் கொண்டு அரசனை அணுகி, "இதோ, இவர்கள்தான் திருச்சபையின் சொத்துக்கள் என்றார்.

மன்னன் சினங்கொண்டான். அவரைப் பிடித்து இரும்புக் கட்டிலில் கிடத்தி அதன் அடியில் நெருப்பு மூட்டும்படி கட்டளையிட்டான். இவரோ சுடர்விட்டு எழுந்த நெருப்பின் கொடுமையைப் பொறுத்துக்கொண்டே மகிழ்வாய் இறைவனைப் புகழ்ந்தார். உரோமை மக்கள் மனந்திரும்பவும் கிறிஸ்தவ விசுவாசம் உலகமெங்கும் பரவவும் கடைசி மூச்சு வரை செபித்து அவர் உயிர் துறந்தார்.258 ஆம் ஆண்டில் இவர் இறந்தார்.

கி.பி. 400வது ஆண்டில் புருடென்சியஸ் என்ற வரலாற்று ஆசிரியர் புனிதலோரன்சின் மன்றாட்டினால் தான் உரோமை நகரம் கிறிஸ்துவின் ஒளியைப் பெற்றது என்று குறிப்பிடுகிறார்.

இவர் பெயரால் எழுப்பப்பட்ட ஆலயத்திற்கு வரும் அடியவர்களின் பெருங்கூட்டத்தையும் அவர்களின் பலதரப்பட்ட வேண்டுதல்கள் புதுமையாகக் கேட்கப்பட்டதையும் அவர் விபரிக்கின்றார்.

உரோமையில் உள்ள மிகச் சிறந்த ஆலயங்களில் புனித லோரன்ஸ் பெயரால் எழுப்பப்பட்ட ஆலயமும் உள்ளடங்கும். தொடக்கத்தில் மன்னன் கொன்ஸ்டான்டைன் எழுப்பிய சிற்றாலயம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் பேராலயமாகக் கட்டப்பட்டு இன்றும் எழிலுடன் காட்சியளிக்கிறது.

புனித லோரன்சின் வாழ்வு கீழ்க்கண்ட இறைவார்த்தைகளை நம் சிந்தனைக்குக் கொண்டு வரட்டும். "சிறியவற்றில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்தாய், ஆதலால்உன்னைப் பெரியவற்றிற்கு அதிகாரியாக்குவேன்" (மத 25:21).

**சந்தியாகு**

# கொழும்பு வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலய திருவிழா



கொழும்பு வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயத்தின் வருடாந்த திருவிழா அண்மையில் பங்குத்தந்தை நிஹால் ஐவன் பெரேரா அடிகளாரின் தலைமையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா நிகழ்வுகளில் தினமும் நவநாள் ஆராதனைகள் இடம்பெற்று கடந்த 10 ஆம் திகதி மாலை வெஷ்பர்ஸ் ஆராதனையும் அதனையடுத்து புனிதரின் திருச்சுரூப பவனியும் இடம்பெற்றது.மறுநாள் 11 ஆம் திகதி காலை திருவிழா திருப்பலி அருட்தந்தை சில்வெஸ்டர் ரணசிங்கவின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருவிழா நிகழ்வுகளைப் படங்களில் காணலாம். படங்கள் உதவி: ஜெரால்ட்

# நாட்டை மீட்கக்கூடிய ஒரேயொரு சக்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே

## ஹோமாகமவில் அமைச்சர் பந்துல குணவர்தன

"நாட்டை மீட்கும் எதிர்கால வேலைத் திட்டத்தை தேசியக் கொள்கையாக சட்டமாக்கிய ஒரேயொரு ஜனாதிபதி வேட்பாளர் ரணில் மட்டுமே" என்று போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாட்டில் அராஜகத்தை ஏற்படுத்தி பங்களாதேசை விட மோசமான நிலைமை ஏற்படவிருந்த நிலையில், நாட்டின் முதன்மையான பாராளுமன்ற ஜனநாயகத்தை பாதுகாத்த துணிச்சல் கொண்ட ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே. அன்று அவர் முன்வராதிருந்தால் சிலவேளை நமது நாட்டில் தீவிரவாதிகளைக் கொண்ட ஒரு இராணுவ அரசு இருந்திருக்கும். சிறுநேர தவறு நேர்ந்திருந்தாலும் இலங்கையில் பாராளுமன்றம் இல்லை. அவ்வாறு பாராளுமன்றம் பாதுகாக்கப்பட்டு இருந்தாலும் போராட்டக்காரர்களை அடக்கியிருந்தாலும் நாட்டுக்கு தேவையான எரிபொருள், எரிவாயு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வானத்திலிருந்து விழுந்திருக்குமா? இதற்கு முன்னர் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திடம் ஒப்பந்தம் செய்ய சென்றிருந்தாலும் அவை நிராகரிக்கப்பட்டதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். 2024 ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின்





வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் ஹோமாகமவில் ஜனாதிபதி தேர்தல் செயற்பாட்டு அலுவலகமொன்று திறந்து வைக்கப்பட்டது. இதனை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன திறந்து வைத்தார். இந்நிகழ்வில பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், 17 வது தடவையும் ஒப்பந்தம் ஒன்றை தயாரிக்க சந்தர்ப்பம் தாமாக கிடைத்திருக்காது. இதன்போது, ஜனாதிபதியாக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பின்போது, சஜித் பிரேமதாசவுடன் இணைந்து டலஸ் அழகப்பெரும ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். இந்த பாரிய பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வே இல்லை என்பதை அந்த தருணத்தில் டலஸ் அழகப்பெருமவிடம் விளக்கினேன். அந்த நிபந்தனைகளின்படி சர்வதேச நம்பகத்தன்மையை நிலைநாட்டாமல் இலங்கையை எவராலும் மீட்க முடியாது என்றும், வேறு யார் ஆட்சிக்கு வந்தாலும் சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கையை பெறக்கூடிய. அதற்கான பழக்கமும், அனுபவமும், கொண்ட ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என நான் சுட்டிக்காட்டினேன். அவ்வேளையில் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பிரதி நிதியமைச்சராக நான் எதிர்மறையான பொருளாதாரத்தை பல சவால்களுக்கு மத்தியில் சாதகமான ஒன்றாக மாற்றியமைத்தேன். அச் சந்தர்ப்பத்தில், 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ பொ றுப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்தச் சட்டம் அவ்வாறு அமுல்படுத்தப்பட்டிருந்தால் இலங்கை ஒரு நாளும் வங்குரோத்தாகியிருக்காது. ஆனால் துரதிஷ்டவசமாக அந்த அரசு குறுகிய காலத்தில் கவிழ்ந்தது.

அதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அனுபவம் மற்றும் சர்வதேச நம்பகத்தன்மையின் அடிப்படையில் நாட்டை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். இலங்கை மத்திய வங்கியின் புதிய சட்டத்தை ஜனாதிபதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இனிமேல் யார் ஆட்சிக்கு வந்தாலும் பணம் அச்சடிக்க முடியாது. அவ்வப்போது கொள்கை மாற்றங்களை தடுக்க புதிய பொருளாதார மாற்றம் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்த தேசிய கொள்கைகளை அனுரகுமார திசாநாயக்கா அல்லது சஜித் பிரேமதாச அல்லது வேறு எந்த வேட்பாளரும் தொடர்வார்களா என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### அரசாங்கத்தின் திட்டங்களை...

கடந்த 75 வருட கால ஆட்சியாளர்கள் நாட்டின் அபிவிருத்திக்காக எதனையும் செய்யவில்லை என சில தரப்பினர் குற்றம் சுமத்திய போதிலும் அது உண்மை இல்லையென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தேசிய பொருளாதாரம் தொடர்பில் பேசிய மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகள் உருவாக்கிய நிலைப்பாடே நாட்டின் விரைவான பொருளாதார அபிவிருத்திக்கு தடையாக அமைந்ததெனவும் தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண புதிதாக சிந்தித்து கட்சி பேதமின்றி புதிய வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்த ஜனாதிபதி, அதற்காக பாரிய குழு தன்னோடு இருப்பதாலேயே ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதியிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:

# கேள்வி இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு சிலிண்டர் சின்னத்தை தெரிவு செய்துள்ளீர்கள். 'யானை' இல்லாமல் 'சிலிண்டர்' தெரிவு செய்யப்பட்டதன் காரணம் என்ன?

பதில் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட தீர்மானித்தேன். கட்சி சாராமல் செயற்பட வேண்டும் என்ற வலுவான கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. அதற்கேற்ப அரசியல் ரீதியாக புதிதாக சிந்திக்க வேண்டும். பல குழுக்களுடன் இணைந்து செயற்பட்டதால் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட தீர்மானித்தேன். சுயேச்சை வேட்பாளர் எந்த சின்னத்தையும் தேர்வு செய்யலாம். இத் தருணத்தில் சிலிண்டர் சின்னமே மிகப் பொருத்தமானதாகும்.

# கேள்வி இந்த பொருளாதாரத்தை உங்களால் வலுப்படுத்த முடியும் என நம்புபவர்கள் உள்ளனர். ஆனால் ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுனவின் ஆதரவு கிடைத்ததால் வாக்களிக்கத் தயங்கும் சிலரும் உள்ளனர். அவர்களுக்கு என்ன பதில் சொல்வீர்கள்?

பதில் எந்த ராஜபக்ஷவைப் பற்றி கேட்கிறீர்கள்? ராஜபக்ஷ என்ற மூன்று வேட்பாளர்கள் உள்ளனர். லக்ஷ்மன் ராஜபக்ஷ, விஜயதாச ராஜபக்ஷ , நாமல் ராஜபக்ச என்று மூன்று பேர் உள்ளனர். அவர்களில் ஒருவரும் என்னோடு இல்லை.

ஜ்லை 2022ஐ விட இன்று நிலைமை சிறப்பாக உள்ளதா? அல்லது மோசமாக உள்ளதா? அரசாங்கத்தை வழிநடத்த எனக்கு மொட்டுக் கட்சியின் ஆதரவு கிடைத்தது. அந்த ஆதரவை புறக்கணித்திருந்தால் எண்ணெய் , உரம், எரிபொருள் இல்லாமல் தவித்திருக்கலாம்.

அந்த அரசாங்கம் நிறைவுக்கு வந்துவிட்டது. இப்போது தேர்தலுக்கு செல்கிறோம். அவர்கள் தங்கள் வழியில் செல்கிறார்கள். நான் எனது வழியில் போகிறேன். இலங்கையில் இலட்சக் கணக்கான ராஜபக்ஷக்கள் உள்ளனர். அவர்களில் சிலர் எனக்கு வாக்களிக்கலாம். எவ்வாறாயினும், ஜனாதிபதி தேர்தலில் தனியாக களமிறங்க பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது. நாம் வேறொரு தரப்பாக போட்டியிடுகிறோம்.

# கேள்வி ஊழல் எதிர்ப்பு மோசடிகளைத் தடுக்க நீங்கள் பல்வேறு சட்டங்களை அறிமுகப்படுத்தினீர்கள். ஆனால், இதனால் சிறிய மோசடிகளை மட்டுமே பிடிக்க முடிவதாக கூறப்படுகிறது.

பதில் இதனால் பல மோசடிகள் பிடிபடும். 2015ஆம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வந்ததும் இது தொடர்பில் ஆராய பல குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஜனாதிபதியின் கீழ் ஒரு பிரிவு இருந்தது. மேலும் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவின் கீழ் ஒரு குழுவும் இருந்தது.

பொலிஸில் மற்றொரு தனிப் பிரிவை உருவாக்கினோம். இலஞ்ச ஊழல் ஆணைக்குழு இருந்தது. சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஊழல் எதிர்ப்பு செயலகம் ஒன்று இருந்தது. இருப்பினும் பல சட்ட சிக்கல்களும் இருந்தன. எனவே புதிய முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

சட்ட விரோதமாக ஈட்டப்படும் வருமானத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான பணிக்குழுக்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும்.

# கேள்வி: இறுதியாக, இந்நாட்டு மக்களுக்கு நீங்கள் கூறும் செய்தி என்ன?

பதில்:யாரும் ஏற்காத நிலையில் தான் நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்றேன். பொருளாதார பிரச்சனையை தீர்க்க முடியாது என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால் இன்று பொருளாதார பிரச்சினையை தீர்த்து நாட்டை ஒரு நிலையானமட்டத்திற்கு கொண்டு வந்துள்ளோம். இந்தப் பயணத்தை இத்துடன் நிறைவு செய்ய முடியாது. இந்த நாட்டின் பொருளாதாரம் ஒரு புதிய மாற்றத்திற்கு உள்ளாக வேண்டும். நாம் ஏற்றுமதி பொருளாதாரமாக மாற வேண்டும். அந்த நிலைக்குச் செல்லாவிட்டால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும். எனவே, அடுத்த சில வருடங்கள் குறித்து சிந்தித்து முடிவெடுக்குமாறு மக்களிடம் கூறுகிறேன். அடுத்த 20 வருடங்கள் குறித்து யோசித்து முடிவெடுக்குமாறு இளைஞர்களிடம் கோருகிறேன்.

### தினமும் 1000 கடவுச்சீட்டுகள்...

நடவடிக்கை எடுத்துள்ளதாக குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் ஜெனரல் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் நிலவும் நெரிசல் தற்போது நீங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டு அச்சடிக்கும் புத்தகங்கள் நிலுவையின் காரணமாக சில தட்டுப்பாடுகளுடன் கடவுச்சீட்டு அச்சிட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் தற்போது புதிய புத்தகங்கள் கிடைத்துள்ளதாகவும் இதனால் தினமும் 1000 கடவுச்சீட்டுகள் அச்சிடப்படும்.

ஒக்டோபர் மாதம் வரை குடிவரவுத் திணைக்களத்தின் இணையத்தளத்தின் ஊடாக திகதிகளை முன்பதிவு செய்தவர்களுக்கு கடவுச்சீட்டு வழங்கப்படும்என குடிவரவுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்துள்ளர்.

### முஸ்லிம்களின் பிரச்சினைகளை...

சிலவேளை சஜித் அல்லது அநுரகுமார வெற்றி பெற்றால்கூட, அவர்களினாலும் ஒரு அரசாங்கத்தை அமைக்க முடியாது.

சஜித்திடம், 30 பேரும், அநுரகுமாரவிடம் ஒருவரும் தற்போது எம்.பி. ஆக உள்ளனர். இப்படியிருக்கையில் எப்படி அவர்களினால் ஜனாதிபதியாக முடியும்? எப்படி அரசாங்கத்தை நிறுவ முடியும்? ரணில் விக்கிரமசிங்கவினால்தான் ஜனாதிபதியாகவும் முடியும், அரசாங்கத்தை அமைக்கவும் முடியும். ஒரேயொரு எம்.பி. பதவியைப் பெற்றுக் கொண்டு ஜனாதிபதியாகி, நாட்டைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி ரணிலினால் மட்டுமே, இலங்கையை கட்டியெழுப்ப முடியும். முஸ்லிம்கள் தொடர்பில் ரணிலிடம் நான் முன் வைத்த 80 சதவீதமான கோரிக்கைகளை அவர் நிறைவேற்றியுள்ளார். கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ள குர்ஆன் மற்றும் இஸ்லாமிய புத்தகங்களை விடுவிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

### கறுப்பு பணத்தை வெள்ளையாக்க...

இவ்வருட ஜனாதிபதித் தேர்தலுக்கு 39 பேர் வேட்புமனுக்களை சமர்ப்பித்துள்ளமை தொடர்பில் மல்வத்து மகாநாயக்க தேரர் எழுப்பிய கேள்விக்கு, பதிலளிக்கும் போதே பிரதமர் இதனை தெரிவித்தார்.

### அரசியல்வாதிகளுக்கு மதுபான...

நாயகம் சுட்டிக்காட்டினார். எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமக்கு சார்பாக செயல்படுவதற்காக இலஞ்சம் வழங்குவதற்காக அரசாங்கம் மது விற்பனை அனுமதிப் பத்திரங்களை வழங்குவதாக அரசாங்கத்திற்கெதிராக சிலர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டு தொடர்பில் அவரிடம் கேட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

### ஜனாதிபதித் தேர்தல்; கண்காணிப்பு...

தேர்தலைக் கண்காணிப்பதற்காகத் தேர்தல் கண்காணிப்புக் குழுவை இலங்கைக்கு அனுப்புவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

### தேர்தல் கடமைகளில்...

ஈடுபடுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவலின்படி, மொத்தம் இரண்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் அரச ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். 13,000 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதி மாளிகையை.... (03 ஆம் பக்க தொடர்)

கொழும்பில் இருந்து தொலைதூர கஷ்டமான பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் உட்பட நாடளாவிய ரீதியில் 160க்கும் மேற்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்தக் களப்பயணத்தில் இணைந்துள்ளதுடன் நிகழ்ச்சித் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் அநேக பாடசாலைகளின் மாணவர் பாராளுமன்றம் மற்றும் இளைஞர் பாராளுமன்ற அமர்வுகள் ஜனாதிபதி அலுவலக பழைய பாராளுமன்றத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டன. மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளை மேம்படுத்தும் நோக்குடன் அரச நிர்வாக பொறிமுறை தொடர்பாக மாணவர்களை தெளிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### அநுராதபுரம் ஐ.தே.க...

அமைப்பாளர்களாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பி.ஹரிசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் .டபிள்யூ.பி. ஏக்கநாயக்க ஆகியோரும் இதன் போது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர். காலி மாவட்ட அமைப்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம , ஹம்பாந்தோட்டை மாவட்ட அமைப்பாளர்களாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜீ. திஸ்ஸ குட்டியாராச்சி, பி. தேவக வீரசிங்க ஆகியோர் நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர். இதுதொடர்பான நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க ஆகியோர் கலந்து கொண்டதுடன் 295 பிராந்திய அமைப்பாளர்களுக்கு நியமனக் கடிதங்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

### வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை...

வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய அவர், நாடு இக்கட்டான நிலையில் இருந்த போது அதனை எதிர்க்கட்சித் தலைவர், ஜனநாயக அமைப்பிற்குள் பொறுப்பேற்றிருக்க வேண்டும். ஆனால் அன்று அந்தப் பொறுப்பை அவர் ஏற்கவில்லை. அடுத்ததாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு இது தொடர்பில் பொறுப்பு உண்டு. அவர்களில் யாரும் இதனை ஏற்கவில்லை. இதனால் தான் அனுபவமிக்க மிகவும் மூத்த மற்றும் முதிர்ந்த தலைவர் அடுத்ததாக அழைக்கப்பட்டார். எந்தவித தயக்கமுமின்றி அந்தப் பொறுப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்று சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை நிலைநாட்டி மிகச் சிறப்பாக முன்னெடுத்துள்ளார் என்றும் தெரிவித்தார்.

### தமிழர் ஒற்றுமையாக...

கட்டமைப்பின் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

முள்ளியவளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற பா. அரியநேத்திரனின் முதலாவது தேர்தல் பிரசார கூட்டத்தின் போது அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

### நிறைவேற்று அதிகார முறை...

ருவன்வெல்ல தெஹியோவிட்ட பிரதேச சபை மைதானத்தில் நேற்று முன்தினம் (18) இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் நான்காவது வெற்றிப் பேரணியில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## இன்றைய பலன்கள்
### (20.08.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
பல செயல்களில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் கிடைக்காமல் போகலாம். சில செயல்களில் அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு.

**ரிஷபம் :**
எடுத்த காரியங்களில் முயற்சியுடன் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். என்றாலும் சில செயல்களில் சிறு சிறு தடைகளை சந்திப்பீர்கள்.

**மிதுனம்:**
சில காரியங்களில் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும் பலன் தந்த பல காரியங்களை எண்ணி மகிழ்ச்சியடைவீர்கள்.

**கடகம்:**
நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். பணவரவுகளில் திருப்தியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:**
உங்கள் செயல்கள் பலவற்றில் நன்மையான பலன்களை அடைவீர்கள். கடினமான செயல்களையும் முயற்சியோடு செய்து முன்னேற்றம் அடைவீர்கள்.

**கன்னி:**
நீங்கள் எடுத்த முயற்சிகளில் நல்ல பல முன்னேற்றங்களை காண்பீர்கள். வரவேண்டிய தன வரவு தாமதம் இன்றி வந்து சேரும்.

**துலாம்:**
உங்கள் முயற்சிகள் பலவற்றில் முன்னேற்றமான சூழ்நிலை காணப்பட்டாலும் சிலவற்றிலேயே வெற்றி காண்பீர்கள்.

**விருச்சிகம்:**
முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில செயல்களில் தொடர்பு இருந்தாலும் தக்க நபர்களில் உதவியுடன் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:**
காரியங்கள் பலவற்றில் தீவிர முயற்சியுடன் ஈடுபட்டாலும் சிலவற்றிலே எதிர்பார்க்கும் பலனை அடைய முடியும்.

**மகரம்:**
பல செயல்களில் முயன்று செயலாற்றினாலும் சிலவற்றில் மட்டுமே முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள்.

**கும்பம்:**
ஒப்பந்தங்களில் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். வரவேண்டிய தன வரவு சிறிது தாமதித்தே வந்து சேரும்.

**மீனம்:**
செயல்கள் பலவற்றில் சிறப்பாக முயற்சிகள் செய்தாலும் சிலவற்றிலையை எதிர்பார்க்கும் நன்மைகளை அடைய முடியும்.

### உலகை அச்சுறுத்தும்...

முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எம்பொக்ஸ் எனும் குரங்கம்மை நோய் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் உலக சுகாதார ஸ்தாபனம் அதனை உலக பொதுச் சுகாதார அவசரகால நிலையாக பிரகடனப்படுத்தியுள்ளது.

### ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு...

எண்ணியதாக அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ் பொது வேட்பாளரை முன்வைத்ததன் மூலம் பல தமிழ் அரசியல் கட்சிகளில் பிளவுகள் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதன் காரணமாக வடக்கில் உள்ள தமிழ் மக்களின் பூரண ஆதரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு வழங்க வேண்டும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

### சுப்பிரமணியன் சுவாமி...

'குடும்பமாக' ஏற்றுக்கொள்வதால், ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ச களமிறங்கியுள்ளமை வரவேற்கத்தக்கது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். நாளை 21 ஆம் திகதி நாமல் தனது முதல் மக்கள் பேரணியை ஆரம்பிக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வட மாகாண உறுப்பினர் கீதாநாத் காசிலிங்கம் விடுத்த அறிக்கைக்கு பதிலளித்த சுவாமி, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# பாராளுமன்ற ஜனநாயகப் பாதையில் 30 வருடகால ஓய்வற்ற நெடும்பயணம்

பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை விதைத்து, தேசிய நல்லிணக்கமே எமது வழிமுறை என்று ஒரு தீர்க்கமான தீர்மானம் எடுத்த நாள் இன்றாகும்.

தமிழ் மக்களுக்கான உரிமைப் போராட்டம் உன்னதமானது. அதற்காக உயிரையும் தியாகம் செய்யத் துணிந்து எமது தலைவர் களத்தில் நிமிர்ந்து நின்றார்.

போராட்டத்திற்கு வலுச்சேர்க்கவும், தமது போராளிகளுக்கு வழிகாட்டவும் பாலஸ்தீனம்வரை சென்றும் பயிற்சிகள் பெற்று முன்மாதிரியான தோழனாக தலைவர் டக்ளஸ் தேவானந்தா முன்னின்ற அந்த நாட்கள் பசுமையானவை.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் வழிதவறியும், தலைமைப்போட்டியால் திசைமாறியும் சென்றதால் எழுந்த இயக்க மோதல்கள் மற்றும் இயக்கங்களுக்குள்ளே மோதல்கள் என தொடங்கிய சகோதரப் படுகொலைகள் தலைவிரித்தாடியதால் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் அப்போதே தோற்றுப்போனது.

அந்த ஆயுதப் போராட்டம் பின்னாளில் அளவுக்கு மிஞ்சியதாகவும் , கொலைகளுக்கூடாகவே விடுதலை சாத்தியம் என்ற மாயையின் பின்னாலும் இழுபட்டுச் சென்றதால், தமிழ் மக்களின் உரிமைகளையே அடக்குவதாகவும் மாறிப்போனது. அது தமிழ் மக்களுக்கு பெரும் பின்னடைவையும் , ஏமாற்றத்தையும் கொடுத்தது என்று அன்றே கூறியவர் எமது தலைவர்.

அவர் அன்று கூறியவை தீர்க்கதரிசனமானவை என்பதை காலம் பின்னாளில் உலகுக்கு உணர்த்தியது. உரிப்போராட்டம் தவறான வழியில் சென்றதால் தமிழ் மக்கள் உள்ளதையும் இழந்தவர்களானார்கள். உறவுகளையும் , உடைமைகளையும் , தொடர்புகளையும் இழந்து ஓரிடமிருந்து இன்னோரிடம் நகர முடியாதவர்களாகவும் , நாளாந்தம் கையேந்தும் பரிதாபத்திற்கும் ஆளாகியும் நின்றார்கள்.

அந்நாளில் இருதரப்புக்கும் இடையே சிக்கிக்கொண்டவர்களாக தமிழ் மக்கள் செய்வதறியாது ஆழ்கடலில் வீழ்ந்தவர்கள் போல் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஒளியாகவும், மீட்புக்கரமாகவும் அன்று நீட்டப்பட்டது டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தலைமையிலான ஈ.பி.டி.யினராகிய எமது தோழமைக்கரங்கள் மட்டும்தான்.

எமது கரங்களை வெட்டவும், எம்மைக் கொலை செய்யவும் புலிகளின் தலைமை தன்னாலான அனைத்து முயற்சிகளையும், அனைத்து வழிகளிலும் செய்தது. புலிகளின் தலைமையின் கொலைக் கரங்களையும், கொலைக் கருவிகளையும் எதிர்கொண்டு ஈ.பி.டி.பி தோழர்கள் வெளிப்படுத்திய துணிச்சலும் , அர்ப்பணிப்பும் நிகரற்றவை. அது மகத்தான மக்கள் சேவை.

அத்தகையதொரு காலச்சூழலிலேயே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் போக்கிலும், அணுகுமுறையிலும் நின்று நிதானித்து நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் பயணிக்க வேண்டிய வரலாற்றுக் கடமையை ஈ.பி.டி.பியினராகிய நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களானோம்.



அந்த வரலாற்றுக் கடமையை நிறைவேற்றி தமிழ் மக்கள் இழந்த உயிர்களை மீட்க முடியாத போதும் இழந்த நிலத்தையும், வாழ்வையும், பொருளாதார வளத்தையும் பாதுகாக்க பாராளுமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும், இதர அதிகார தளத்திலும் டக்ளஸ் தேவானந்தா போராடினார்.

போராட்ட வடிவத்தை நடைமுறைச் சாத்தியமாக மாற்றிக்கொண்ட ஈ.பி.டி.பியின் அணுகுமுறைகளின் விளைவுகளாக சாதிக்கப்பட்டவை பலவாகும்.

குறிப்பாகக் கூறினால் பாதுகாப்புத் தரப்பிடமிருந்து மீளப்பெறப்பட்ட ஆயிரக்கான ஏக்கர் நிலங்களை விடுவித்தது ஆயுதப்போராட்டம் அல்ல. அது டக்ளஸ் தேவானந்தா அவர்களின் அணுகுமுறையின் விடுவிப்பு.

அதுமட்டுமல்ல சமுர்த்தி,சுகாதாரத் தொண்டர்கள், தொண்டர் ஆசிரியர்கள், பனைசார் தொழிலாளர்கள், கடல்சார் தொழிலாளர்கள், விவசாயிகள், சுயதொழில் முயற்சியாளர்கள் என எமது தாயக மண்ணில் வாழ்வோரின் வாழ்வாதாரத்தில் ஈ.பி.டி.பியின் பங்களிப்புகள் அல்லது உதவிகள் ஏதேனும் ஒருவகையில் கலந்துள்ளது என்பதை மனச்சாட்சியுடன் எண்ணிப்பார்ப்போர் ஏற்றுகொள்வர். மக்கள் சேவையை செய்வதற்காக உறுதிமிக்க தலைமைத்துவத்தை வழங்கி மக்கள் நலனே தன் நலன் என்று வாழ்ந்து கொண்டிருக்கும் தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்ற அந்த நாள் இன்றாகும். இந்த முப்பது வருட நெடும் பயணத்தில் பல சவால்களையும், கொலை அச்சுறுத்தல்களையும் , உள்நோக்கத்திலான பல விமர்சனங்களையும் , கூடவே இருந்த சிலரின் துரோகங்களையும் அவர் எதிர்கொண்டிருக்கின்றார்.

பல்கட்சி ஜனநாயகம் எமது மக்கள் மத்தியில் உருவாக வேண்டும் என்ற பரந்த மனதோடு 'ஆயிரம் பூக்கள் மலரட்டும்' என்று வரவேற்றார்.

டக்ளஸ் தேவானந்தா அவர்கள் புலிகளுக்கும் மனிதநேயம் கற்பித்தவர்.

"கொலைகளுக்கூடாக தீர்வுகள் சாத்தியம் இல்லை. சகோதரப் படுகொலையை கைவிட்டு ஒரு குரலில் பேச வாருங்கள். நானும் சேர்ந்து வருகிறேன்" என்று தன்னை கொலை செய்யத் துடித்த புலித்தலைமைக்கே சகோதரத் தூது விட்டவர்.

டக்ளஸ் தேவானந்தா அவர்களின் 'மக்கள் நலன் மற்றும் தமிழர் தேசத்தின் மீள் எழுச்சி' எனும் உயரிய நோக்கத்தை நிறைவேற்றும் பயணத்தில் பல தோழர்கள் தமது இன்னுயிரை மக்களுக்காக தியாகம் செய்திருக்கின்றார்கள். பலர் தமது அர்ப்பணிப்பு மிகுந்த உழைப்பை வழங்கியிருக்கின்றார்கள். இன்னும் வழங்கிக் கொண்டும் இருக்கின்றார்கள்.

இன்னும் பல தோழர்கள் தமது ஆலோசனைகளையும், தம்மாலான பங்களிப்பையும் வழங்கியிருக்கின்றார்கள்.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற் போல் மனச்சாட்சியுள்ள தமிழ் மக்கள் டக்ளஸ் தேவானந்தா அவர்களை 1994 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற அத்தனை பாராளுமன்றத் தேர்தல்களிலும் இன்று வரை தோல்வியை நெருங்கவிடாது வெற்றிபெறச் செய்து தொடர்ச்சியாக 30 வருடங்கள் பாராளுமன்றம் செல்லும் வெற்றி நாயகனாக அவரை தலைநிமிரச் செய்திருக்கின்றார்கள்.

இந்த நீண்ட பயணம் தேவையுள்ள மக்களுக்கு தீர்வாகவும், குரலற்ற மக்களின் குரலாகவும், நலிந்த மக்களின் குரலுக்கு செவிசாய்க்கும் மனிதநேயமாகவும், பலரின் கோரிக்கைகளுக்கு பதிலாகவும் இன்னும் தொடர்கிறது.

“போற்றுவோர் போற்றட்டும். தூற்றுவோர் தூற்றட்டும். என் பணி மக்கள் நலன் செய்து கிடப்பதேயாகும்” என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது பயணத்தை தொடர்கின்றார்.

அப்பணி சிறக்க அவரின் அந்த உயரிய மக்கள் பணிக்கு வலுச்சேர்க்க நாமும் தோளோடு தோள் நிற்போம்.

**தோழர்கள்**

# வடமாகாண கிராமிய கடற்றொழிலாளர்களை சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

வடக்குமாகாணத்தைசேர்ந்தகிராமியகடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும்வடக்குமாகாணகடற்றொழில்சமாசங்களின்பிரதிநிதிகளைகடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த சந்திப்பானது, நேற்று முன்தினம் (18.08.2024) அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தொழில் சார் பிரச்சினைகளைகையாளுதல் மற்றும் சீன அரசாங்கத்தினால்கடற்றொழிலாளர்களுக்காகவழங்கப்படும் உதவிகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

குறிப்பாக 500 மில்லியன் ரூபாய் பெறுமதியான அரிசி, 500 மில்லியன் ரூபாய் பெறுமதியான வலை, 500 மில்லியன் ரூபாய் பெறுமதியான முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத் திட்டம் போன்றவற்றை சரியான முறையில் கடற்றொழிலை ஜீவனோபாயமாக கொண்ட கற்றொழிலாளர்களுக்கு பகிர்ந்தளித்தல் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர், வழங்கப்படும் உதவிகள் அனைத்தும் மக்களின் நலன்கருதி முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுவதை உறுதிசெய்வது அவசியம் என்றும் வலியுறுத்திய அமைச்சர், தீவகப்பகுதி கடற்றொழிலாளர்களின்எரிபொருள் குறிப்பாக மண்ணெண்ணை விநியோகம் தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையைதீர்ப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் விரைவில் இந்திய கடற்றொழிலாளர்களின்எல்லைதாண்டிய சட்டவிரோத தொழில் நடவடிக்கை தொடர்பிலும் விரைவில் இந்திய இலங்கை தரப்பினருக்கிடையே பேச்சுக்கள் நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனிடையே, நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கடற்றொழிலாளர் சமூகத்தின் நிலைப்பாடு தொடர்பிலும் அவதானம் செலுத்திய அமைச்சர் மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் எனசுட்டிக்காட்டியதுடன் அதுவேநாட்டின் தற்போதைய தேவைஎன்றும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கின் உதயம்

ஜக்கிய மக்கள் சக்தியின்

# மாவட்ட காரியாலயம் கிழவன்குளத்தில் திறப்பு

**மாங்குளம் குரூப் நிருபர்**

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் முல்லைத்தீவு மாவட்ட காரியாலயம் மாங்குளம் கிழவன் குளத்தில் நேற்று (19) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள ஜக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் முல்லைத்தீவு மாவட்ட காரியாலய திறப்புவிழாவானது திருமுறிகண்டி வட்டார வேட்பாளர் சுப்பையா திருச்செல்வம் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் ஜக்கிய மக்கள் சக்தியின் பிரதான அமைப்பாளர் முத்துக்குமாரசுவாமி லக்சயன் ஜக்கிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர்களான சதாசிவம் சத்தியசுதர்சன், றிசாம் ஜமால்டீன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சந்நிதியில் 35 பவுண் நகை அபகரிப்பு

**யாழ் . விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டிருந்த பக்தர்களின் சுமார் 35 பவுண் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளது.

வரலாற்று சிறப்புமிக்க செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்திர தேர் திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

தேர்த்திருவிழாவில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பெருந்திரளான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து தேர் திருவிழாவை நேரில் கண்டு களித்தனர். அதன் போது ஆலய சூழல்களில் சனநெரிசல்களை பயன்படுத்தி திருடர்கள் தம் கைவரிசைகளை காட்டியுள்ளனர்.

பல பக்தர்களின் பெறுமதியான தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன. தமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் சுமார் 35 பவுண் நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# யாழில் வேலைக்கு சென்ற இளைஞன் திடீர் நெஞ்சு வலியால் உயிரிழப்பு

**யாழ் . விசேட நிருபர்**

வேலைக்கு சென்ற இளைஞன் திடீர் நெஞ்சு வலி ஏற்பட்டு, உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், நீர்வேலி பகுதியை சேர்ந்த தவராசா ரகுமாதவா (வயது 32) எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வீட்டில் இருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை வேலைக்கு சென்ற நிலையில், வேலைத்தளத்தில் நெஞ்சு வலிப்பதாக கூறியதையடுத்து சக தொழிலாளர்கள் அவரை கோப்பாய் வைத்தியசாலைக்கு அழைத்து சென்றவேளை, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

உயிரிழப்புக்கான காரணம் தெரியவராத நிலையில், சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ் . போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்று வீடு திரும்பியவர் உயிரிழப்பு

**யாழ் . விசேட நிருபர்**

விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்ற பின்னர் வீடு திரும்பிய முதியவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம். ஆனைப்பந்தி பகுதியைச் சேர்ந்த சின்னையா இரத்தினசிங்கம் (வயது 80) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 22ஆம் திகதி வீட்டில் இருந்து திருநெல்வேலி சந்தையில் மரக்கறி வாங்குவதற்காக துவிச்சக்கர வண்டியில் சென்றவேளை, எதிரே வந்த முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானதில் முதியவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று, கடந்த 03ஆம் திகதி வீடு திரும்பிய நிலையில் கடந்த சனிக்கிழமை திடீரென சுகவீனமுற்ற நிலையில் உயிரிழந்துள்ளார்.

# விடுதியில் தங்கியிருந்த மூன்று யுவதிகள் கைது


**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் சந்தேகத்திற்கு இடமான முறையில் தங்கியிருந்த மூன்று யுவதிகள் நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம் கண்டி நெடுஞ்சாலையில், மாவட்ட செயலகத்திற்கு சற்று தொலைவில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் சந்தேகத்திற்கிடமான முறையில் ஆள் நடமாட்டம் உள்ளதாக யாழ்ப்பாண பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த விடுதிக்கு பொலிஸார் சென்று சோதனையிட்டனர்.

அதன் போது, விடுதியில் எவ்வித பதிவுகளும் இன்றி தங்கியிருந்ததுடன், தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த தவறிய மூன்று யுவதிகளை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட யுவதிகளை விசாரணைகளின் பின்னர் யாழ். நீதவான் முன்னிலையில் முற்படுத்திய வேளை, அவர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான், மூவரையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.




# வீரமணி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்

**யாழ் . விசேட நிருபர்**

தமிழ்நாட்டை சேர்ந்த திராவிட கழக தலைவர் கி.வீரமணி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

நாடாளுமன்ற முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் மறைந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 97ஆவது பிறந்தநாள் நினைவு பேருரை எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள றிம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவே கி. வீரமணி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

# நூறு அடி கடல் ஆழத்தில் மீன்பிடியில் ஈடுபட்டவர் நெஞ்சு வலிப்பால் மரணம்

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில்கடலில்நூறுஅடிஆழத்தில் அட்டை தொழிலில் ஈடுபட்டிருந்த கடற் தொழிலாளி ஒருவர் நெஞ்சுவலிப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த சேவுதாதின் முகமதுதாவீன் (வயது 40) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த அவர் நாகர்கோவில் கடற் பகுதியில் ஆழ்கடல் தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் கடந்த சனிக்கிழமை (17) கரையிலிருந்து 24 கடல் மைல் தூரத்தில் 100 அடி ஆழத்தில் சிலிண்டரை பயன்படுத்தி அட்டை தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை நெஞ்சு வலிப்பதாக்கூறி கடலின் மேற்பகுதிக்கு வந்துள்ளார். இதனை அடுத்து சக தொழிலாளிகள் இவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு அனுமதித்த நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# கிழக்கின் குரல்



நாட்டை கோழைகளிடம் ஒப்படைக்க கிழக்கு மக்கள் தயாரில்லை

## ஜனாதிபதி ரணிலின் கரத்தை பலப்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

ஐ.தே.கட்சி ஒருங்கிணைப்பாளர் கலாநிதி ஏ.எம்.ஜெமீல்

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)



தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை மறந்து, எதிர்கால நாட்டின் நலனில் அக்கறைக்கொண்டு இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கரத்தை பலப்படுத்த அனைவரும் முன்வர வேண்டும் என, அம்பாறை மாவட்ட கரையோரப்பிதேசங்களுக்கான ஐக்கிய தேசிய கட்சி ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கலாநிதி ஏ.எம்.ஜெமீல் தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கையொன்றினூடாக இதனை தெரிவித்துள்ள அவர்,

சீரழிக்கப்பட்டு, சின்னாபின்னமான நிலையில் அதி பாதாளத்திற்குள் தள்ளப்பட்டிருந்த இந்த நாட்டை மீட்டு, பல சவால்களுக்கு மத்தியில் தனியொருவராக துணிந்து நின்று பொறுப்பேற்று, வீழ்ந்த பொருளாதாரத்தை மிக குறுகிய காலத்தில் மீட்டெடுத்த பெருமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே சாரும்.

வீழ்ச்சியை கண்டு ஓடி ஒழிந்த கோழைகள் இந்த நாட்டின் ஆட்சியை கைப்பற்றினால், மீண்டும் பழைய குருடி கதவை திறடி என்ற நிலைமைக்கு நாடு தள்ளப்படும். இந்த வரிசை வாழ்க்கைக்கு அனைவரும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், தனது தனிப்பட்ட தேவைகளுக்காகவும் சுகபோக வாழ்கைக்காகவும் கட்சியை அடகு வைத்து, நாட்டிலுள்ள முஸ்லிம் மக்களை பலிக்கடாவாக்க எடுத்திருக்கும் இம் முயற்சி நிச்சயம் தோல்வியில் முடிவடையும்.

இவர்கள் கூறி வாக்களிக்கும் நிலையில் இன்று முஸ்லிம் மக்கள் இல்லை. தாம் அனுபவித்த கஷ்டங்களையும் துயர்களையும் மக்கள் இன்னும் மறக்கவில்லை.

காலத்திற்கு காலம் தேர்தல் மேடைகளில் தோன்றி வீர வசனம் கூறி மக்களை ஏமாற்றி வாக்குகளை கொள்ளையடித்து அமைச்சர் பதவிகளுக்கு சோரம் போன காலம் மலையேறி விட்டது. மக்கள் வழிப்போக்கர்களிடம் நாட்டை ஒப்படைக்க போவதில்லை என்பது எதிர்வரும் தேர்தல் நிச்சயம் தெளிவுபடுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கிழக்கு மாகாண பெண்களின் வாக்குகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு

பிரதான அரசியல் கட்சிகளின் மகளிர் அணி தலைவிகள் தெரிவிப்பு

மட்டக்களப்பு விசேட நிருபர்

பெண்களுக்கு அரசியலில் 25 சதவீதமான இடத்தினை வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிழக்கு மாகாண பெண்கள் அதிக வாக்குகளை வழங்க தீர்மானித்துள்ளதாக, மட்டக்களப்பு மாவட்ட பிரதான அரசியல் கட்சிகளின் மகளிர் அணி தலைவிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக, மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவித்த, ஐக்கிய தேசியக் கட்சியின் மகளிர் அணி தலைவி சசிகலா விஜயதேவா,

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனைத்து அரசியல் கட்சிக் கூட்டங்களிலும் இன்று பெண்களே அதிகமாக இருக்கின்றார்கள். அதற்குக் காரணம் ரணில் விக்கிரமசிங்க. ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி தேர்தலில் வெல்ல வைக்க தீர்மானித்துள்ளோம்.'

முன்னாள் ஜனாதிபதி நாட்டு மக்களை இக்கட்டான காலகட்டத்தில் விட்டு ஓடிச் சென்றபோது பிரதமராக முதுகெலும்புடன் இந்த நாட்டை பொறுப்பேற்றவரே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. தற்போது வாக்குப் பிச்சை கேட்டு வரும் எதிர்க்கட்சித் தலைவர் அப்போது இந்த நாட்டை பொறுபேற்றிருக்கலாம் அல்லவா? என தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மகளிர் அணி தலைவி சுசிகலா அருள்தாஸ் கருத்து தெரிவிக்கையில்,

எரிபொருள் நிலைய நிலையங்களில் மண்ணெண்ணைக்கு வரிசையில் நின்று உயிரை விட்டவர்களும் இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் தீர்த்து வைத்த ஜனாதிபதிக்கு நன்றி கடனாக வாக்களிப்பதில் என்ன தவறு உள்ளது. ஜனாதிபதிக்கு வாக்களிப்பது நமது மக்களின் கடமை என தெரிவித்தார்.

## வீட்டுக்கு தீ வைப்பு!

கல்குடா தினகரன் நிருபர்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீராவோடையிலுள்ள வீடொன்று நேற்று (19) அதிகாலை 3 மணியளவில் தீப்பற்றி எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் உள்ளவர்கள் உறங்கிக் கொண்டிருந்தபோது, திடீரென தீப்பற்றி எரிந்துள்ள நிலையில், கூக்குரல் சத்தத்தைக்கேட்டு அயலவர்களால் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஓட்டமாவடி மீராவோடை 4 ஆம் வட்டாரம் நூரானியா வீதியிலுள்ள வீடொன்றே இவ்வாறு பகுதியளவில் தீப்பற்றியுள்ளது.

தீப்பரவலை அணைக்கச் சென்ற நபர்களுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதுடன், வீட்டிலுள்ள மின்சாரப்பொருட்கள், தளபாடங்கள் என்பன தீயில் கருகியுள்ளன.

வீட்டுக்குள் நுழைந்த திருடன் ஒருவனால் இவ்வாறு தீ வைக்கப்பட்டிருக்கலாம் என வீட்டார் சந்தேகம் வெளியிட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## இளம் ஊடக செயற்பாட்டாளரான நிலோஜாவுக்கு Media influencer விருது





ஒருங்கிணைந்த தமிழர் பேரவை மற்றும் வெளிநாட்டில் வாழும் தமிழர் நலன்புரிச்சங்கம் இணைந்து நடத்திய, 'கத்தார் தமிழன் விருது 2024' விருது வழங்கும் விழாவில், இளம் ஊடக செயற்பாட்டாளருக்கான Media influencer என்ற விருதை, அம்பாறை மாவட்டம், மீனோடைக்கட்டைச் சேர்ந்த நியாஸ்தீன் பாத்திமா நிலோஜா பெற்றுக்கொண்டார்.

விழாவின் பிரதம அதிதியாக கலந்துகொண்ட சித்ரா சீதாராமன், இந்த விருதை வழங்கி வைத்ததுடன் பொன்னாடை போர்த்தி பாத்திமா நிலோஜாவை கௌரவித்திருந்தார்.

ஒருங்கிணைந்த தமிழர் பேரவை மற்றும் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நலபுரிச்சங்கம் இணைந்து வழங்கிய கத்தார் தமிழன் விருது விழா, கடந்த சனிக்கிழமை (17) துமாமா ICBF காஞ்சனா மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ்விழாவில் கத்தாரில் நாட்டின் முக்கிய பிரமுகர்கள், தொழிலதிபர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கிழக்கு மாகாண சுதேச மருத்துவ ஆணையாளராக டொக்டர் நபீல்



(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளராக டொக்டர் எம்.ஏ.நபீல் கடந்த வாரம் ஆணையாளர் அலுவலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இப்பதவியேற்பு நிகழ்வில், கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எம்.எம்.நசீர், கிழக்கு மாகாண ஆளுநர் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.பாயிஸ் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஏ.எம்.எம்.றபீக், பிரதிப் பிரதம செயலாளர் (பயிற்சி மற்றும் தனியாள் விருத்தி) ஏ.எல்.எம்.அஸ்மி, கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் டொக்டர் எம்.ஏ.நதீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாகாண பணிமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்களினால் டொக்டர் எம்.ஏ.நபீல் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டார். இந்நிகழ்வில் திட்டமிடல், நிதி மற்றும் நிர்வாக பிரிவுகளின் துறைத் தலைவர்கள், வைத்தியர்கள், உத்தியோக்கத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## சமாதான நீதவான்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கிவைப்பு





ஏறாவூர் நிருபர்

நீதியமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட சமாதான நீதவான்களுக்கான நியமனக்கடிதங்கள் உரியவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு, ஓட்டமாவடி பிரதேசத்தில் நேற்று (19) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கௌரவப் பிரஜைகள் ஐம்பது பேருக்கு இந்த நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. நகர அபிவிருத்தி வீடமைப்பு இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர் கலாநிதி எம்.பி முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் வல்லிபுரம் கனகசிங்கம் கலந்துகொண்டார்.

அத்துடன், ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ரப், காத்தான்குடி ஜம்இய்யது உலமா சபை பிரதிநிதி இக்பால் மௌலவி மற்றும் சமூக செயற்பாட்டாளர் எஸ்.கே.எம் பைறூஸ் கான் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கௌரவப் பிரஜைகள் இந்த நியமனக்கடிதங்களைப் பெற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்கள் ஆதரிக்கின்ற ஒருவரே ஜனாதிபதியாக வரவேண்டும்

சாணக்கியன் எம்.பி தெரிவிப்பு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஆதரிக்கின்ற ஒருவரே இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரவேண்டும் எனவும், அப்போதே தமிழ் மக்களின் அரசியல் சார்ந்த விடயங்களை முன்னெடுக்க முடியும் எனவும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி சாயி சிறுவர் விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை (17)நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இம்முறை பல அபிவிருத்தித்திட்டங்களை என்னால் மேற்கொள்ள முடிந்துள்ளது. நாம் அபிவிருத்தி சார்ந்த விடயங்ககளையும் முன்னெடுக்க வேண்டும். எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட உரிமையுடன்கூடிய அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும் என்றுதான் எழுத்தியிருந்தோம். எனவே வடக்கு, கிழக்கு மக்களுக்கு சேவை செய்பவரை நன்கறிந்து எமது மக்கள் தேர்வு செய்ய வேண்டும்.

மிகவிரைவில் எமது கட்சி ஒரு முடிவை அறிவிக்கும். அந்த முடிவுக்கு கட்டுப்பட்டு எமது மக்களும் சேர்ந்து வருவார்கள் என்றால் நிச்சயமாக இப்பிரதேசத்தில் சிறந்த எதிர்காலத்தை அமைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சமூகம் செயற்றிட்டங்களில் பொறுப்பு கூறலுக்கான பயிற்சிப்பட்டறை



அம்பாறை மத்திய தினகரன் நிருபர்

சமூகம் செயற்றிட்டங்களில் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஊடாக நல்லாட்சியை உறுதிப்படுத்தும் நோக்கில், அம்பாறை மாவட்ட சிவில் சமூக மற்றும் சமூக ஊடக செயற்பாட்டாளர்களின் பங்குபற்றலுடன் செயலமர்வொன்று நடைபெற்றது. இந்த செயலமர்வு செயற்படும் WE Connect திட்டத்தின் ஏற்பாட்டில், கடந்த சனிக்கிழமை (17) மாளிகைக்காடு பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இடம்பெற்ற இப்பயிற்சிப் பட்டறையில், அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் சமூக, பொருளாதார மற்றும் சூழலியல் பிரச்சினைகள் உட்பட நிலைபேறான அபிவிருத்தியைப் பாதிக்கும் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஸ்லம் சஜாவின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இப்பயிற்சிப்பட்டறையில், குரல்கள் இயக்கத்தின் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான அம்ஜத் முகம்மட், புழுதி சமூக உரிமைக்கான அமைப்பின் செயற்பாட்டாளர் கோபகன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின், இரண்டாம் அமர்வில் பிரதம அதிதியாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான முன்னாள் வதிவிட பிரதிநிதி சட்ட முதுமானி அப்துல் அஸீஸ், நிகழ்வின் சிறப்பு அதிதியாக அமெரிக்கன் ஸ்பேஸஸ் பணிப்பாளர் முகம்மட் நௌஸாத் ஆகியோர் கலந்து கெண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கல்வி நிர்வாக சேவை – 2 அதிகாரியாக பதவி உயர்வு

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)



அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி அதிபரான இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரி ஏ.எச்.பௌஸ் கல்வி நிர்வாக சேவை தரம் - 2 இற்கு உள்வாங்கப்பட்டு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

சுமார் 16 ஆண்டுகள் ஆசிரியராக சேவையாற்றிய இவர் 2013 ஆம் ஆண்டு கல்வி நிர்வாக சேவை தரம்-3 அதிகாரியாக போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டார்.

இதனடிப்படையில், அதிபர் ஏ.எச்.பௌஸ் கடந்த 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி 26 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில், இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் - 2 இற்கு பதவியுயர்வு பெற்றுள்ளார். இதற்கிணங்க எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி 26 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் ஒன்றிற்கு பதவியுயர்வு பெறும் தகுதியினையும் அவர் பெற்றுள்ளார்.

இளமாணி, முதுமாணி பட்டங்களைப் பூர்த்தி செய்துள்ள இவர், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் 08 வருடங்கள் முகாமைத்துவம், திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் நிர்வாகம் ஆகிய நான்கு பிரிவுகளிலும் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமலை புதிய பாராளுமன்ற உறுப்பினருக்கு வரவேற்பு

கிண்ணியா மத்திய நிருபர்



காலஞ்சென்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் இடத்திற்கு, நியமிக்கப்பட்டுள்ள புதிய பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாஸனை வரவேற்கும் நிகழ்வு, கடந்த சனிக்கிழமை (17) காலை வெருகல் இலங்கைத்துறை முகத்துவாரம் கண்ணகி அம்மன் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்ட தலைவருமான சண்முகம் குகதாஸன், வெருகல் இலங்கைத்துறை முகத்துவாரம் கண்ணகி அம்மன் ஆலய வளாகத்தில் வைத்து கிராம மக்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இதன்போது, இலங்கை தமிழரசு கட்சிக்கு சேவையாற்றிய இரண்டு முதியவர்களும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் வெருகல் பிரதேச செயலாளர் க.சுந்தரலிங்கம், முன்னாள் திருமலை நகரபிதா க.செல்வராசா, வெருகல் பகுதியின் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





"சின்னக்கதிர்காமம்" என அழைக்கப்படும் மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் தீர்த்தோற்சவம் நேற்று (19) திங்கட்கிழமை காலை ஆயிரக்கணக்கான பக்தர்கள் படைசூழ இடம்பெற்ற போது... (படங்கள் : காரைதீவு குறூப் நிருபர்)

# அக்குறணை, குருகொட தாருல் உலூம் அல் மீஸானிய்யா அரபுக் கல்லூரியின் 19ஆவது பட்டமளிப்பு விழா



அக்குறணை, குருகொட தாருல் உலூம் அல் மீஸானிய்யா அரபுக் கல்லூரியின் 19ஆவது பட்டமளிப்பு விழா கல்லூரி மண்டபத்தில் கல்லூரியின் இயக்குனரும் மீஸான் குருப் நிறுவனத்தின் தவிசாளருமான தொழிலதிபர் இஹ்திசாம் மீஸான் முஹிடீன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ. ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக கண்டி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் எச். உமர்தீன் ஹஸரத் உட்பட கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் ஏ. கலீலுர் ரஹ்மான் (நூழாரி) மற்றும் மீஸானிய்யா தொழில் நுட்ப கற்கை நிலையத்தின் பொறுப்பாளர் யூ. முஜிபுர்ரஹ்மான் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள்

மற்றும் அக்குறணை ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் சியாம் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுடன் பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கண்டி மாவட்ட அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் எச். உமர்தீன் எழுதிய ஒரு தொகை நூல்கள் அரபுக் கல்லூரியின் நூலகத்திற்காக இயக்குனர் இஹ்திசாம் மீஸான் முஹிடீன் அவர்களிடத்தில் கையளிக்கப்பட்டது. அக்குறணை அஸ்ஹர் தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபரும் மீஸானிய்யாவின் தமிழ் மொழிப் பாடப் பிரிவின் பொறுப்பாளருமான ஏ.ஆர்.எம் உவைஸ் நிகழ்ச்சித் தொகுப்பினை தொகுத்து வழங்கினார்.

பிரதம அதிதியாக ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) இங்கு உரையாற்றுகையில், ஒரு சமுதாயத்தின் இரு கண்களாக இருப்பவை மஸ்ஜிதுகள், மத்ரஸாக்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர் கலா பீடங்களாகும். நமது சமூகத்தின் ஒரு



கண் மஸ்ஜிதுகளும் மத்ரஸாக்களும் என்றால், மறு கண் பாடசாலைகளும் உயர் கல்வி பீடங்களும் ஆகும். இந்த இரண்டு வகையிலான நிறுவனங்களும் ஆரோக்கியமாக இருக்கின்றபோதுதான் நம் சமூகம் மேம்பாடடைய முடியும் என்பது மிகப் பெரிய உண்மை. இக்கருத்தை ஆரம்பத்தில் வலியுறுத்திக் கூறுகின்றேன் என்றால் சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்னரே இந்த உண்மையைப் புரிந்து வைத்திருந்த ஒரு பெரியாரை நினைவு கூர வேண்டும் என்ற நோக்கத்திலாகும்.

இந்தக் கலாபீடத்தின் ஸ்தாபகராக விளங்கிய மர்ஹூம் மீஸான் ஹாஜியார், பாடசாலைப் படிப்பை முறையாக மேற்கொண்டவரல்ல. ஆனால் அவரிடம் படிப்பறிவு இல்லாத போதிலும் பட்டறிவு, அனுபவ அறிவு இருந்திருக்கிறது. அத்தகைய மனிதர்கள் தான் இந்த நாட்டிலே முஸ்லிம் சமூகத்திற்கு மிகப் பெரிய பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். அவர்களிலே

மர்ஹூம் நளீம் ஹாஜியார் அவர்களும் அடங்குவார்கள். இவர்கள் எல்லோரும் பாடசாலைப் படிப்பைப் பெறாதவர்கள். மிகக் குறைந்தளவில் படித்தவர்கள். ஆனால் அவர்களிடம் பரந்து விரிந்த அனுபவமும் பட்டறிவும், இருந்திருக்கிறது என்பதை அன்றே அவர்கள் சிந்தித்த பாணியும் பாங்கும் நமக்கு சொல்லி இருக்கின்றன. மர்ஹூம் மீஸான் ஹாஜியார் ஏக காலத்தில் நான் குறிப்பிட்ட இரண்டு கண்களையும் கண்டவர்.



மாத்தளை சாஹிராக் கல்லூரியைக் கட்டியெழுப்பியதில் அவருக்கு மிகப்பெரிய பங்களிப்பு இருந்திருக்கின்றது. பல்லாண்டு காலம் மாத்தளை சாஹிராக் கல்லூரியை அவர் முகாமையாளராக நின்று நிர்வகித்து இருக்கின்றார். தன்னுடைய நிதியை வழங்கி தன்னுடைய நிலங்களை வழங்கி இருப்பிடங்களை வழங்கி அந்தப் பாடசாலையைக் கட்டியெழுப்புவதில் பெரிய பங்களிப்புச் செய்திருக்கிறார்.

மறுபக்கம் இந்தப் பிரதேசத்தில் ஒரு மஸ்ஜித் அல்ல இரண்டு மஸ்ஜித் அல்ல பல மஸ்ஜித் உருவாவதற்கு காரணகர்த்தாவாக விளங்கி இருக்கிறார். அந்த வரிசையில்தான் அவர் 1954இல் நம்முடைய தலைமுறையினர்கள் அறிவுத் துறையில் மிளிர வேண்டும்.

உயர் நிலைக்கு வரவேண்டும். குறிப்பாக ஷரிஆ கல்வியைக் கற்றவர்களாக அவர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற உயர்ந்த இலக்கோடு இந்த மீஸானியாவை அவர் தாபிப்பதற்கு உத்தேசித்தார். அன்று விதை போடப்பட்டது. இன்று அது வித்தாக மாறி அது பெரு விருட்சமாக போவதை நானும் நீங்களும் பார்த்துக் கொண்டு இருக்கின்றோம்.

அந்த வகையில் அந்த முன்னோடிகளுக்கு அல்லாஹ்தஆலா நிறைவான நற்கூலிகளை அருள வேண்டும் என்று நாம் பிரார்த்தனை புரிய வேண்டும். அவர்களுக்கு சுவர்க்கத்தை வழங்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் அவர்களுக்கு நாம் எல்லோரும் பிரார்த்தனை புரிய வேண்டும்.

மர்ஹூம் மீஸான் ஹாஜியார், ஒரு தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவராக விளங்குகின்றார் என்பதை நானும் நீங்களும் கண்டுகொண்டு இருக்கின்றோம். அதனுடைய விளைவுகள்தான் இவை. கல்வி முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறார். பொதுக் கல்வித் தேவையை அவர் அறிந்து வைத்திருக்கிறார். பொதுக் கல்வி என்ற வார்த்தையைப் பிரயோகிக்கின்றேன். உலகக் கல்வி என்ற வார்த்தையைத் தான் எல்லோரும் பயன்படுத்துவார்கள். இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் லௌகீகம், ஆன்மீகம் என்ற பாகுபாடுகள் இல்லை. எல்லாம் ஆன்மீக வணக்கம் என்றுதான் இஸ்லாமிய பார்வையில் இருக்கிறது.

அந்தவகையில் பாடசாலைக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தார். மத்ரஸாக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தார். இவற்றையெல்லாம் சாதிப்பதற்கு அரசியல் அதிகாரமும் தேவை என்பதை உணர்ந்திருந்தார் போலும் . அரசியல் செல்வாக்கு இல்லாமல் இவற்றை எல்லாம் சாதிப்பது சாத்தியமற்றது என்பதை அவர் புரிந்திருக்க வேண்டும். அந்த வகையில் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் அவர் அரசியலிலும் பங்களிப்புச் செய்தார். அந்தக் காலத்தில் அரசியல்வாதிகளுக்குப் பின்புலமாக நின்று உழைத்திருக்கிறார் என்பதை வரலாறு எமக்குச் சொல்லிக் கொண்டு இருக்கிறது. அவர் எத்தகையதொரு தொலைதூர நோக்குடைய தலைவராக இருந்துள்ளார்.

எந்தவொரு பணியையும் ஆரம்பிப்பது இலகுவானது. சிரமமானது. மிகவும் கடினம். அசாத்தியமானது. பல இடங்களில் பல வேலைத் திட்டங்கள் தோல்வி அடைவதற்குப் பிரதான காரணம் இரண்டாம் தலைமைத்துவம் உருவாக்கப்படுவதில்லை. தாருல் உலூம் அரபுக்கு கல்லூரிக்கு கிடைத்த மிகப் பெரும் அருள் என்னவென்றால் மீஸான் ஹாஜியார் கண்ட கனவை நனவாக்கும் வகையிலே அவருடைய புதல்வர் செயற்பட ஆரம்பித்ததாகும். குறிப்பாக சிறப்பாக அவருடைய புதல்வர் இஹ்திசாம் மிகவும் அர்ப்பணத்தோடு மிகவும் தியாகத்தோடு இந்தக் கலாசாலையைக் கட்டியெழும்புகின்ற விடயத்தில் எந்தளவு தூரம் அர்ப்பணத்தோடு தியாகத்தோடு ஈடுபட்டு வருகிறார் என்பதை பாராட்டப்பட வேண்டியவரை மனம் விட்டுப் பாராட்ட வேண்டியது மனிதப் பண்பு. நபி வழியுமாகும் எனத்தெரிவித்தார்.



**தாருல் உலூம் அல் மீஸானிய்யா அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் ஏ. கலீலுர்ரஹ்மான் (நுழாரி)**

இன்று உங்களுக்கு மகிழ்ச்சியான நாள், பட்டம் பெறுகின்ற இந்நேரம் மிகச் சிறந்த நேரம். இம்மகிழ்ச்சியைக் கொண்டாடும் உங்களுக்கு நாளை ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு காத்திருக்கிறது. ஒவ்வொரு மாணவனின் வாழ்க்கையிலும் சுயமரியாதைக்கு ஊக்கமளிக்கும் ஒரு தருணமாக உலகத்துக்காக நாட்டிற்காக சமூகத்துக்காக நம்மை நாமே நல்ல பல பணிகள் செய்திட ஒப்படைக்கும் நாளாக இந்நாள் திகழ்கிறது.

அன்று அல்லாஹ்வின் அருளால் மீஸான் ஹாஜியாரினால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி இன்று நாம் பார்த்து மகிழ்ச்சியடையக்கூடிய அளவு வளர்ச்சியடைந்துள்ளது.

அக்குரணை, குருகொடையை பிரப்பிடமாக கொண்ட ஹாஜி சேகு அப்துல் காதரின் மகன் மொஹம்மத் முஹிதீன் என்ற மீஸான் ஹாஜியார் தான் பிறந்த ஊரான அக்குறணையில் சில நற்பணிகளை செய்யும் முகமாக அக்குறணை அஸ்னா மத்திய பள்ளியை அமைப்பதற்கு அப்போது 6666 ரூபாவை வழங்கியதைப் போல் தனது கிராமமான குருகொடை மக்களுக்கு பங்கொள்ளாமடையிலிருந்து குழாய் வழியாக நீர்வசதியை ஏற்படுத்துவதற்காக 27.11.1945 ஆம் ஆண்டு 6324 ரூபா 51 சதம் தர்மம் செய்தார். மற்றுமொரு பணியாக இந்த குருகொடை அரபுக்கல்லூரியை உருவாக்கினார்.

இந்த கல்லூரியின் வரலாற்றுப்பின்னணியைப் பார்க்கும் போது 09.01.1946 ஆம் ஆண்டு மத்ரஸா காணி மீஸான் ஹாஜியாரின் மனைவி ரஹ்மத் உம்மாவின் பெயரில் வாங்கப்பட்டது.

குருகொடை சொந்த ஊராக இருந்ததால் இங்கு வீடு கட்ட வேண்டும் என்ற அன்னாரின் விருப்பத்தின் படி அவர் அன்புக் கணவர் மீஸான் ஹாஜியாரால் 1954 ஆம் ஆண்டு தொடக்கம் கட்டுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட இக்கட்டடம் அரபுக்கல்லூரியாக மாற்றப்பட்டு நாம் பார்த்து கண்குளிர்ச்சியடையக்கூடிய அளவு வளர்ச்சியடைந்துள்ளது.

மீஸான் ஹாஜியாரின் பிள்ளைகள் குறிப்பாக குருகொடையைச் சேர்ந்த அல் ஹாஜ் இஸ்மாயீல் அவர்களின் முயற்சியால் 15.09.1988 ஆம் ஆண்டு இந்த இடத்தை குருகொடை பள்ளி மீண்டும் ரஹ்மத் உம்மாவின் பெயருக்கு மாற்றியது.

அதே வருடம் கைவிடப்படிருந்த கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

03.05.1989 ஆம் ஆண்டு ரஹ்மத் உம்மா அவர்களின் விருப்பத்துடன் அது மத்ரஸா மழ்ஹரில் இஸ்லாம் என்ற பெயருக்கு மாறறப்பட்டது, 1990 ஆம் ஆண்டு கட்டட வேலைகள் பூர்த்தி யாகின. அல்லாஹ்வின் உதவியுடன்

அல் ஹாபிழ் அஹ்ஸன் ஹில்மி, மௌலவி ரிபாய் ஆகியோரின் முயற்சியால் 1992.04.19 ஞாயிற்றுக்கிழமை அல் குர்ஆன் மனனப் பகுதி ஆரம்பிக்கப்பட்டது.

1992 ஆம் ஆண்டுக்குப்பின் கல்லூரியின் பழைய காணியுடன் சேர்த்து பல காணித்துண்டுகள் வாங்கப்பட்டன. பின்பு கல்லூரியின் பெயர் தாருல் உலூம் அல் மீஸானிய்யஹ் என மாற்றப்பட்டது. பின்பு 1995 ஆம் ஆண்டு

அல் ஹாஜ் அன்சார் மற்றும் மௌலவி நயீம் (பஹ்ஜி) ஆகியோரின் ஆலோசனையின் பேரில் அரபு மொழி பகுதி ஆரம்பிக்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டு முதலாவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. அதில் 5 ஆலிம்களும் 55 ஹாபிழ்களும் பட்டம் பெற்றனர்.

2024.08.18ஆம் திகதி வரை ஜோர்தான் உட்பட இலங்கையின் அதிகமான மாவட்டங்களைச் சேர்ந்த 212 மாணவர்கள் அல்குர்ஆனை மனனம் செய்ததுடன் , 182 ஆலிம்கள் கற்கை நெறியினை முடித்துள்ளனர் , குருகொடையைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமியர் அல் குர்ஆனை ஓதியுள்ளனர்.

அல் குர்ஆன் மனனப் பகுதியில் பயின்ற பலர் தேசிய மற்றும் சர்வதேச அல்குர்ஆன் மனனம் மற்றும் கிராஅத் போட்டிகளில் பங்கு பற்றியது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது கல்லூரியின் உப அதிபராக அஷ்ஷெய்க் நிப்ராஸ் மதனியும் அரச பொதுக் கல்விப் பொறுப்பாளராக அஸ்ஹர் தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபர் ஏ.ஆர். எம் உவைஸ் அவர்களும் அர்ப்பணிப்புடன் கடமை புரிவதுடன் பகுதி நேர முழுநேர 39 தகுதியான அனுபவமுள்ள விரிவுரையாளர்கள் சேவையாற்றுகின்றனர். கல்விசாரா ஊழியர்கள் ஐந்து பேர் கடமை புரிகின்றனர்,

நாட்டின் பல பகுதிகளைச்சேர்ந்த 215 மாணவர்கள் தற்போது இங்கு கல்வி கற்கின்றனர்.

அல்குர்ஆன் மனனப்பகுதி ஷரீஆப் பகுதிகளில் கற்கும் இந்த மாணவர்களுக்கு நீச்சல் பயிற்சியுடன் சிங்களம், ஆங்கிலம் போன்றவற்றுக்கான விசேட கற்கை நெறிகள் நடாத்தப்படுகின்றன.

ஆகவே, இக்கல்லூரியின் முன்னேற்றத்தில் அன்று முதல் உதவி செய்த உதவி செய்து கொண்டிருக்கின்ற உதவி செய்யப்போகின்ற அனைவருடைய பாவங்களையும் எல்லாம் வல்ல அல்லாஹ் மன்னித்து அவர்களுக்கு ஈருலக பாக்கியங்களையும் வழங்குவானாக என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**இக்பால் அலி**

## வாழ்த்துரை

எமது அக்குறணை குருகொட தாருல் உலூம் மீஸானியாஹ் அரபுக் கல்லூரியின் 19 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் மாணவர்களுக்கு எனது உள்ளார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அக்குறணை குருகொட தாருல் உலூம் மீஸானியாஹ் அரபுக் கல்லூரியானது இலங்கையின் இஸ்லாமிய அரபுக் கல்லூரிகளில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துள்ளது என்றால் அது மிகையாகாது. இவ்வுயரிய நிலைக்கு இட்டுச் சென்ற கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் கலீலுர்ரஹ்மான், பிரதி அதிபர் ஆசிரியர் குழாத்தினர்களுக்கும் மற்றும் நிர்வாகத்தினர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று பட்டம் பெற்று வெளியேறும் ஆலிம்கள் ஹாபிழ்கள் சிறந்த மார்க்க அறிவும், சமூக அக்கறையுள்ளவர்களாகவும், சிறந்த அழைப்பாளர்களாகவும், தொடர்ந்து கற்பவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்பது எமது நோக்கமாகும்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2022 ஆம் ஆண்டுப் பிரிவில் 16 ஆலிம்களும், 2023 பிரிவில் 13 ஆலிம்களும், பட்டம் பெற்று வெளியேறுகின்றனர். அத்துடன் இந்நிகழ்வில் குர்ஆனை மன்னம் செய்த அல் ஹாபிழ்கள் 11 மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டன.

இத்தகைய உயர் மதிப்புமிக்க அல் ஆலிம் பட்டம் பெற்ற எமது மாணவர்கள் சமூக சீர்திருத்தங்களை மேற்கொள்வதிலும், நமது சமுதாய மார்க்கக் கல்வியினை பாதுகாக்கவும், கல்வி, கலாசாரம் ஒழுக்கம், சகவாழ்வு போன்ற விடயங்களை மேலோங்கச் செய்யவும் தம்மீதுள்ள கடமையாகவும் பொறுப்பாகவும் ஏற்று இறையச்சத்துடன் செயற்பட வேண்டும் என்பது எனது வேண்டுகோளாகும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் எமது சேவையைப் பொருந்திக் கொள்வானாக

**தொழிலதிபர் இஹ்திசாம் மீஸான் முஹிடீன்.**
**(இயக்குனர், தவிசாளர், மீஸான் குரூப் நிறுவனம், தாருல் உலூம் அல் மீஸானிய்யா அரபுக் கல்லூரி)**
**குருகொட, அக்குறணை**















# நடைமுறைக் கல்வியில் அனுபவமே சிறந்த ஆசான்

மாணவர்களை சிறந்த ஆளுமைமிக்க விருத்தியுள்ளவர்களாக மாற்றுவதில் ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இன்றியமையாதவையாகும். கல்வியலாளர்களும் பல வெவ்வேறான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அதற்கமைய தத்துவங்களை வழங்குகின்ற பல்வேறு வகையிலான கோட்பாடுகளில் அண்மைக்காலத்தில் பிரசித்தித்தியமாக வளர்ச்சி அடைந்த ஒரு எண்ணக்கருவே பயன்பாட்டுவாதம் ஆகும்.


அமெரிக்க தத்துவவியலாளரான ஜோன் டியூவி இன் கருத்துக்களின் வெளிப்பாட்டினால் உருவாக்கம் பெற்ற இப்பயன்பாட்டுவாத கோட்பாடு இன்று கல்வியில் பல்வேறு வகையில் தாக்கம் செலுத்தி வருகின்றது.

சமூகத்திற்கேற்றவாறு ஒவ்வொரு மாணவரையும் சிறந்த ஆளுமையுடையவர்களாக மாற்றுவதில் பயன்பாட்டுவாதம் அளப்பரிய தாக்கத்தை செலுத்தி வருகின்றமை மெய்ப்பிக்கத்தக்க ஒன்றாகும். மாணாக்களுக்கு நிகழ்காலத்தேவை எதுவோ அதனை அறிந்து அதற்கேற்றவாறு கற்பித்தலையும் கற்றல் முறைமைகளையும் வழங்க வேண்டும்.

இலங்கையை பொறுத்தவரை கடந்த சில காலங்களாக நவீன சமூகத்திற்கு ஏற்றவாறான மாணவர்களை உருவாக்குவதில் தடம்மாறி சென்றமையை காணக்கூடியதாக உள்ளது. பயன்பாட்டுவாத கல்வியின் மூலம் மாணவர்களின் நிகழ்கால தேவையை கல்வி வழங்கப்பட வேண்டும். இவ்வாறான தேவையை நிறைவேற்றாத கல்வி வீணானது என்பதே பயன்பாட்டுவாதமாகும்.இதனால் இன்றைய நவீன உலகில் இக்கோட்பாடு முக்கியம் வாய்ந்த ஒன்றாக உள்ளது.

குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பிரச்சினைகளையும் சவால்களையும் திறம்பட அணுகி புதியதொரு சூழலில் நவீன தொழில்நுட்பத்திற்கு அமைய நடைமுறை சூழ்நிலைக்கேற்றவாறு இன்னல்களை அணுகி சிறப்பாற்றல் உள்ளவர்களாக பயன்பாட்டுவாதத்தை நடைமுறையுடன் ஒப்பிட்டு கல்வியை புகட்ட வேண்டும்.

உண்மையான அனுபவத்தினை வழங்குவதாக கல்வியானது காணப்பட வேண்டும். வெறுமனே மாணவர்கள் அறிவுக்காக புத்தகங்களை பயன்படுத்தி புத்தக பூச்சிகள் ஆவதை தவிர்த்து, அனுபவத்தோடு கூடிய கல்வியை வழங்க வேண்டும். அனுபவ ரீதியிலான கல்வியே வாழ்வியலுக்கு சிறப்பான விசையும் ஆகும். இவ்வாறே அனுபவத்திற்கு வித்திட்ட ஒன்றாக கல்வியியலில் பயன்பாட்டுவாதம் சிறப்பிடம் பெறுகிறது.




பயன்பாட்டுவாதமானது இலங்கை கல்வி முறையில் பயன்பாட்டில் உள்ளது. ஆரம்பம் மற்றும் இடைநிலை மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக மாணவர் மன்றங்கள் நடத்தப்படல், உயர்தரத்தில் பல்வேறு வகையிலான பாடத்தெரிவுகள், விளையாட்டுப் போட்டிகள், இசை, நடனம், சித்திரம், பேச்சு, வாசிப்பு போட்டிகள், தேசிய மட்ட புத்தாக்க போட்டிகள், கட்டுரை சிறுகதை என பல செயற்பாடுகள் நடைமுறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

இன்றைய இலங்கையில் பயன்பாட்டுவாத கல்விக்கு அமைய தொழில் சந்தைக்கு தயார் செய்யும் வகையிலான தொழில்நுட்ப பாடநெறி, ICT,கலைகளுக்கென தனியான பல்கலைக்கழகங்கள், நுண்கலைத்துறை போன்றவற்றின் ஊடாக மாணவர்களின் திறமைகள் வெளிகொணரப்பட்டவாறு காணப்பட பயன்பாட்டுவாதமே தாக்கம் செலுத்தியவாறு காணப்படுகின்றது.

பயன்பாட்டுவாத கல்வியின் விளைவாக இன்று இலங்கையில் 1000 இருமொழிப் பாடசாலைகள், playschool, smartclassroom காணப்படுதல் மற்றும் வகுப்பறையில் கணணி மூலை, செயற்பாட்டு மூலை, வாசிப்பு மூலை, அழகியல் அலகு, கேட்போர் கூடம், தொழில்நுட்ப அலகு, தொலைக் கல்வி அலகு மற்றும் தொழில்நுட்ப ஆய்வுக்கூடம், EThaksalawa, 5E கற்பித்தல் Audio,Video உண்மை மாதிரிகளை கற்றலில் வளங்கள் போன்ற பல்வேறு செயல்பாடுகள் பயன்பாட்டுவாதத்தின் அடிப்படையில் இலங்கையின் கல்வியில் காணப்படுகின்றன என்பதற்கு பல நடைமுறைகளை உதாரணமாக கூறிக் கொண்டே போகலாம்.

கல்வி என்பது வாழ்க்கையை நடாத்துதல், கல்வி என்பது விருத்தி அடைதல், கல்வி என்பது அனுபவத்தை புதுப்பித்தல், கல்வி என்பது ஒரு சமூக நடவடிக்கை என்ற கருத்துக் கொள்கைகளும் அறிவதற்காக கற்றல், செயலாற்றுவதற்காக கற்றல், இணைந்து வாழ கற்றல் என்ற யுனிஸ்கோவின் நான்கு அடிப்படை கல்வித் தூண்களும் பயன்பாட்டுவாதத்தையே முன்னிறுத்தி இன்றும் நடைமுறையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கம் செலுத்தி வருகின்றது.

பாரம்பரிய கல்வி முறைமையானது கோட்பாடு கட்டமைப்பிற்கு வலுவான முக்கியத்துவத்தை அளிக்கும் அதேசமயம் பயன்பாட்டுவாதம் நடைமுறை பயன்பாட்டிற்கு வலுவான முக்கியத்துவத்தை அளிக்கின்றது. நடைமுறை பயன்பாட்டை கல்வியில் வலியுறுத்துவதன் மூலம் பயன்பாட்டு வாதம் உண்மையான வெற்றிக்கு அவசியமான நடைமுறை திறன்களை வளர்க்க மாணவர்களை ஊக்குவித்த வண்ணம் செயற்பட்டு வருகின்றது.

ஆகவே நாம் கல்வி கற்கின்றோம் என்று கூறுவதை விட நாம் அனுபவத்தைப் பெற்றுக்கொள்கின்றோம் என்பதே சிறப்பான கல்விக்கு இலக்கணம் ஆகும். எனவே கல்வியானது நிஜ உலகில் வெற்றிக்கு இன்றியமையாத திறன்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துவதால் பயன்பாட்டுவாதம் நவீன கல்வியில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

பயன்பாட்டுவாதத்தின் முக்கியத்துவம் மாணவர்களை எதிர்கால வாழ்க்கைக்கு தயார்படுத்துவதாகும். 21ஆம் நூற்றாண்டில் மாணவர்களை வெற்றிக்கு தயார்படுத்தும் கல்விக்கான கட்டமைப்பை வழங்குவதில் பெரிதும் துணை நிற்கின்றது. உலகம் பூகோளமய செயற்பாட்டிற்கு உள்ளாகி பரிணமித்து வருகின்றமையால் கல்வியும் மாற்றங்களிற்குட்பட்டு மாணவர்கள் நிகழ்கால எதிர்காலத்தில் வெற்றி பெற தேவையான திறன்கள், அறிவு, மனப்பாங்கு, என்பவற்றை வளர்ப்பதும் பெற்றிருப்பதும் அத்தியாவசியமான ஒன்றாகும்.

**ராஜரட்ணம் லக்சிகா...✍**
இரண்டாம் வருட கல்வியல் சிறப்புக் கற்கை மாணவி,
கல்வி பிள்ளை நலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

# வாழ்க்கை முழுவதும் கல்வி கற்பது மனிதனை முழுமை பெற்றவனாக மாற்றும்

ஒரு மனிதன் தான் பிறந்த நாள் முதல் ஆயுள் வரை தன்னால் இயலுமான விடயங்களை கற்பானாயின் அது வாழ்நாள் நீடித்த கல்வி ஆகும். இந்தக் கல்வியை கற்பதற்கான காலம், வயது என்பவற்றைக் கணக்கிட முடியாது. 'நான் இளைஞனாக இருக்கும் போது எனக்கு எல்லாம் தெரியும் என நினைத்தேன். முதுமை நிலை அடையும் போதே எனக்கு எதுவும் தெரியாது என்று அறிந்தேன்' என சோக்கிரட்டீஸ் கூறியுள்ளார்.

எனவே இளமைக்காலத்தில் மட்டும் கற்பது கல்வியாகாது. தினம்தோறும் நமது வாழ்க்கை நமக்கான ஓர் அனுபவத்தை கற்றுத்தரும். நாம் வாழும் வரை கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தான் அனுபவிக்கும் குழப்பங்களில் இருந்து தெளிவுகளையும் தெளிவுகளில் இருந்து தீர்மானங்களையும் கற்றுக்கொள்கிறார்கள். இதற்கு வாழ்நாள் நீடித்த கல்வி இன்றியமையாத ஒன்றாகும்.

பாடசாலைக் காலத்தை கடந்த பின்னர் கல்விக்கு முற்றுப்புள்ளி இடுவோரின் எண்ணிக்கை அதிகம். ஆனால் கல்வி என்பது ஒரு தொடர்கதை போன்றது. நமது வாழ்வியலை புரிந்து கொள்ளவும் அறியாமையை விட்டு விலகவும் நமக்கு கல்வி தேவை. அறியாமை ஒவ்வொரு காலமும் ஒவ்வொரு விதமாய் மனிதனை ஆட்கொள்ளும்.

'எவ்வது உறைவது உலகு உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு'

திருக்குறள் இவ்வாறு கூறுவதைப் போல் நாமும் உலக மாற்றங்களோடு இணங்கி உலகத்தோடு ஒட்டி வாழ்வதற்கு நமது அறிவை காலத்திற்கு ஏற்ப பட்டை தீட்ட வேண்டும்.



கல்வி எனும் கரையில் நாம் எவ்வளவு படித்தாலும் ஏதோ ஒன்றை நாம் இன்னும் அறியவில்லை படிக்கவில்லை என்ற நிலையை உருவாக்குவதே கல்வியின் சிறப்பாகும். இன்று கல்விக்கான வாய்ப்புகள் திறந்து விடப்பட்டுள்ளன. யாரும் எங்கு வேண்டுமானாலும் கற்கும் வசதி உள்ளது. வயது, இனம், பால், மதம் என எதுவும் கல்விக்கு தடையாக இருக்கக் கூடாது. திறந்த பாடசாலை, தொலைக்கல்வி, வளர்ந்தோர் கல்வி, விழுமிய கல்வி, பூரண சமூகத்திற்கான கல்வி போன்ற பல கல்வி முறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறாக மனிதன் இடைவிடாது தொடர்ச்சியாக கற்பதனால் அவனால் கற்றல் விருத்தி, மன விடுதலை, சிறந்த பண்பாட்டு அடையாளம், நிம்மதி வேலை வாய்ப்பு போன்றவற்றை அனுபவிக்கலாம்.

வாழ்க்கை நீடித்த கல்வியை தொடர்பவர்களிடம் தொடர்ச்சியான தேடல், புத்துருவாக்க சிந்தனை என்பன காணப்படும். இதனால் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடிவதோடு சமூக குற்றங்கள் குறைந்து சமூகம் மேலெழுவதற்கு இது அடிப்படையானதாகும். வாழ்நாள் நீடித்த கல்வி என்பது பரந்த ஓர் எண்ணக்கருவாக காணப்படுகின்றது. ஒருவன் வாழ்க்கைகாலம் முழுவதும் கற்கவேண்டும், நாட்டிலுள்ள அனைவரும் கற்கவேண்டும், பாடசாலைகளில் மட்டும் அன்றி கற்றல் தொடர்பான அனைத்து நிலையங்களும் ஊக்குவிக்கப்படவேண்டும் என பரந்த பரப்புக்களை இது உள்ளடக்கியள்ளது.

எனவே இதற்காக பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், உயர்கல்வி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள் போன்றவற்றின் எண்ணிக்கைகளை அதிகரிப்பதோடு நவீனமயப்படுத்தல் வசதிகளையும் வினைத்திறனான கற்றல் செயற்பாட்டிற்குத் தகுந்த சூழலையும் ஏற்படுத்த வேண்டும். மற்றும் பட்டங்களுக்கும் தகுதிகளிற்கும் ஏற்ப முறையாக வேலைவாய்ப்புகளை வழங்குவதோடு வேலைநேரங்களை மட்டுப்படுத்தி வேலைத்தளங்களிலும் மேலதிக கல்வியையும் திறனையும் வளர்த்துக்கொள்வதற்கான சந்தர்பங்களை உருவாக்க வழிவகை செய்ய வேண்டும். மேலும் நவீன முயற்சிகள் மற்றும் ஆராய்ச்சிகளின் ஈடுபடுவோரை அரசாங்கம் ஆதரிக்க வேண்டும். அவர்களுக்கு தேவையான நிதி உட்பட பிற வசதிகள், புலமை பரிசில்கள் என்பவற்ற இதற்காக வேண்டி வழங்கலாம்.

பிரதேசவாரியாக நூல்நிலையங்களையும் கலைக்கூடங்களையும் நிறுவுவதோடு தொழில்நுட்பம், விஞ்ஞானம், கலை, இலக்கியம், அரசியல் என அனைத்து துறைரீதியாகவும் ஊக்கப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும்.

தலை சிறந்த புலமை கொண்ட மக்கள் ஒரு நாட்டினுடைய சேம நிதியங்களாவர் என்பதனை கருதி வாழ்நாள் நீடித்த கல்விக்கு அதிக முக்கியத்துவத்தினை வழங்குவதன் மூலம் சகல துறை சார்ந்த அபிவிருத்தியையும் ஏற்படுத்தலாம்.நம்மை எத்தனை செல்வங்கள் கைவிட்டாலும் நாம் கற்ற கல்வி நம்மை எப்போதும் கைவிடாது. ஒருவருக்கு வாழ்நாள் நீடித்த கல்வி என்பது அவசியமான ஒரு விடயமாகும்.

**எம்.ஆர்.எப். ரஹ்னா...✍**
இரண்டாம் வருடம் கல்வியியல் சிறப்பு கற்கை மாணவி.
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை கிழக்கு பல்கலைக்கழகம்

# ஒழுக்கத்தைக் கற்பிப்பதைத் தவிர்ப்பது இன்றைய கல்வியில் காணப்படும் குறைபாடு

கல்வியின் பயன் அறிவு. அறிவின் பயன் பண்பாடு. பண்பாட்டின் பயன் ஒழுக்கம். தனிமனித முன்னேற்றமும் சமுதாயத்தின் வளர்ச்சியும் ஒழுக்கத்தின் பால் பட்டது.

இளவயதிலேயே புயல் போல வருகின்ற தீயஉணர்ச்சிகளை அடக்கி ஆள்வது எப்படி என்று பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். ஒழுக்கநெறி சார்ந்த கல்விமுறை இன்று கானல்நீராகி விட்டது என்பது கசப்பான உண்மையே.

நாம் வாழக்கூடிய உலகில் முதுகெலும்பாக காணக்கூடியவர்கள் மாண வசமுதாயமே. எனவே சிறந்ததொரு மாணவர் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு மாணவர்களுக்குரிய ஒழுக்கங்களை முறையாக கற்றுக் கொடுத்தல் அவசியமாகும்.

இன்று மாணவர்கள் பெரியவர்களுக்கான மதிப்பளிப்பதில்லை. பெற்றோரிடம் உண்மையாக இருப்பதில்லை. பெண்களுக்கு மரியாதை கொடுப்பதில்லை. சகோதரர்களிடம் ஒற்றுமை இல்லை. கஷ்ட நஷ்டங்கள் குறித்து பகிர்வது இல்லை. அக்கம் பக்கம் குறித்த பயமில்லை. சமூகம் பற்றிய நல்லுணர்வோ, நல்லிணக்கமோ, புரிதலோ இல்லை. ஒட்டுமொத்தமாக இதற்கெல்லாம் அடித்தளமாக காணப்படுவது ஒழுக்கம் சரியான விதத்தில் போதிக்கப்படாததுதான்.



மாணவர்களது ஒழுக்கநிலையை நிலைநிறுத்த வேண்டிய பாரிய கடமை இன்றைய பெற்றோருக்கும், பாடசாலைக்கும், கல்வித்துறையினருக்கும், சமூகத்திற்கும் உள்ளது. இதனை விரைந்து செயற்படுத்த நாம் தவறுவோமேயானால் பாரிய விளைவுகளை சமூகம் எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும்.

இன்றைய காலகட்டத்தில் மாணவர்களின் ஒழுக்க சீர்கேட்டிற்கு நாம் மாணவர்களை மட்டுமே குறை கூறுவதால் எப்பயனுமில்லை. மாணவர்களின் ஒழுக்கநெறியை கட்டிஎழுப்புவதில் மேலே கூறிய அனைத்துத் தரப்பினருக்குமே தலையாய கடமையும், பொறுப்பும் உண்டு என்பதில் எவ்வித மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை.

அந்த வகையில் முதலாம் தரப்பினராக இருக்கும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு ஒழுக்கக்கல்வியை பிறக்கும் போதிலிருந்தே கொடுக்க ஆரம்பிக்க வேண்டும்.

'எப்படியாவது சம்பாதித்தால் போதும்'என்கின்ற மிக மோசமான மனநிலை இன்றைக்கு பெற்றோர் அனைவர் மத்தியிலும் வந்துவிட்டது. அதாவது ஒழுக்கக் கல்வியை உதறித் தள்ளிவிட்டு முழுக்கமுழுக்க பாடப்புத்தகங்களை படித்தால்தான் காரும் பங்களாக்களும் என்னும் மனநிலைக்கு பெற்றோர் தள்ளப்பட்டு விட்டார்கள் என்பது நிதர்சனமான உண்மை.

பெற்றோர் தமது பிள்ளைகளிடம் நேரம் செலவிடுவதை கட்டாய கடமையாகக் கருதுவது பிள்ளைகளுக்கான ஒழுக்கநெறியை நெறிப்படுத்தும்.

தற்போது பாடசாலைகளில் ஒழுக்கத்தை போதிக்க முடியாமைக்கு முக்கிய இரு காரணியாக ஆசிரியர்களையும், பெற்றோரையு கூற முடியும். ஒட்டுமொத்தமாக அனைத்து ஆசிரியர்களும் அவ்வாறு இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக சிலஆசிரியர்களின் அநாகரிகமான செயற்பாடுகளும், மாணவர்களுடனான வரம்பற்ற தொடர்புகளும், பணத்திற்காக மாரடிக்கும் தருணங்களும், நேர்மையற்ற செயற்பாடுகளும், பரீட்சைகளிலும், மதிப்பெண்களிலும் மாணவர்களுக்கு மத்தியில் உயர்வு, தாழ்வு என காட்டப்படும் வேறுபாடுகளும் இன்றைய காலகட்டத்தில் மலிந்து காணப்படுகின்றன. அதனால் மாணவர்கள் ஆசிரியர்களுக்கான மதிப்பைக் கொடுப்பதில்லை.

கண்டிக்கச் சொல்லி வளர்க்கச் சொல்லும் பெற்றோர் இருந்த காலத்தில் ஒழுக்கம் செழித்து காணப்பட்டது. தற்போது பிள்ளைகள் மேல் கைவைக்கக் கூடாது என்ற சட்டங்களும் காணப்படுவதால் ஒழுக்கக் கல்வியின் நிலை மாறி மாணவர்கள் அதிகாரிகளாகிஆசிரியர்கள் பயப்படும் காலமாகியுள்ளது. இன்றுஒழுக்கம் இல்லை, நாகரீகம் இருக்கின்றது. அந்த நாகரீகம் ஒழுக்கம் இல்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.' ஒழுக்கம் மேலோங்கி நிலைத்திருந்த காலமெல்லாம் கிழிந்ததை தைத்தார்கள். ஒழுக்கம் சீர்குலைந்து தளரும் காலத்தில் தைத்ததை கிழிக்கின்றார்கள்'

நேர்மறையான தண்டனைகள் கொடுத்தால்தான் ஒருவரிடம் மாற்றம் வரும் என்பது இயற்கை. என்னதான் உளவியல் வளர்ச்சி அடைந்தாலும் இந்த இயற்கையை மாற்ற முடியாது. மாணவர்களிடத்தில் ஒழுக்கக் கல்வி இன்றி புத்தகக் கல்வி மட்டும் காணப்படுவது வீட்டிற்கோ நாட்டிற்கோ எப்பயனுமில்லை.'பெற்றோர் 10 ஆம் வகுப்பு வரை செலவழித்த பணத்தை கூட்டிப் பார்த்தால் கிராமத்தில் 10 ஏக்கர் தென்னந்தோப்பு வாங்கியிருக்கலாம்'என்ற வசனங்கள் கூட மாணவர்களின் ஒழுக்கமற்ற செயற்பாடுகளை காணும்பொழுது வரக் கூடியவை. அறிவையும் அதோடு இணைத்து ஒழுக்கத்தையும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லக் கூடிய கல்விமுறையை இன்றைய கல்வியாளர்களும்,அரசும் மனதில் கொண்டுகல்விக் கொள்கைகளைஉருவாக்கிமாணவர்களைஒழுக்கநெறியில் கொண்டுசெல்வதுகாலத்தின் கட்டாயம்.

சமூகத்தில் ஒழிக்கப்பட வேண்டிய விடயங்களை வாழ்க்கைக்கான பாடங்களாக்கி கல்வியோடு இணைத்துச் செல்ல கல்வித்துறை முன்வர வேண்டும் என்பது இன்று கற்றோரின் நிலைப்பாடாகும்.

**சப்னா மீராசாஹிப்...✍**
இரண்டாம் வருட கல்வியல் சிறப்புக் கற்கை மாணவி,
கல்வி பிள்ளை நலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

# அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் நிதியுதவியில் மலையகப் பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புகள்





கினிகத்தேனை தினகரன் நிருபர்

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் நிதியுதவியுடன் மலையகத்தில் வாழும் வருமானம் குறைந்த பெண்களை சுயதொழில் ஊடாக வலுவூட்டும் வகையில் புதிய செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச்செயற்றிட்டம் குறைந்த வருமானம் பெறும் பெண்களை சுயதொழில் ஊடாக வலுவூட்டி தொழில்முனைவோராக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. இதுதொடர்பில் விளக்கமளிக்கும் நிகழ்வும் அனுபவ பகிர்வும் பிரிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஹற்றன் அஜாந்தா விருந்தகத்தில் நிறுவன நிறைவேற்றுப்பணிப்பாளர் மைக்கல் ஜோக்கின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இவ்வேலைத்திட்டம் தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

சுமார் 60 பெண்களை தெரிவு செய்து அவர்களுக்கு ஆறு நாள் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியின் போது புதிய தொழில் முனைவு தொடர்பாகவும் சந்தை வாய்ப்பு தொடர்பாகவும் மூலப்பொருளை எவ்வாறு முடிவுப்பொருளாக்குவது என்பது தொடர்பாகவும் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன.

எதிர்காலத்தில் இவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கான தரச்சான்றிதழை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் பயனாளிகளில் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

என் கணவர் என்னை விட்டு பிரிந்து சென்றுவிட்டார். எனக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். வாழ்க்கையில் பல பிரச்சினைகளை சந்தித்தேன். அப்போதுதான் பிரிடோ நிறுவனம் இப்படியான வேலைத் திட்டத்தை முன்னெடுத்திருந்தது.

நான் அந்த பயிற்சியில் கலந்து கொண்டு எனக்கொரு சுயத்தொழிலை தேடிக்கொண்டேன். காளான் வளர்ப்புதொடர்பானபயிற்சிபிரிடோ நிறுவனத்தின் ஊடாக முதல் அறுவடையிலேயே ரூ. 19,140 பணத்தை பெற்றுக்கொண்டேன்.

இந்த வருமானத்தின் ஊடாக எனது குடும்பத்தை நடத்தி செல்வதோடு எனது பிள்ளைகளை கற்பிப்பதற்கும் வழி பிறந்துள்ளது. இதற்கான அங்கீகாரத்தை பிரிடோ நிறுவனமே வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனப்படையில் தெரிவு செய்யப்பட்ட 60 பயனாளிகளால் தாம் உற்பத்தி செய்த பொருட்களின் கண்காட்சி நிகழ்வும் அன்றைய தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு கண்காட்சி செய்யப்பட்ட பொருட்களை பலர் கொள்வனவு செய்யக்கூடியதாகவும் இருந்தது.








மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாலக கோட்டகொடவின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் மாத்தளைக்கு விஜயம் செய்த பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜக்ஷ மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டார். (படம்:மாத்தளை சுழற்சி நிருபர்)

# இலவச கருத்தரங்கு



அக்குறணை குறுப் நிருபர்

மடவளை அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கொன்று அண்மையில் நடைபெற்றது. 2024ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான மேற்படி இலவச கருத்தரங்கு இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் தாருல் ஹஸனாத் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் 100ற்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

# சிறந்த தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

## சேறு பூசுவதால் எனது பயணத்தை தடுத்துவிட முடியாது என்கின்றார் வேலுகுமார் எம்.பி

அக்குறணை குறுப் நிருபர்

நாட்டுக்கு சரியான தலைமைத் துவத்தை வழங்கக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதே உண்மையாகும் என கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,



நாட்டிற்கு சரியான தலைமைத்துவத்தை வழங்கக் கூடியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அதற்கமைய துணிச்சலாக முன் வந்து அவரின் வெற்றிக்கு எனது ஒத்துழைப்பை வழங்கி வருகிறேன்.

அது தவிர ஒரு சிலர் கூறுவது போல மதுபான சாலை அனுமதிப்பத்திரமோ வேறு சலுகைகளோ எனக்குக் கிடைக்கவில்லை. நான் அவற்றை எதிர் பார்க்கவும் இல்லை.

எனது பெயரில் நாட்டுக்கு கல்வி வழங்கும் பல நிறுவனங்கள் உள்ளன.

குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எவ்வித அடிப்படையும் இல்லாத குற்றச்சாட்டை என் மீது வைத்து வருகிறார்.

எனவே, சேறு பூசுவதால் எனது பயணத்தை தடுத்துவிட முடியாது. எனது தெரிவே நாட்டு மக்களின் தெரிவாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

# பிறந்து வளர்ந்த லயன் அறையில் தேர்தல் பிரசார காரியாலயம்

## அனுமதி தரக் கோருகிறார் திலகராஜ்

பொகவந்தலாவ நிருபர்





தான் பிறந்து வளர்ந்த லயன் அறையில் தேர்தல் பிரசார காரியாலயத்தை அமைப்பதற்கு விசேட அனுமதி பெற்றுத் தருமாறு, ஜனாதிபதி வேட்பாளர் மயில்வாகனம் திலகராஜ் கேட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட வகையில் தேர்தல் காரியாலயமொன்றை அமைத்துக் கொள்வது தொடர்பாக சிக்கல்களை எதிர்கொள்வதாக ஊடகங்களுக்கு அவர் தெரிவித்தார்.

தனக்கு அதிக செலவில் காரியாலயங்களை அமைக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் தான் பிறந்து வாழ்ந்த மடக்கும்புர வீட்டு லயன் அறையில் தனது தேர்தல் காரியாலயத்தை அமைப்பதற்கு விருப்பம் கொண்டுள்ளதாகவும் இதன்போது தெரிவித்தார்.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, தேர்தல் கண்காணிப்புகளுக்கான சர்வதேச நிறுவனங்களுக்கும் இந்த தகவலை தெரிவிப்பதன் ஊடாக தனக்கு தேர்தல் காரியாலயமொன்று அமைப்பதற்கு லயன் அறையில் விசேட அனுமதி பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டார்.

மேலும், இத்தகைய ஒரு வாழ்க்கைச் சூழலில் தான் மூன்று இலட்சம் குடும்பங்களைக் கொண்ட மலையகப் பெருந்தோட்ட மக்கள் வாழ்கின்றனர். இந்த வாழ்க்கை சூழலில் வாழ்கின்ற மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் உள்ளிட்ட கொள்கை வகுப்பாளர்கள், சர்வதேச நிறுவனங்களுக்கு தெரியப்படுத்துவதற்காகவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றேன். அதன்படி வெல்வதற்காக இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவில்லை, சொல்வதற்காகவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் வட்டகொட பகுதியில் அமைந்துள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.வீ.வேலுப்பிள்ளையின் கல்லறைக்கு மலர் தூவி தனது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

# நுவரெலியாவில் விசித்திர காற்றாடி திருவிழா

நானுஓயா நிருபர்

நுவரெலியாவில் முதல் முறையாக மாநகரசபையின் ஏற்பாட்டில் விசித்திர காற்றாடி திருவிழா கடந்த சனிக்கிழமை (17) ஆரம்பமானது. நுவரெலியா கிரகரி வாவி கரையோரத்தில் நடைபெறும் காற்றாடி போட்டியில் பலவிதமான வண்ணங்களில் 200 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் இணைந்து விசித்திர காற்றாடியொன்றை உருவாக்கி காட்சிப்படுத்தியதுடன் பல வண்ணமய வினோத வடிவிலான பட்டங்களும் பறக்கவிடப்பட்டிருந்தன.

அழகிய வண்ணங்களில் நுணுக்கமான வடிவமைப்புகளுடன் அமைக்கப்பட்டிருந்த மீன்கள், பறவைகள், நட்சத்திரங்கள் போன்ற விசித்திரமான இராட்சத காற்றாடிகள் என காண்போரை வியக்க வைத்தது.

பல்வேறு உருவங்களில் வானில் பறக்கவிடப்பட்ட காற்றாடிகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் கண்டு இரசித்து வருகின்றனர். மேலும் நுவரெலியாவில் முதல் முறையாக காற்றாடி திருவிழா நடைபெற்றமையால் மக்கள் மத்தியில் வரவேற்பு பெற்றது. கடந்த சனிக்கிழமை (17) மற்றும் ஞாயிற்றுக்கிழமை (18) என இரண்டு நாட்களுக்கு நுவரெலியா மாநகரசபையின் ஏற்பாட்டில் விசேட கலாசார விளையாட்டுப் போட்டிகள் மற்றும் களியாட்ட நிகழ்வுகள் நடைபெற்றன. குறிப்பாக தற்போது அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளமையால் கூடுதலான பார்வையாளர்கள் வருகைத்தந்தமை குறிப்பிடத்தக்கது.





முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கான சிறப்பு பரிசில்களும் இதன்போது வழங்கப்பட்டன.

# நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்துமாரி அம்மன் ஆலய தேர்த் திருவிழா

மன்னார் குறுப் நிருபர்

மன்னார் மாவட்டத்தில் இரண்டாவது பெரிய ஆலயமாக காணப்படும் நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (18) மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

தேர்த் திருவிழாவிற்கான விசேட பூஜைகள் நிறைவு பெற்றபின் காலை 10.30 மணியளவில் அம்பாள் தேரேறி வீதி வலம்வந்தார்.

தேர்த் திருவிழாவின் சிறப்பு நிகழ்வாக கட்டைக்காடு தீவுப்பிட்டி பகுதியில் இருந்து செதில் காவடிகள் பறவைக் காவடிகள் நேர்த்திக் கடனாக எடுத்து வரப்பட்டது.

தேர்த் திருவிழாவில் நானாட்டான் பிரதேசத்தில் பல கிராமங்களிலும் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டார்கள்.



கடந்த 5ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய ஸ்ரீ செல்வ முத்து மாரியம்மன் ஆலய மஹோற்சவத்தில் வசந்தோற்சவம் மஞ்சம் சப்பரம், தீர்த்தம் மற்றும் தீ மிதிப்பு திருவிழாவுடன் இந்த வருடத்திற்கான மகோற்சவ திருவிழா நிறைவு பெற உள்ளது. இந்த திருவிழா நிகழ்வுகள் அனைத்தையும் ஆலய பரிபாலனசபையினர் மிகவும் சிறப்பாக செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி தேர்தலில் பா.அரியநேந்திரனின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம்

மாங்குளம் குரூப் நிருபர்

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரனின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் முல்லைத்தீவு மண்ணில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முன்னதாக முள்ளிவாய்க்கால் மண்ணுக்கு சென்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரன், முள்ளிவாய்கால் நினைவு முற்றத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தி, அதன்பின்னர் முல்லைத்தீவு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் முதலாவது தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளார்.

முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்லம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், முன்னாள் யாழ். மாநகர மேஜர் மணிவண்ணன், ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் பத்தி எழுத்தாளர்களான நிலாந்தன், யதீந்திரா உள்ளிட்டவர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டுள்ளனர்.





நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

## அபிவிருத்தி லொத்தர் சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### 300 லொத்தர் சீட்டு விற்பனை கூடங்களை கட்டுதல், வழங்கல் மற்றும் விநியோகம்

**விலைமனு இல.:- DLB/PRO/2024/26**

அபிவிருத்தி லொத்தர் சபைக்காக 300 லொத்தர் சீட்டு விற்பனை கூடங்களை கட்டுதல், வழங்கல் மற்றும் விநியோகிப்பதற்கு ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து அபிவிருத்தி லொத்தர் சபை சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

03. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக (18% வெட் உடன்) 14750 ரூபாவை செலுத்தி மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை (வேலை நாட்களில்) 2024.08.20 ஆம் திகதி தொடக்கம் 2024.09.10 ஆம் திகதி வரை கொழும்பு 02, யூனியன் பிளேஸ், டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, இல. 356, அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் வழங்குநர் மூலம் கோரிக்கை கடிதத்தை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம் என்பதோடு கட்டணம் இன்றி பரீட்சிப்பதற்கு முடியும். கட்டணம் ரொக்கப்பணமாக இருத்தல் வேண்டும்.

04. விலைமனு ஆவணத்தில் உள்ளவாறு விலைமனு பிணை ஒன்றை கொண்டதாக விலைமனு இருத்தல் வேண்டும்.

05. விலைமனு ஆவணங்களில் கோரப்பட்டவாறு அனைத்து விபரங்கள;/ தகவல்களை விலைமனுதாரர்கள் வழங்குதல் வேண்டும்.

06. அனைத்து விலைமனுதாரர்களும் குறிப்பிட்ட விலைமனுவுக்காக ‘1987 இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு’ அமைய ஒப்பந்த பதிவு சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும். அதனை சமர்ப்பிக்காவிட்டால் விலைமனு நிராகரிக்கப்பட்டதாக கருதப்படும்.

07. விலைமனு நிபந்தனைகளின்படி, விலைமனுக்களை 2024.09.11ஆம் திகதி பி.ப. 02.30 அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை, 356, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 2, இலங்கை என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘300 லொத்தர் சீட்டு விற்பனை கூடங்களை கட்டுதல், வழங்கல் மற்றும் விநியோகம்’ என்று குறிப்பிட்டு விலைமனுக்களை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. விலைமனுக்களை 2024.09.11ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கொழும்பு 02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, 356, அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். 2024.09.11ஆம் திகதி பி.ப. 02.30 இற்கு விலைமனுக்கள் மூடப்படுவதோடு அதன் பின்னர் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

09. www.dlb.lk என்ற அ.லொ.ச. இன் இணையதளத்தில் இருந்து விலைமனு ஆவணங்களை பார்க்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 02.**
**தொ.: 011 4824824**
**www.dlb.lk**
2024.08.20

DEVELOPMENT LOTTERIES

# கேள்விக்கான அழைப்பு

**மாலிம்பட பிரதேச சபை**

## மாலிம்பட சந்தை மேல் மாடியின் மிகுதி வேலை நிர்மாணம் கல்எந்தகுட்டிய சனசமுக மண்டபத்தின் மிகுதி வேலை நிர்மாணம்

01. மாலிம்பட பிரதேச சபையின் பெறுகைக் குழுவினால் கீழ்க்காணும் கைத்தொழில்களை நிர்மாணிப்பதற்காக தேசிய போட்டி கோரல் ஊடாக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
    - I. மாலிம்பட சந்தை மேல் மாடியில் மிகுதி வேலை நிர்மாணித்தல் மதிப்பிடப்பட்ட தொகை ரூ. 9243647.17
    - II. கல்எந்தகுட்டிய சனசமுக மண்டபத்தின் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்தல் மதிப்பிடப்பட்ட தொகை ரூ. 6810394.62

02. நிதிச் சுற்றுநிருபம் 4/2016(III)இன் பிரகாரம் நிர்மாண கைத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) கட்டிடங்களுக்கான C6 அல்லது C7 தரங்களில் தென் மாகாணத்திற்குள் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்படும்.

03. கேள்வி ஆவணங்களை 2024.08.20 முதல் 2024.09.03 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து ஒரு விண்ணப்பத்திற்கு ரூ. 2500.00 மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

04. சமர்ப்பிக்கப்படும் கேள்விக்காக முறையே ரூ. 10000.00 மற்றும் ரூ. 7000.00 மீளளிக்கப்படும் கேள்விப் பிணையொன்று காசாக அல்லது வங்கிப் பிணை மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்விகள் 2024.09.03 பி.ப. 2.00 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விகளை சமர்ப்பித்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள பிரதிநிதியொருவருக்கு அவ் வேளையில் சமுகமளிக்கலாம்.

06. மேலதிக தகவல்களுக்கு கீழ்க்காணும் அலுவலக இணையதளத்தை பாவிக்கவும்.

**இணையதள முகவரி - www.malimbadaps.lk**
**தொ.பே. இலக்கம் அலுவலகம் - 041-2240208**
**(செயலாளர் அல்லது கைத்தொழில் விடய அதிகாரி)**
**பெக்ஸ் இலக்கம் - 041-2240093**
**மின்னஞ்சல் முகவரி: malimbada.ps.@gmail.com**

**தலைவர்,**
**மாலிம்பட பிரதேச சபையின் பெறுகைக் குழு,**
**மாலிம்பட பிரதேச சபை, மாலிம்பட,**
**பாலடுவ.**




**இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு**

## கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**(ஒப்பந்த இல. EPD/F08/02(Transport)/2024**

### 2025ஆம் வருடத்தில் பாடசாலை பாடப் புத்தகங்களை போக்குவரத்து செய்வதற்காக கிலோ மீற்றர் ஓட்டக் கொடுப்பனவு அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல்

# விலைக்கோரலுக்கான அழைப்பு

01. பத்தரமுல்ல, பெலவத்த, இசுறுபாய, 06ஆம் மாடியில் அமைந்துள்ள கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் கிலோ மீற்றர் ஓட்டக் கொடுப்பனவு அடிப்படையில் 2025ஆம் வருடத்திற்கான பாடசாலைப் பாடப் புத்தகங்களைப் போக்குவரத்துச் செய்வதற்காக பின்புற கதவுகளை தாழிட்டு மூடக்கூடிய, முழுமையாக மூடப்பட்ட கீழே தரப்பட்டுள்ள நிறை வகுப்புகளுக்கு இயைபான வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கையின் வாகன உரிமையாளர்கள் மற்றும் வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| லொறிகளின் நிறை வகுதி | புத்தகக் கொள்ளளவு (பாடப் புத்தகங்களின் எண்ணிக்கை) | நாளாந்தம் வழங்க வேண்டிய லொறிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| (அ) 4.2 தொன் நிகர நிறை அல்லது அதற்கு மேற்பட்ட லொறி | 20,000க்கு அதிகமானவை | 10 - 15 இடையில் |
| (ஆ) 4.2 தொன் 1.5 தொன்னுக்கு இடைப்பட்ட நிகர நிறை லொறி | 20,000க்கு குறைவானவை | 10 - 15 இடையில் |
| (இ) 1.5 தொன் நிகர நிறைக்கு குறைவான லொறி | 5,000 முதல் 8,000 வரை | 4 - 6 இடையில் |

விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் ஒவ்வொரு நிகர நிறை வகுதியின் கீழ் குறைந்தபட்சம் இரண்டு லொறிகளின் உரிமை போக்குவரத்து நிறுவனத்தின் பெயரில் அல்லது போக்குவரத்து நிறுவனத்தின் உரிமையாளரின் பெயரில் இருத்தல் வேண்டும்.

2. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் அடிப்படையில் (NCB) விலைக்கோரல்கள் இடம்பெறும்.

3. மாற்றுவழி விலைக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு (Black listed) உட்படாதவராக இருத்தல் வேண்டும்.

5. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 0112-785306 எனும் தொலைபேசி இலக்கம் மற்றும் 0112-787515 எனும் தொலைநகல் இலக்கங்களினூடாக பிரதி ஆணையாளர் (விநியோகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை இசுறுபாய, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 06ஆம் மாடியில் அமைந்துள்ள நிதிப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. விலைமனுக்களைக் கொள்வனவு செய்வதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதான கணக்காளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்தல் வேண்டும் என்பதுடன் 2024-08-20ஆம் திகதி முதல் 2024-09-02ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 20,000.00 ரூபாவை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

7. விலைமனுக்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 06ஆம் மாடி, இசுறுபாய, பெலவத்த, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 2024-09-03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து சமுகம்தந்துள்ள விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

8. பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

9. சகல விலைமனுக்களும் 1,800,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த பிணை முறியானது 2024-12-31ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

11. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஊழியர்கள் அல்லது அவர்களின் வாழ்க்கைத் துணை அல்லது அவர்களைச் சார்ந்துள்ளவர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடியாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,**
**6ஆம் மாடி, ‘‘இசுறுபாய’’,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
2024-08-20.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

## அபிவிருத்தி லொத்தர் சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### சுரண்டும் லொத்தர் சீட்டுகளின் வடிவமைப்பு, மேம்பாடு, அச்சிடுதல் மற்றும் வழங்கல்

**விலைமனு இல. - DLB/PRO/2024/25**

ஓர் ஆண்டு காலத்திற்காக சுரண்டும் அட்டைகள்/ சீட்டுகளுடன் இறப்பர் பூசப்பட்ட மாறுபட்ட தரவுகளை அச்சிடுவதில் குறைந்தது 03 ஆண்டுகள் அனுபவம் கொண்ட பொருத்தமான மற்றும் தகுதியுடைய உள்ளூர் விலைமனுதாரர்களிடம் இருந்து சுரண்டும் லொத்தர் சீட்டுகளின் வடிவமைப்பு, மேம்பாடு, அச்சிடுதல் மற்றும் வழங்கலுக்காக அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.


1. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
2. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு தேவையான தகைமையில் பின்வரும் அளவுகோல்கள் அடங்கும்,
    - a. உள்ளூரில் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர் விலைமனு திறக்கப்படும் திகதிக்கு முன் குறைந்தது 03 ஆண்டு காலத்திற்கு கூட்டிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் (உள்ளூர் உரிமை 51% அல்லது அதற்கு மேல்).
    - b. வழங்குநர் பின்வரும் ஏதாவது ஒன்றாக இருத்தல் வேண்டும்.
        - i. பொது வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனம் ஒன்றாக அல்லது
        - ii. தனியார் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனம் ஒன்றாக அல்லது
        - iii. கூட்டு முயற்சி ஒன்றாக விலைக்கேட்பில் ஈடுபட விரும்பும் ஒரு தரப்பாக இருந்தால், குறிப்பிடப்பட்ட வர்த்தகம் இலங்கை நிறுவன பதிவாளர் திணைக்களத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனம் ஒன்றாக பதிவு செய்திருத்தல் வேண்டும். வழங்குநரின் தகைமையின் கீழ் விலைமனுதாரரின் அனுபவத“தின் விதியில், முன்னாள் நிறுவனங்கள்/ அமைப்புகளின் (கூட்டு முயற்சி அமைப்புகள்) தொடர்புடைய துறையிலான அனுபவம் தனியாக கருத்திற் கொள்ளப்படும்.
        - iv. அரசுக்கு சொந்தமான நிறுவனம்/ கூட்டுத்தாபனம்
    - c. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் நேரத்தில், விலைமனுதாரர் (3.b.iii இன்படி புதிதாக பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றாயின்) இலங்கை அச்சு ஆலை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
    - d. Film plates மேற்கொள்வது தவிர்த்து அனைத்து அச்சு வேலைகளும் ஒரே கூரையின் கீழ் மேற்கொள்ளல் வேண்டும், அதேபோன்று தெரிவு செய்யப்படும் அச்சகம் தமது சார்பில் Film plates மேற்கொள்ளும் தரப்புடன் வெளிப்படுத்தப்படாத ஒப்பந்தம் ஒன்றை செய்திருத்தல் வேண்டும் என்பதோடு அந்த உடன்படிக்கையின் பிரதி ஒன்று அபிவிருத்தி லொத்தர் சபையிடம் கையளித்தல் வேண்டும்.
    - e. இந்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக தமது திறமையை நிரூபிக்கும் ஆவண அத்தாட்சியை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு அதில் விலைமனு ஆவணத்தின் “C” இணைப்பில் தரப்பட்டுள்ளவாறு கடந்த கால அனுபவம், வாடிக்கையாளர், இருக்கு ஊழியர்கள், நிதி நிலை மற்றும் மற்ற தொடர்புடைய விடயங்கள் உள்ளடங்குதல் வேண்டும்.
    - f. விலைமனுதாரர் கணினியில் இணைக்கப்பட்ட in-line/off- line மை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சுரண்டும் அட்டைகள்/ சீட்டுகளுடன் இறப்பர் பூசப்பட்ட மாறுபட்ட தரவுகளை அச்சிடலில் குறைந்தது மூன்று ஆண்டுகள் அனுபவம் மற்றும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட மற்ற தேவைகளை பெற்றிருத்தல் வேண்டும்.
3. விலைக்கேட்புக்கான தகுதிக்கு, விலைமனுதாரர் விலைமனு ஆவணத்தில் உள்ள தகைமை அளவுகோளின் தேவை நிபந்தனைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதோடு தொடர்புடைய துறையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றாகவும் பெறுகை வழிகாட்டல் அல்லது பெறுகை நிறுவனத்தினால் முன்னெடுக்கும் அபகீர்த்தியானோர் நடைமுறைகளுக்கு அமைய அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனு ஆவணங்களின் தொகுதி ஒன்றை 2024.08.20 ஆம் திகதி தொடக்கம் 2024.09.11 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கு இடையே கட்டணம் இன்றி கொழும்பு 02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, இல. 356 இல் அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகை பிரிவில் பரீட்சிக்க முடியும்.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக ரொக்கப்பணத்தில் (18% வெட் உட்பட) 20,000.00 ரூபாவை செலுத்தி கொழும்பு 02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, இல. 356 இல் அபிவிருத்தி லொத்தர் சபை, தலைவருக்கு வர்த்தக முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்து 2024.08.20 ஆம் திகதி தொடக்கம் 2024.09.11 ஆம் திகதி வரை (பொது விடுமுறை நாட்கள் தவிர) திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப. 09.00 மற்றும் பி.ப. 3.00 இற்கு இடையே கொழும்பு 02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, இல. 356 இல் அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகை பிரிவில் இருந்து விலைமனு ஆவணங்களை வாங்கலாம்.
6. அனைத்து விலைமனுக்களும் கொழும்பு 02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, இல. 356 இல் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு வங்கி உத்தரவாதம் அல்லது இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து அளிக்கப்பட்ட 118 நாட்களுக்கான BDS இன் ITB 20 இல் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு விலைமனு பிணை தொகை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுதாரர்களும் குறிப்பிட்ட விலைமனுவுக்காக ‘1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு’ அமைய ஒப்பந்த பதிவு சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.
8. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, இல. 356 இல் அபிவிருத்தி லொத்தர் சபையில் 2024.09.02 ஆம் திகதி பி.ப. 2.30 இற்கு இடம்பெறும்.
9. விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணத்தில் உள்ள தேவைகளின்படி அனைத்து விரிவான தகவல்களையும் வழங்குதல் வேண்டும்.
10. இரு பிரதிகளிலான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024.09.12 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் ‘தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (DPC), அவதானத்திற்கு, அபிவிருத்தி லொத்தர் சபை, இல. 356, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 2’ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் இந்த நோக்கத்திற்காக பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்பு பெட்டியில் இடுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘அபிவிருத்தி லொத்தர் சபைக்கு சுரண்டும் லொத்தர் சீட்டுகளின் வடிவமைப்பு, மேம்பாடு, அச்சிடுதல் மற்றும் வழங்கலுக்கான விலைமனு’ என்று குறிப்பிடுதல் வேண்டும். விலைமனு பெயர் மற்றும் விலைமனு இலக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.
11. அனைத்து விலைமனுக்களும் மேலதிக அறிவித்தல் விடுக்கப்படாது மேலுள்ள முகவரியில் 2024.09.12 ஆம் திகதி பி.ப. 2.30 க்கு திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் முறையான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு பங்கேற்க கோரப்படுகிறது. தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது நிராகரிக்கப்படும்.
12. எந்தக் காரணமும் கூறாது எந்த ஒரு அல்லது அனைத்து கூறுவிலைகளையும் அல்லது அதன் எந்த ஒரு பகுதியையும் ஏற்பது அல்லது நிராகரிப்பது அல்லது பெறுகை வழிகாட்டலின்படி மேலதிக விபரங்களுக்காக அழைப்பு விடுக்கும் ஏக உரிமை திணைக்கள பெறுகைக் குழு (DPC) வசமானது.
13. விலைமனு ஆவணங்களை மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரம் மற்றும் திகதியில் கட்டணம் இன்றி பரீட்சிக்க முடியும். அதேபோன்று, அபிவிருத்தி லொத்தர் சபை இணையதளத்திலும் (www.dlb.lk) இதனை பார்க்க முடியும்.
14. தேவையெனில் மேலதிக விபரங்களை, கொழும்பு 02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, இல. 356 இல் அபிவிருத்தி லொத்தர் சபையின் உதவி பொது முகாமையாளர் (பெறுகை) இடமிருந்து ITB 07 இல் குறிப்பிடப்பட்ட காலத்தில் பெற முடியும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 2.**
**தொ.: 011 4824824**
**www.dlb.lk**
2024.08.20

DEVELOPMENT LOTTERIES

## சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**



106
**கார்கள்**
**விற்பனைக்கு**

HR-9304 HYUNDAI ACCENT 2001, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு-03. தொ.பே. 0711210810. 056288




117
**வேன்கள்**
**விற்பனைக்கு**

250-2370 NISSAN 1993, VAN கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு-03. தொ.பே 0714 542298. 056301



119
**பஸ்கள், லொறிகள்**
**விற்பனைக்கு**

DAD-4725 TATA SUPER ACE 2016, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு-03. தொ.பே. 0711210810. 056297



122
**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
**விற்பனைக்கு**

BGX-5987 HONDA DIO 2018, MOTOR CYCLE கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு-03. தொ.பே. 0711210810. 056291

**Repeat Your Ad For Better Offers**

# HNB FINANCE PLC
# பெறுமதிமிக்க ஏல விற்பனை

95 டீசல் மற்றும் பெட்ரோல் மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகளின் பாரிய ஏல விற்பனை 2024 ஆகஸ்ட் 23 அன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.00

**HNB Finance PLC** அநுராதபுரம் இடம்பெறும்
இல. 562/127, டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.

2024 ஆகஸ்ட் 20, 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் மு.ப. 8.30 -– பி.ப. 4.00 இற்கு இடையெ அநுராதபுரம் மற்றும் பிலியந்தலை கூடத்தில் பரீட்சிக்கலாம்

அநுராதபுர கூடம் - இல. 562/127, டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம். 0710 292 198 (சனத்)
பிலியந்தலை கூடம் - இல. 94, முத்தெட்டுவ வத்த, ஹதிகம, பிலியந்தலை. 0710 292 036 (வசந்த)

தலைமை அலுவலக இல. 0710 294 245 (புத்திம)

| VEHICE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| **ANURDHAPURA YARD** | | |
| **MOTOR JEEP** | | |
| 301-3XXX | LANDROVER - FREELANDER I 8 I | 1999 |
| **MOTOR CYCLE** | | |
| NC BFQ-6XXX | MAHINDRA-GUSTRO 110CC | 2017 |
| NC BGP 0XXX | MAHINDRA-GUSTRO 110CC | 2018 |
| NC BIW-3XXX | T V S - WEGO 110CC | 2019 |
| **MOTOR LORRY & TIPPER** | | |
| NC PR-4XXX | TATA - ACE | 2011 |
| EP DAF-5XXX | TATA - XENON LIGHT TRUCK | 2016 |
| EP PY-0XXX | TATA - SUPPER ACE | 2013 |
| NC PU-2XXX | TATA - ACE EX | 2012 |
| NW DAB-4XXX | TATA - ACE EX2 | 2015 |
| NC DAC-4XXX | TATA - SUPER ACE | 2015 |
| NW DAA-9XXX | TATA - ACE EX2 | 2015 |
| NW DAE-4XXX | TATA - ACE HT2 | 2016 |
| NC DAF-4XXX | TATA - SUPER ACE | 2017 |
| NP LH-6XXX | LANKA ASHOK LEYLAND - COMET TIPPER 1613 | 2010 |
| **TRACTOR** | | |
| NC RH-8XXX | NEW HOLLAND -3230 TX SUPER – 4WD | 2021 |
| SG RG-9XXX | TAFE - 5245 DI | 2020 |
| **MOTOR VAN** | | |
| 252-2XXX | TOYOTA - LH103 | 1995 |
| NC JE-1XXX | MAZDA - BONGO | 1998 |
| **THREE WHEELERS** | | |
| NC JS-0XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2004 |
| NW JI-0XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2004 |
| NW QA-1XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2005 |
| NW QB-7XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2005 |
| NC QE-4XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2006 |
| NC QF-1XXX | BAJAJ - AUTO RE 2 STROKE | 2006 |
| WP QH-6XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2006 |
| NW QM-3XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| NW QM-2XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| UP QN-1XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| NC QQ-4XXX | BAJAJ - AUTO AR4S | 2008 |
| NW QT-5XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| CP QU-4XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| NW QV-0XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| CP QS-9XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| NW YF-0XXX | BAJAJ - AR RE 200 | 2010 |
| NW QZ-6XXX | BAJAJ - AR4S-UG | 2010 |
| NC YH-2XXX | BAJAJ - RE205 | 2010 |
| NW YO-6XXX | BAJAJ - RE205 | 2011 |
| NW YV-8XXX | BAJAJ - RE205 | 2011 |
| NW YV-1XXX | BAJAJ - RE205 | 2011 |
| NC YV 2XXX | BAJAJ - RE205 | 2011 |
| NW YS-1XXX | BAJAJ - RE205 | 2011 |
| NW AAJ-4XXX | BAJAJ - RE 205 | 2013 |
| NC AAN-1XXX | BAJAJ - RE 205 | 2013 |
| NC AAL-7XXX | BAJAJ - RE 205 | 2013 |
| NW ABB-7XXX | BAJAJ - RE | 2015 |
| NW ABA-2XXX | BAJAJ RE | 2015 |
| CP ABU - 7XXX | BAJAJ - RE | 2020 |
| **PILIYANDALA YARD** | | |
| **MOTOR JEEP** | | |
| NC KH-9XXX | MICRO - KYRON 200XDI | 2009 |
| **MOTOR CAR** | | |
| WP CAP-1XXX | BMW- I3 | 2014 |
| UP HV-3XXX | RENAULT - LAGUNA | 2003 |
| 19-6XXX | MAZDA - MISTER LX | 1995 |
| WP CAX-9XXX | SUZUKI - CBA-WB42S BALENO | 2016 |
| WP CAR-5XXX | RENAULT -KWID | 2016 |
| **MOTOR CYCLE** | | |
| WP BIU-0XXX | T V S - APACHE RTR 160 | 2019 |
| WP BGM-6XXX | HERO -MAESTRO EDGE 110 | 2018 |
| **MOTOR LORRY & TIPPER** | | |
| SG PU-1XXX | MAHINDRA - MAXXIMO | 2012 |
| WP DAG-5XXX | TATA - 207 RX PICK UP | 2017 |
| WP LI-6XXX | TATA - LPK 1615 | 2011 |
| **THREE WHEELERS** | | |
| NW GZ-8XXX | BAJAJ - BAJAJ AUTO | 2002 |
| WP HR-5XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2003 |
| WP QA-9XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2005 |
| WP QA-8XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2005 |
| WP QC-2XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2005 |
| WP QG-5XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2006 |
| WP QG-7XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2006 |
| WP QM-5XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| WP QK-7XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| WP QL-1XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| WP QK-2XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| NW QK-6XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| UP QO-2XXX | BAJAJ - AUTO AR4S | 2008 |
| SG QO-0XXX | BAJAJ - AUTO AR4S | 2008 |
| NW QS-2XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| WP QT-5XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| WP QV-1XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| WP YE-2XXX | BAJAJ - AR RE 200 | 2010 |
| WP YB-4XXX | BAJAJ - AR4S-UG | 2010 |
| SP YB 5XXX | BAJAJ - AR4S-UG | 2010 |
| UP YA-0XXX | BAJAJ - AR4S-UG | 2010 |
| SG YD-1XXX | BAJAJ - AR4S-UG | 2010 |
| NC YL-0XXX | BAJAJ - RE205 | 2011 |
| SP YP-5XXX | BAJAJ - RE205 | 2011 |
| SP YU-2XXX | BAJAJ - RE205 | 2011 |
| SP YN-2XXX | BAJAJ - RE205 | 2011 |
| SP YW-7XXX | T V S - KING | 2012 |
| WP YY-5XXX | BAJAJ - RE205 | 2012 |
| WP YX-6XXX | BAJAJ - RE205 | 2012 |
| WP AAC-5XXX | BAJAJ - RE205 | 2012 |
| WP AAJ-8XXX | BAJAJ - RE205 | 2013 |
| UP AAP-1XXX | BAJAJ - RE | 2014 |
| NW AAQ-2XXX | BAJAJ - RE | 2014 |
| WP AAR-6XXX | BAJAJ - RE | 2014 |
| WP ABC-8XXX | BAJAJ - RE | 2015 |
| WP ABQ-0XXX | BAJAJ - RE | 2017 |
| WP ABR-3XXX | BAJAJ - RE | 2018 |

**HNB Finance PLC** நிறுவனத்திற்கு அறவிடப்பட வேண்டிய கடன் தொகையை அறவிடுவதற்காக அவர்களின் கடனாளிகள் சார்பில் மேலுள்ள வாகன ஏல விற்பனை நடத்தப்படுகிறது.

**விற்பனை நிபந்தனைகள்:**

- உள் நுழைவு: ஏல விற்பனை தினத்தில் ஒருவருக்கு மீளளிக்கப்படாத ரூபா 2,000 அனுமதிச் சீட்டு மற்றும் ரூபா 10,000 மீளளிக்கப்படும் வைப்புத் தொகை மூலம்.
- கொடுப்பனவு: சுத்தியல் வைக்கப்பட்ட பின் ஆரம்பத்தில் மீளளிக்கப்படாத 25% ரொக்கப் பணம் வைப்புச் செய்ய வேண்டும் என்பதோடு எஞ்சிய 75% தொகையை 2024 ஆகஸ்ட் 28 ஆம் திகதி புதன் பி.ப. 3.00 மணி தாமதிக்காது இல. 168, நாவல வீதி, நுகேகொடை அல்லது எந்த ஒரு **HNB Finance PLC** கிளையிலும் செலுத்தி அகற்றிக்கொள்ளல் வேண்டும்.
- எந்த ஒரு வாகனம்/ வாகனங்களை முன் அறிவித்தல் இன்றி ஏல விற்பனையில் இருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை முகாமைத்துவம் வசமானது.
- ஏலதாரரின் முடிவு இறுதி முடிவாகும்.

ஏ என் அல்கெவத்த ஒக்ஷனிய(ர்)
**A N ALGEWATHTHA AUCTIONEER**
No.333, Janajayacity, Rajagiriya.
m. +94 71 790 5 790
e. algewaththaauctioneer@gmail.com
AUCTIONEER
Black Tie Service with True Aloha!
www.lankaauction.lk

# வாகன விற்பனை

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAA-1030 | மஹிந்திரா | 2015 | ரத்தினபுரி |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

ரத்தினபுரி
0774 857 351

# For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342
+94 112429343

### சுகாதார அமைச்சு
## லேசர் இயந்திரம் (கண்) கொள்வனவு செய்தல் – 2024
### விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவ

விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு லேசர் இயந்திரத்தை (கண்) வழங்குவதற்கான பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் ஆரம்பிக்கும் திகதி - 2024.08.22
கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் முடிவுறும் திகதி - 2024.09.09
கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும் திகதி - 2024.09.11 மு.ப. 10.00

இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு சுகாதார அமைச்சின் இணைய தளமான https://www.health.gov.lk இற்கு பிரவேசித்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,**
**சீதுவ.**

# பெறுகை அறிவித்தல்
## குளியாப்பிட்டிய பிரதேச சபை

2025 ஆம் ஆண்டுக்காக குளியாப்பிட்டிய பிரதேச சபைக்கு சொந்தமான ஆதனங்களை குத்தகைக்கு விடுதல் முதல் முறைக்காக 2024.08.20 ஆம் திகதி தொடக்கம் 2024.09.10 ஆம் திகதி மு.ப. 10.00 வரை என்னால் விலைமனுக்கள் ஏற்கப்படுவதோடு அன்றைய தினத்திலேயே மு.ப. 10.30க்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

விலைமனு விண்ணப்பப் படிவங்கள் 2024.08.20 ஆம் திகதி தொடக்கம் 2024.09.09 ஆம் திகதி வரை பிரதேச சபை அலுவலகத்தில் இருந்து மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ள முடியும். குறித்த விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளும்போது சபையினால் குத்தகைக்கு விடப்படும் ஆதன அட்டவணை மற்றும் கேள்வி நிபந்தனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

2025 ஆம் ஆண்டுக்காக ஆதனங்களை குத்தகைக்கு பெறும்போது அந்த கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய செயற்படுவதற்கு விண்ணப்பதாரர்கள் கடப்பாடு பெற்றிருத்தல் வேண்டும்.

2.1 கேள்விமனு படிவத்தை வெளியிடும் இறுதித் திகதி – 2024.09.09 ஆம் திகதி பி.ப. 3.00 வரை

2.2 கேள்விமனு படிவத்தை ஏற்றல் - 2024.09.10 ஆம் திகதி மு.ப. 10.00 வரை

2.3 கேள்விமனு படிவத்தை திறப்பது – 2024.09.10 ஆம் திகதி மு.ப. 10.30 இற்கு

(கேள்விமனு விண்ணப்பதாரர்கள் 2024.09.09 ஆம் திகதி பி.ப. 3.00க்கு முன்னர் குறித்த கட்டணத்தை செலுத்தி கேள்விமனு படிவத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதோடு பி.ப. 3.00க்கு பின்னர் கேள்விமனு படிவத்தை வழங்குவது நிறுத்தப்படும்.)

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள தொலைபேசி இலக்கங்களில் விசாரிக்கவும்.
037-2281265, 037-4947212 – அலுவலகம்
037-4947233 – வருவாய் பிரிவு

**எஸ்.எம்.என்.கே. குணதிலக்க**
**செயலாளர்**
**குளியாப்பிட்டிய பிரதேச சபை**

2024.08.20 ஆம் திகதி
**குளியாப்பிட்டிய பிரதேச சபை அலுவலகத்தில்.**

# பொதுமக்களுக்கான அறிவித்தல்

இலக்கம் 43, ஹோர்டன் பிளேஸ், கொழும்பு 07 வசித்து வந்த மறைந்த ருக்மணி நீலியா பிரஜானி இராஜபக்ஷ என்பவரின் பரம்பரைச் சொத்துக்களை சேகரிப்பதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் DTS 366/24 இல் காணப்படும் வழக்கில் **2024.07.30** திகதியிடப்பட்ட உத்தரவின் மூலம் இலங்கையின் அரச திரைச்சேரிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மறைந்த ருக்மணி நீலியா பிரஜானி இராஜபக்ஷவின் சொத்துகளுக்கு சொந்தமான

(அ). அசையும் சொத்தை சேகரிக்கவும், நிர்வகிக்கவும் மற்றும் பராமரிக்கவும்

(ஆ). அசையாச் சொத்திலிருந்து வாடகை / குத்தகை கொடுப்பனவுகள் மற்றும் இலாபங்களை மீட்டெடுக்கவும், மற்றும் அசையாச் சொத்தை நிர்வகிக்கவும்,

இலங்கையின் அரச திறைச்சேரியிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

SELACINE

# நிரந்தரமாக மூடும் அறிவித்தல்

Aesthetics & Company நிறுவனம் உடன் அமுலுக்கு வரும் வகையில் நிரந்தரமாக மூடப்படுவதை எமது வாடிக்கையாளர்கள் மற்றும் வருகையாளர்களுக்கு வருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

கடந்த ஆண்டுகளில் எம்மை இந்த நிலைக்கு கொண்டுவருவதற்கு உதவிய மற்றும் ஆதரவை வழங்கிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளை கூறிக்கொள்கிறோம். உங்களுக்கு பணியாற்ற கிடைத்தது எமக்கு பெரும் கௌரவமாகும்.

உங்களின் ஆதரவுக்காகவும் எமது பயணத்தின் பெறுமதி மிக்க அங்கமாக இருந்ததற்காகவும் மீண்டும் ஒருமுறை நன்றி பகர்கிறேன்.

# கேள்வி அறிவித்தல்

## புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்

புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள என்னும் பாவிக்கப்படாத கீழ்க்காணும் உருப்படிகளை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பொருட்களின் வகைகள் |
|---|
| ஒரு நிமிடத்திற்கு 60 லீற்றர் பம்ப் செய்யக்கூடிய பம்பியுடன் (With automatic diesel gun and diesel meter 7000 லீற்றர் எரிபொருள் களஞ்சியப்படுத்தக்கூடிய தாங்கி (Solex) |

மேற்படி உருப்படியை கொள்வனவு செய்வதற்கு ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகள் ரூ.25,000.00 மீளளிக்கப்படும் வைப்பை மற்றும் ரூ.1000.00 மீளளிக்கப்படாத தொகையை புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் தலைமையகத்திற்கு செலுத்திய பின்பு பெறுகைப்பிரிவில் குறித்த விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

2024.08.20 முதல் வார நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை குறித்த உருப்படிகளை பிட்டகோட்டேயில் அமைந்துள்ள தலைமையக வளாகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம். இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்கள் குறித்த விண்ணப்பத்தை நிரப்பி 2024.09.06 பி.ப.2.00 இற்கு முன்பு அவ் விலைமனுக்களை, "தலைவர், பெறுகைக்குழு, புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்,இல.569, எப்பிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது பெறுகைப்பிரிவில் உள்ள குறித்த கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

விலைமனுக்களை அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மூலையில் "டீசல் தாங்கி மற்றும் எரிபொருள் பம்பிற்கான விலைமனுக்கள்" என்று குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்க முடியும் அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்**
**இல.569, எப்பிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே**

Gal-Oya

## REGISTRATION OF BUYERS TO BUY "HINGURANA BROWN SUGAR" OF GALOYA PLANTATIONS (PVT) LTD

**கல் ஓயா பிளான்டேசன் (பிரைவட்) லிமிட்டெட் நிறுவனத்தின் ஹிங்குறான பிறவ்ன் சீனி வாங்குவதற்கு வாடிக்கையாளரை பதிவு செய்தல்**

இலங்கையின் மிகத்தரம் வாய்ந்த மற்றும் பிரபல்யமான ஹிங்குறான கோல்டன் பிறவ்ன் சீனி விற்பனைக்காக உள்ளது. குறைந்தபட்ச 20 Mt எடை அளவு வாங்கக்கூடியவர்கள் தங்களை பதிவு செய்து கொள்ளலாம். கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பத்தை மின்னஞ்சல் / தொலைநகல்/ பதிவுத்தபால் மூலம் 31/08/2024 ஆம் திகதிக்கு முன் அனுப்பவும் (" Registration of buyers to buy Hingurana Brown Sugar" என கடித உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடவும்)

- Company Name/ Proprietor : -
- Contact Person Name : -
- Address :-
- Telephone Number :-
- Fax Number :-
- Email Address :-

**உங்கள் விண்ணப்பத்தை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.**

**Sales Executive**
**Galoya Plantations (Pvt) Ltd,**
**Hingurana, Ampara.**
**Fax :- 063-2240435 Tel :- 076-8238126**
**E-mail :- sugarsales@galoya.lk**
**Web Site :- http://www.galoya.lk**

Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...
Gather with.




Green Light for Online Transfer
Lake House Branch
Acc. No. 000000377
WE ACCEPT
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 | 011 2 429 342/ 343

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 4 828 114 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# பெறுகை அறிவித்தல்

## கட்டுபொத நகரத்துக்குள் பயன்மிகு முதலீட்டு வாய்ப்புகள் வர்த்தகர்களாகிய உங்களுக்கு தற்போது திறந்துள்ளது

கட்டுபொத நகர மத்தியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் வர்த்தகத் தொகுதியின் தரைத் தளத்தில் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கடைகள் 2024.11.01 ஆம் திகதி தொடக்கம் 30 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடும் நோக்கில் வாங்குபவர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனுக்கள் என்னால் ஏற்கப்படும்.

கேள்விமனு படிவத்தை வழங்கல் – 2024.08.20 தொடக்கம் 2024.09.09 பி.ப. 3.00 வரை
கேள்விமனு படிவத்தை ஏற்றல் – 2024.09.10 மு.ப. 10.00 வரை
கேள்விமனு படிவத்தை திறப்பது – 2024.09.10 மு.ப. 10.30க்கு

கேள்விமனு படிவங்களை பெறும்போது சபையினால் குத்தகைக்கு வழங்கப்படும் ஆதனங்கள் சார்ந்த கேள்விமனு நிபந்தனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஆதனங்களை குத்தகைக்கு எடுக்கும்போது அந்த கேள்விமனு நிபந்தனைகளுக்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு விண்ணப்பதாரர்கள் கடப்பாடு பெற்றிருத்தல் வேண்டும்.

**அட்டவணை**
**கட்டுபொத வர்த்தகத் தொகுதியில் அமைந்துள்ள கடைகள்**

| கடை இலக்கம் | மீளளிக்கப்படாத குறைந்தபட்ச விலைமனு தொகை | மீளளிக்கப்படும் கேள்விமனு பிணை | கேள்விமனு படிவ கட்டணம் | சதுர அடி அளவு |
|---|---|---|---|---|
| 4 | 154,000.00 | 5000.00 | 1000.00 | 229 |
| 5 | 154,000.00 | 5000.00 | 1000.00 | 229 |
| 6 | 154,000.00 | 5000.00 | 1000.00 | 229 |
| 7 | 220,000.00 | 5000.00 | 1000.00 | 334 |
| 8 | 220,000.00 | 5000.00 | 1000.00 | 334 |
| 9 | 220,000.00 | 5000.00 | 1000.00 | 334 |
| 10 | 220,000.00 | 5000.00 | 1000.00 | 334 |
| 11 | 220,000.00 | 5000.00 | 1000.00 | 334 |
| 12 | 70,000.00 | 5000.00 | 1000.00 | 106 |
| 13 | 134,000.00 | 5000.00 | 1000.00 | 167 |

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள தொலைபேசி இலக்கங்களில் விசாரிக்கவும்.
037-2281265, 037-4947212 – அலுவலகம்
037-4947233 – வருவாய் பிரிவு

**எஸ்.எம்.என்.கே. குணதிலக்க**
**செயலாளர்**
**குளியாபிடிய பிரதேச சபை**

2024.08.20 ஆம் திகதி
**குளியாபிடிய பிரதேச சபை அலுவலகத்தில்.**




Repeat Your Ad For Better Offers

# பெறுகை அறிவித்தல்

கண்டி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் பாடசாலைகளுக்கு புதிய 37 பக்கவாற்று விக்கட்டுகளை நிர்மாணித்தல், கங்கவட்ட கோறளையின் பிரதேச செயலகப் பிரிவில் 02 வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் கங்க இஹல கோறளையின் பிரதேச செயலகப் பிரிவின் மல்வத்தகம சமுர்தி வங்கி கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக தகைமையுள்ள அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத அது பற்றி ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கண்டி மாவட்ட செயலாளர் மற்றும் பெறுகைக் குழுவின் தலைவரால் 2024.09.11 மு.ப. 10.00 வரை கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

02. இதனோடு சம்பந்தப்பட்ட விபரங்களை மாவட்ட செயலகத்தின் இணையதளம் (www.kandy.dist.gov.lk) பெறுகையின் கீழ் அல்லது மாவட்ட செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**சந்தன தென்னகோன்,**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**மாவட்ட செயலாளர்/அரச அதிபர்,**
**மாவட்ட செயலகம், கண்டி.**

# பெறுகை அறிவித்தல்

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.)**

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

## 60/70 தரத்தில் தார் வழங்குதல்

இவ் அதிகார சபையில் கீழ்க்காணும் எஸ்போல்ட் உற்பத்தியகத்தின் தேவைப்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் கேள்விச் சுருக்கத்தில் தரப்பட்டுள்ளவாறு படிவத் தொகுதியை கொள்வனவு செய்தல் வேண்டும்.

**கேள்விச் சுருக்கம்**

| எஸ்போல்ட் உற்பத்தியகம் | வழங்கல் அளவு | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) | கேள்விப் பிணையின் பெறுமதி ரூ. காசாக/வங்கிப் பிணை முறி |
|---|---|---|---|
| PRDA/WP/PRO/2024/54<br>1. வகவத்த உற்பத்தியகம் 60/70 தரத்தில் தார் | 200,000 | 2000.00 + SSCL 18% வெட் வரி | 352,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2024.08.20 முதல் 2024.09.03ம் வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணங்களுக்கு உட்பட்டு இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணை முறியை காசாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூ. 50 மி. இற்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் குறித்த 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 08ம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பொது ஒப்பந்த பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதி 2024.09.04 பி.ப. 2.30 ஆவதுடன் கேள்விகள் திறத்தல் அவ்வேளையிலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அவ்வேளையில் வழங்குநர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.),**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ.பே. இல. 011-4849825, 011-4849845**

## போதனா வைத்தியசாலை - இரத்தினபுரி

# விலைமனுக்களுக்கான அழைப்பு

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் பெறுகைக்காக தகுதியுடைய மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விலைமனு இலக்கம் | உருப்படி / விபரங்கள் | எண்ணிக்கை | ஒரு ஆவணத்திற்கான மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| THR/E15/08/2024 | Purchasing 4K Laparoscopy System | 01 | 2,500.00 | 500,000.00 |
| THR/E15/09/2024 | Purchasing 7 Fr. Semirigid Ureteroscope | 01 | 2,500.00 | 60,000.00 |
| THR/E15/10/2024 | Purchasing 4.5 Fr. Semirigid Ureteroscope | 01 | 2,500.00 | 60,000.00 |
| THR/E15/11/2024 | Upgrading Available Laparoscopy System | 01 | 2,500.00 | 200,000.00 |
| THR/E15/16/2024 | Purchasing a Paediatric Resectoscope & Urethrotome with accessories | 01 | 2,500.00 | 60,000.00 |

கேள்வி ஆவணங்கள் 2024 செப்டெம்பர் 11ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விநியோகிக்கப்படும் என்பதுடன் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் எந்தவொரு எண்ணிக்கைக்கும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால் ஒவ்வொரு விலைக்கோரலுக்கும் வெவ்வேறான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படாத ஆவணங்களில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் மற்றும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டு இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

2024 செப்டெம்பர் 12ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுறும் என்பதுடன் அதன் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் இரத்துச் செய்யப்படும். அவ்வேளையிலேயே விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும். (விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கையடக்கத் தொலைபேசி பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது)

விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பின்வரும் வகையில் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும் என இத்தால் உங்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

"Tender for (Tender Name) - (bid No)"
உதாரணம்: "Tender for 01 No. of 4K Laparoscopy System - THR/E15/08/2024"

எந்தவொரு விலைமனுவையும் அல்லது அதன் ஒரு பகுதியை எவ்வித காரணமும் காட்டாமல் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை பிரதேச பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

தேவையற்ற தாமதங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக விலைமனு ஆவணத் தொகுதிகளை பெற்றுக்கொள்ள வரும் முன் தயவு செய்து கணக்காளரை 045-2222261 நீடிப்பு 263 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**இரத்தினபுரி.**

# விவசாயத் திணைக்களம் - கிழக்கு மாகாணம்

# பெறுகை அறிவித்தல்

**கிழக்கு மாகாண விவசாயத் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரினால் பின்வரும் விடயம் தொடர்பான கேள்விகள் கோரப்படுகின்றன.**

| S No | Bid No | Details | Qty | Bid Security Amount | Non Refundable fee Rs | Bid Security Validity Period | Programme |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | GOSL/EP/25/PRO/Agri. Equipments/2024-05 | Plastic Creates | 1,800Nos | 250,000.00 | 3,500.00 | 2024.12.19 | PSDG |
| 02 | | Secateurs | 600 Nos | | | | |
| 03 | | Pruning saw | 600 Nos | | | | |
| 04 | | Grass cutter | 60 Nos | | | | |
| 05 | | Solar power with water pump | 30 Nos | | | | |
| 06 | | Hose pipe | 600 Nos | | | | |

1. பெறுகை ஆவணங்களினை 20.08.2024 ஆம் திகதியிலிருந்து 05.09.2024 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் காலை 9.00 மணியில் இருந்து மாலை 3.00 மணிவரை திருகோணமலை கன்னியா வீதி, வரோதயநகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக இலங்கை வங்கி திருகோணமலை பிரதான கிளையில் (கிளை இல.006) மாகாணப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், கிழக்கு மாகாணம் என்ற பெயரில் கணக்கு இலக்கம் 0005849161 இற்கு மீளச் செலுத்த முடியாத வைப்புப் பணமாக ரூபா. 3,500.00 இனை ஆவணத்திற்குச் செலுத்த வேண்டும்.
2. பெறுகை ஆவணங்களை மூடப்பட்ட உறையிலிட்டு 06.09.2024ஆம் திகதி முப 10.00 மணிக்கு முதல் கிடைப்பதற்காக தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, விவசாயத் திணைக்களம், கிழக்கு மாகாணம், கன்னியாவீதி, வரோதயநகர், திருகோணமலை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது கையால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கும் பெறுகை ஆவணத்தின் உறையின் இடது பக்க மூலையில் பெறுகை இலக்கத்தினை குறிப்பிடுவது கட்டாயமானதாகும்.
3. உரிய நேரத்திற்கு பின் உடனே (06.09.2024) மு. ப. 10.01 மணிக்கு பெறுகை ஆவணங்கள் திருகோணமலை கன்னியா வீதி, வரோதய நகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் திறக்கப்படும். இதற்காக பெறுகைதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்ற முடியும்.
4. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்ட ஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுக் கோரலை இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
5. மேலதிக விபரங்களை கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில், மாகாணப் பணிப்பாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

தொலைபேசி : 026-2222665/ 026-2223077, தொலைநகல் : 026-2222153/026-2223077

**D.M.S.B. திசாநாயக்க**
**மாகாணப் பணிப்பாளர்,**
**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**விவசாயத் திணைக்களம், கிழக்கு மாகாணம்,**
**கன்னியா வீதி, வரோதயநகர்,**
**திருகோணமலை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## விவசாய அமைச்சு

### விவசாயத் திணைக்களம்

பேராதனை விவசாயத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் பின்வரும் நிர்மாணங்களுக்காக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் சிடா (CIDA) தரப் பதிவைப் பெற்றுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

யாராவது விலைமனுதாரர் சார்பாக பிரதிநிதியொருவர், இணை பிரதிநிதியொருவர், உப பிரதிநிதியொருவர் அல்லது பெயரிடப்பட்டவராக முன்வரும் நபரொருவர் தொடர்பில் வழிகாட்டி கோவை 8(1), (மேலதிக-13) பிரகாரம் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவாளரிடம் பதிவு செய்துகொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்தப் பதிவை உறுதி செய்வதற்கு பதவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியொன்றை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

2024.08.20ஆம் திகதி முதல் 2024.09.09ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரையான அலுவலக நேரத்தினுள் இத்திணைக்களத்தின் பொறியியல் பிரிவில் கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்த்து அறிவித்தலில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024.09.10ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன் இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்து அங்கு கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ விலைமனுக்களை ஒப்படைக்கலாம். அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். இவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

குறித்த விடயம் தொடர்பான மேலதிக விபரங்கள் தேவையாயின் விவசாயத் திணைக்களத்தின் பொறியியலாளர் பிரிவிற்கு வருகை தந்து அல்லது பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக விசாரித்தறிந்துகொள்ளலாம்.

விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதி, நேரம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

| வேலையின் தன்மை | ஆகக் குறைந்த பதிவு (இக்டாட்) (சீடா) (கட்டிட நிர்மாணம்) | விலைமனு வைப்பு: மீளளிக்கப் படும் (ரூபா) | விலைமனு வைப்பு: மீளளிக்கப்படாதது – ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால் (ரூபா) | விலைமனு வைப்பு: மீளளிக்கப்படாதது – வங்கிப் பிணை முறியாகச் சமர்ப்பிப்பதானால் (ரூபா) |
|---|---|---|---|---|
| மாகந்து நிலையான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் மேல் மாடியை நிர்மாணித்தல் (ரூபா 13,511,786.50) | சீ – 05<br>சீ – 06 | 7,000.00 | 135,100.00 | 270,200.00 |
| பட்டஅத்த சமல் ராஜபக்ஷ விவசாய தொழில்நுட்ப பூங்காவில் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப பிரிவை நிர்மாணித்தல் (ரூபா 6,775,544.50) | சீ – 06<br>சீ – 07 | 3,000.00 | 67,750.00 | 135,500.00 |
| கன்னொருவ விவசாய தொழில்நுட்ப பூங்காவில் மலசலகூட முறைமையை நிர்மாணித்தல் (ரூபா 5,078,420.50) | சீ – 06<br>சீ – 07 | 2,500.00 | 50,750.00 | 101,500.00 |

**பிரதான பொறியியலாளர்,**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**பொறியியல் பிரிவு,**
**விவசாயத் திணைக்களம்,**
**பேராதனை.**
**தொலைபேசி இல. 081-2388006/081-2388126**
**தொலைநகல் இல. 081-2384308**

# விலைக் கோரலுக்கான அழைப்பு (IFB)

## மேல் மாகாண சபை - பொறியியல் செயலணி

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக இயைபுடைய பிரதேச பொறியியலாளர் / பணிப்பாளர் (கட்டிடங்கள்) பெறுகைக் குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. I. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்படுவர். 04/2016(iii)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) மொத்தப் பெறுகையின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
   II. 01/2024ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை இந்தப் பெறுகைக்கு ஏற்புடையது.

| (1) தொ. இல. | (2) ஒப்பந்தத்தின் இலக்கம் | (3) வேலையின் பெயர் | (4) நேரடி மதிப்பீட்டுக் கிரயம் | (5) 03ஆம் இலக்க பொது ஒப்பந்தத் தேவைப்பாடு | (6) CIDA பதிவு | (7) மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | (8) மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறி | (9) விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | WP/PU/ CON/24/343 | கம்பஹாவில் RDHS அலுவலக விஸ்தரிப்பின் மிகுதி வேலைகள் (கட்டம் 111) | 49,372,902.65 | ஆம் | C4 மற்றும் அதற்கு மேல் | 13,500.00 | பண வைப்பு - ரூபா 330,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 660,000.00 | வழங்குதல்: பிரதேச பொறியியலாளர் அலுவலகம் கம்பஹா, நீதிமன்ற வீதி, கம்பஹா. தொலைபேசி இல. 033-2222515<br>சமர்ப்பித்தல்: பணிப்பாளர் (கட்டடங்கள்), பொறியியல் பணியகம் (மே.மா), 5ஆம் தளம், இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல. தொ.பே. **011-2092504** |
| 2 | WP/PU/ CON/24/344 | வேயாங்கொட - ஜனாதிபதிக் கல்லூரியில் மனையியல் மற்றும் கைப்பணி அறையின் புதுப்பித்தல் வேலைகள் | 8,113,324.25 | ஆம் | C7 மற்றும் C6 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 50,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 100,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் கம்பஹா, நீதிமன்ற வீதி, கம்பஹா. தொலைபேசி இல. 033-2222515 |
| 3 | WP/PU/ CON/24/345 | ரதாவன மாவட்ட வைத்தியசாலையில் 01ஆம் மற்றும் 2ஆம் இலக்க வார்டிற்கான கழிவுநீர் குழிகளை புதுப்பித்தல் | 5,004,100.15 | ஆம் | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 31,250.00<br>விலைக்கோரல் பிணை முறி - 62,500.00 | |
| 4 | WP/PU/ CON/24/346 | வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையில் அனுர பண்டாரநாயக்க சிகிச்சைக் கட்டிடத்தின் மேற்கூரை திருத்தவேலைகள் | 3,728,043.20 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 22,500.00<br>விலைக்கோரல் பிணை முறி - 45,000.00 | |
| 5 | WP/PU/ CON/24/347 | மெத் செவனயில் உள்ள (10 எண்ணிக்கை) விடுதிகளின் திருத்தவேலைகள் | 15,054,095.84 | ஆம் | C6 மற்றும் C5 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 93,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 186,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இரத்மலானை. இல. 25, மாளிகாவ வீதி, இரத்மலானை. தொலைபேசி இல. 0112-622517 |
| 6 | WP/PU/ CON/24/348 | மேமா/பிலி/சொய்கா மகா வித்தியாலயம் - 160' x 20' ஒற்றை மாடிக் கட்டிடத்தின் கூரை மற்றும் ஏனைய திருத்தவேலைகள் | 3,236,511.70 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 20,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 40,000.00 | |
| 7 | WP/PU/ CON/24/349 | மேமா/கொழு/அனுருத்த மகளிர் வித்தியாலயம் - ஆரம்ப கற்றல் வள நிலையம் - கட்டம் 2 (மிகுதி வேலைகள்) | 4,845,329.15 | இல்லை | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 30,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 60,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இல. 151/4/2/1, மாளிகாவத்த பிளேஸ், மாளிகாவத்தை, கொழும்பு-10. தொலைபேசி-: 011-2447773 |
| 8 | WP/PU/ CON/24/350 | மேமா/கொழு/சென் ஜோன்ஸ் வித்தியாலயம் - எல்லைச் சுவரின் திருத்தவேலைகள் (சேர்ச் பக்கம்) | 3,708,232.70 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | விலைக்கோரல் பிணை முறி - 45,900.00 | |
| 9 | WP/PU/ CON/24/351 | மஹிந்த வித்தியாலயத்தில் உள்ள எல்லைச் சுவரின் திருத்தவேலைகள் | 3,150,000.00 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 19,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 38,000.00 | |
| **10** | WP/PU/ CON/24/352 | மேமா/களு/களுத்துறை முஸ்லிம் மகளிர் ம.வி. - 110'x30' மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் கட்டம் 1 (தரை தளத்தின் பூர்த்தியாக்கல்) | 72,973,213.95 | ஆம் | C4 மற்றும் அதற்கு மேல் | 20,000.00 | விலைக்கோரல் பிணை முறி - 990,000.00 | வழங்குதல்: பிரதேச பொறியியலாளர் அலுவலகம் களுத்துறை, சுமங்கள வீதி, களுத்துறை வடக்கு. தொலைபேசி இல. 034-2237002/ 034-2237349<br>சமர்ப்பித்தல்: பணிப்பாளர் (கட்டடங்கள்), பொறியியல் பணியகம் (மே.மா), 5ஆம் தளம், இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல. தொ.பே. **011-2092504** |
| **11** | WP/PU/ CON/24/353 | மேமா/களு/களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி - மூன்று மாடிக் கட்டிடத்தில் வகுப்பறைகள் சகிதம் ஆய்வுகூடக் கட்டிடத்தை நிர்மாணித்தல் கட்டம் 1 (தரை தளத்தின் பூர்த்தியாக்கல் வேலைகள்) | 56,313,406.03 | ஆம் | C4 மற்றும் அதற்கு மேல் | 15,000.00 | விலைக்கோரல் பிணை முறி - 765,000.00 | |
| 12 | WP/PU/ CON/24/354 | மேமா/களு/பலயங்கொட க.வி. - இரண்டு பிரிவுகளின் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் (நீளம் 210' x 80') 2288 (அனர்த்த பாதிப்பு) | 6,456,820.00 | ஆம் | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 40,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 80,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் களுத்துறை, சுமங்கள வீதி, களுத்துறை வடக்கு. தொலைபேசி இல. 034-2237002/ 034-2237349 |
| 13 | WP/PU/ CON/24/355 | களுத்துறை மாவட்ட போம்வாவல உள்ளக பயிற்சி நிறுவனம் - அலுவலகக் கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | 7,346,870.25 | ஆம் | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 46,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 92,000.00 | |
| 14 | WP/PU/ CON/24/356 | கம்பஹா மாவட்டம் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்டு அவசர உதவித் திட்டம் (ADB) கம்பஹா மாவட்டம் (பொதி 02) | 10,941,512.10 | ஆம் | C6 மற்றும் C5 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 70,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 140,000.00 | பொறியியல் பிரிவு, பொறியியல் பணியகம் (மே.மா), 5ஆம் தளம், இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல. தொ.பே. **011-2092504** |
| 15 | WP/PU/ CON/24/357 | கம்பஹா மாவட்டம் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்டு அவசர உதவித் திட்டம் (ADB) கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்கள் (பொதி 01) | 10,564,282.05 | ஆம் | C6 மற்றும் C5 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 67,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 134,000.00 | |
| 16 | WP/PU/ CON/24/358 | மேமா/களு/ஜெரமியாஸ் டயஸ் வித்தியாலயம் - 50' x 30' ஒற்றை மாடிக் கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | 4,036,600.00 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 25,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 50,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஸ்ரீ மகா விஹார வீதி, பாணந்துறை. T.P -: 038-2234774 |
| 17 | WP/PU/ CON/24/359 | மேமா/ஹொர/பாத்தஹவத்த ஸ்வர்ணஜோதி வித்தியாலயம் - 110' x 30' கட்டிடத்தின் மிகுதி வேகைள் (கட்டம் IV) | 8,264,462.81 | ஆம் | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 50,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 100,000.00 | |
| 18 | WP/PU/ CON/24/360 | மேமா/ஹொர/பாத்தஹவத்த ஸ்வர்ணஜோதி வித்தியாலயம் - அழகியற் பிரிவை நிர்மாணித்தல். | 3,768,315.43 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 22,500.00<br>விலைக்கோரல் பிணை முறி - 45,000.00 | |
| 19 | WP/PU/ CON/24/361 | மேமா/ஹொர/கல்பாத்த க.வி. - அலுவலகக் கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் | 2,020,219.51 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 12,500.00<br>விலைக்கோரல் பிணை முறி - 25,000.00 | |
| 20 | WP/PU/ CON/24/362 | மேமா/களு/ஹொரேதுடுவ முஸ்லிம் க.வி. - 80' x 20' ஒற்றை மாடிக் கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் (அனர்த்த பாதிப்பு) | 2,050,000.00 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 12,500.00<br>விலைக்கோரல் பிணை முறி - 25,000.00 | |
| 21 | WP/PU/ CON/24/363 | மேமா/களு/சென் அந்தோனி மகளிர் வித்தியாலயம் - 90' x 25'இரண்டு மாடிக் கட்டிடத்தின் கூரை புதுப்பித்தல் வேலைகள் | 3,379,830.50 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 20,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 40,000.00 | |
| 22 | WP/PU/ CON/24/364 | மேமா/ஹொர/தலஹிட்டிய க.வி. - 110' x 70' ஒற்றை மாடிக் கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் (H) வடிவான கட்டிடம் | 2,421,560.00 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 15,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 30,000.00 | |
| 23 | WP/PU/ CON/24/365 | அவிசாவளை மா.பொ. வைத்தியசாலையில் பணிப்பாளர் விடுதியின் புதுப்பித்தல் வேலைகள் | 12,710,665.85 | ஆம் | C6 மற்றும் C5 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 80,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 160,000.00 | பிரதேச பொறியியலாளர், பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஹோமாகம, நீதிமன்ற வீதி, ஹோமாகம. தொலைபேசி 011-2855719 |
| 24 | WP/PU/ CON/24/366 | பாதுக்க சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஒற்றை மாடிக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் | 8,625,004.00 | ஆம் | C7 மற்றும் C6 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 55,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 110,000.00 | |
| 25 | WP/PU/ CON/24/367 | ஹொரண களுத்துறை மாவட்ட கமத்தொழில் பயிற்சி நிலையத்தில் திசு கல்ச்சர் ஆய்வுகூடத்தை விஸ்தரித்தல் மற்றும் திருத்தவேலைகள் | 3,632,233.15 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 22,500.00<br>விலைக்கோரல் பிணை முறி - 45,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஹொரணை, பல்லபிட்டிய, ஹொரணை. தொலைபேசி: 034-2261019 |
| 26 | WP/PU/ CON/24/368 | புளத்சிங்கள பிரதேச வைத்தியசாலையில் 04ஆம் இலக்க வார்டின் கட்டிட புதுப்பித்தல் வேலைகள் | 3,676,106.00 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 22,500.00<br>விலைக்கோரல் பிணை முறி - 45,000.00 | |
| 27 | WP/PU/ CON/24/369 | மேமா/ஹொர/மெனரிகம ஆ.வி. - 90' x 20' கட்டிடத்தின் அவசர கூரை திருத்தவேலைகள் | 2,454,406.72 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 15,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 30,000.00 | |
| 28 | WP/PU/ CON/24/370 | மேமா/ஹொர/ரெமுனா ம.வி. - 40' x 20'ஆய்வுகூடக் கட்டிடத்தின் கூரை மற்றும் கட்டிட திருத்தவேலைகள் | 2,446,747.90 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 15,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 30,000.00 | |
| 29 | WP/PU/ CON/24/371 | மேமா/ஹொர/தெல்முல்ல க.வி. - 90' x 20' கட்டிடத்தின் கூரை மற்றும் ஏனைய திருத்தவேலைகள் | 2,750,227.80 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 16,750.00<br>விலைக்கோரல் பிணை முறி - 33,500.00 | |
| 30 | WP/PU/ CON/24/372 | அம்பேபுஸ்ஸ விவசாயப் பயிற்சி நிலையத்தில் கபானாவை அபிவிருத்தி செய்தல் | 10,181,535.26 | ஆம் | C6 மற்றும் C5 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 62,000.00<br>விலைக்கோரல் பிணை முறி - 124,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மினுவாங்கொட. வலயக் கல்வி அலுவலகம், மினுவாங்கொட. தொலைபேசி இல. 0112-296418 |
| 31 | WP/PU/ CON/24/373 | அம்பேபுஸ்ஸ விவசாயப் பயிற்சி நிலையத்தில் 2000 கோழிக் குஞ்சுகள் மற்றும் ஏனைய நிர்மாண வேலைகளுக்கு 04 எண்ணிக்கையான கோழிக் கூட்டை நிர்மாணித்தல் | 10,540,205.35 | ஆம் | C6 மற்றும் C5 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 62,500.00<br>விலைக்கோரல் பிணை முறி - 125,000.00 | |

3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களாக இருத்தல் ஆகாது என்பதுடன் விலைமனு ஆவணத்தின் பிரகாரம் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4. இதில் ஆர்வம் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பொறியியல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. மீளளிக்கப்படாத கட்டணத்தை (01, 10 மற்றும் 11 நீங்கலாக) 2024-08-20ஆம் திகதி முதல் 2024-09-03ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் மற்றும் (01, 10 மற்றும் 11ஆம் இலக்கத் திட்டங்களுக்கு) 2024-08-20ஆம் திகதி முதல் 2024-09-10ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் மேல் மாகாண சபைக்கு செலுத்தியதன் பின் இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அவர்களுக்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை வெவ்வேறான கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை இயைபுடைய அலுவலகத்திற்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) (01, 10 மற்றும் 11ஆம் இலக்க திட்டங்கள் தவிர்ந்தவைக்கு) 2024-09-04ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் மற்றும் (01, 10 மற்றும் 11ஆம் இலக்கத் திட்டங்களுக்கு) 2024-09-11ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து அவ்வேளையிலேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. சகல விலைமனுக்களுடனும் விலைமனுப் பிணை முறி அல்லது ரொக்கப் பண வைப்பு பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (அட்டவணையின் 08ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்). செல்லுபடிக் காலமானது விலைமனு ஆவணத்தின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும்.

8. விலைமனுதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். (அட்டவணையின் 05ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்)

**பொறி. K. R. அபேசிறிவர்தன,**
**பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்),**
**பொறியியல் பணியகம் (மே.மா),**
**5ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**
**2024-08-16.**
**தொலைபேசி: 0112-092504 தொலைநகல்: 0112-092505**

# நேபாளத்திடம் இலங்கை இளையோர் அணி தோல்வி



நேபாளத்தில் நடைபெற்று வரும் 20 வயதுக்கு உட்பட்ட சாஃப் சம்பியன்சிப் போட்டியின் முதல் ஆட்டத்தில் இலங்கை இளையோர்கள் போட்டிய நடத்தும் நேபாளத்திடம் 0–1 என தோல்வியை சந்தித்தனர்.

பட்டானில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் நேபாள வீரர்கள் ஆரம்பத்திலேயே ஆதிக்கம் செலுத்தினர். மத்திய கள வீரர் நிராஜன் தமி 24 ஆவது நிமிடத்தில் இலங்கை பின்களத்தை முறியடித்து கோல் புகுத்தினார்.

இந்தப் போட்டியில் இலங்கை அணி ஆரம்பத்தில் தடுமாற்றம் கண்டபோதும் இரண்டாவது பாதியில் பந்தை சிறப்பாக பரிமாற்றி ஆடிய நிலையில் எதிரணி கோல் கம்பத்தை ஆக்கிரமிக்க தவறியது. இதனால் பதில் கோல் புகுத்தும் முயற்சியும் தவறிப்போனது.

இந்நிலையில் இலங்கை அணி இந்தத் தொடரில் தனது இரண்டாவது குழு நிலைப் போட்டியில் இன்று பங்களாதேஷை எதிர்கொள்வுள்ளது. அரையிறுதி வாய்ப்பை தக்கவைக்க இந்தப் போட்டியில் வெற்றி பெறுவது கட்டாயமாகும்.

# அயர்லாந்திடம் தொடரை இழந்தது இலங்கை மகளிர்



இலங்கை மகளிருக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் வெற்றியீட்டிய அயர்லாந்து அணி மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை 2–0 என கைப்பற்றியது.

பெல்பாஸ்டில் நேற்று முன்தினம் (18) நடந்த போட்டியில் 156 ஓட்ட வெற்றி இலக்கை துரத்திய இலங்கை அணி சார்பில் ஹர்ஷிதா சமரவிக்ரம 105 ஓட்டங்களை பெற்றதோடு அவர் கவிஷா டில்ஹாரியுடன் (53) இணைந்து மூன்றாவது விக்கெட்டுக்கு 126 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து கொண்டபோதும் கடைசி நேரத்தில் மளமளவென்று விக்கெட்டுகள் பறிபோயின.

இதனால் இலங்கை மகளிர் அணி 48 ஓவர்களில் 240 ஓட்டங்களுக்கு சுருண்டது.

முன்னதாக நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணித்தலைவி சமரி அத்தபத்து எதிரணிக்கு முதலில் துடுப்பெடுத்தாட பணித்த நிலையில் அயர்லாந்து மத்திய வரிசை வீராங்கனைகள் சிறப்பாக செயற்பட்டு அணியின் ஓட்டங்களை அதிகரித்தனர். எமி ஹன்டர் (66), லீ போல் (81) மற்றும் ரொபெக்கா ஸ்டோகல் (53) ஆகியோர் அரைச்சதம் சேர்த்தனர்.

இதனால் அயர்லாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 255 ஓட்டங்களை பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி இன்று (20) நடைபெறவுள்ளது.

# கிழக்கு சதுரங்கத்தில் சோபித்த கல்முனை ஸாஹிரா மாணவர்கள்



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

இலங்கை பாடசாலை சதுரங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிழக்கு மாகாண சதுரங்க போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவர்கள் சோபித்துள்ளனர்.

திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் (18) நடைபெற்ற இந்தப் போட்டியில் கல்முனை ஸாஹிரா சார்பில் ஆண்களுக்கான 20 வயது பிரிவில் எம்.ஏ. தமீம் மற்றும் 17 வயது பிரிவில் எம். இசட்.எம். சனீப் சம்பியனாகினர். தவிர, ஆண்களுக்கான 17 வயது மற்றும் 15 வயது பிரிவுகளில் முறையே ஏ.எஸ்.ஏ. மிஜ்வாத் மற்றும் ஏ. அர்ஹம் பரவீஸ் 2ஆவது இடங்களை பிடித்தனர்.

அதேபோன்று எம்.ஜே.ஐ. சஹ்மி, எம்.என்.எம். நிசாத், ஏ.ஏ. அனுப் மற்றும் டீ.ஏ. செய்மி ஆகிய மாணவர்களும் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகினர்.

# ஈஸ்ரன் வொரியஸ் சம்பியன்

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**



அட்டாளைச்சேனை மாக்ஸ் மேன் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஒலுவில் ஈஸ்ரன் வொரியஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

கடந்த ஒரு மாதமாக நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை (17) கழகத்தின் தலைவர் ஏ.சீ. றிசாட் தலைமையில் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் பாலமுனை அல்–அறபா அணியை 9 விக்கெட்டுகளால் ஈஸ்ரன் வொரியஸ் அணி தோற்கடித்தது. தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக வொரியஸ் அணியின் சாஜித் மற்றும் இறுதிப் போட்டியின் சிறந்த வீரராக அந்த அணியின் சஜாத் தெரிவாகினர்.

# பிலிப்பைன்ஸில் குரங்கம்மை



பிலிப்பைன்ஸில் முதல் குரங்கம்மைத் தொற்று பதிவாகியுள்ளது. எனினும் அது எந்த வகை என்பது இன்னும் உறுதிப்படுத்தப் படவில்லை என அந்நாட்டுச் சுகாதார அமைச்சு கூறியது.

பாதிக்கப்பட்டவர் 33 வயது பிலிப்பைன்ஸ் ஆடவர் என்று ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் கூறியது. அவர் பிலிப்பைன்ஸுக்கு வெளியே பயணம் மேற்கொள்ளவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்ற தகவல்கள் பின்னர் வெளியிடப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

உலக சுகாதார நிறுவனம் எம்பொக்ஸ் எனப்படும் குரங்கம்மையை உலகப் பொதுச் சுகாதார அவசரநிலையாக கடந்த புதன்கிழமை (14) அறிவித்தது.

கடந்த வியாழக்கிழமை (15) ஆபிரிக்கக் கண்டத்துக்கு வெளியே முதல் நாடாக சுவீடனில் குரங்கம்மை கண்டறியப்பட்டது. அதன் பின் பாகிஸ்தானில் அந்நோய் பரவியது உறுதியானது.

நெருக்கமான தொடர்புகளால் பரவும் இந்தத் தொற்றில் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் ஏற்படுவதோடு ஆபத்தான தோல் புண்கள் ஏற்படும். இதில் தொற்றுக்கு உள்ளான 100 பேரில் நால்வர் மரணிக்கும் அபாயம் உள்ளது.

ஆபிரிக்க நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் வெளியிட்ட அறிக்கைப் படி 2024இல் 12 ஆபிரிக்க நாடுகளில் இதுவரை 17,541 எம்பொக்ஸ் நோய்த்தொற்று பதிவாகி இருப்பதாகவும், 517 இறப்புகள் பதிவாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# ரஷ்யாவில் பாலத்தை தகர்த்தது உக்ரைன்



ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்திற்குள் தொடர்ந்து ஊடுருவி வரும் உக்ரைனியப் படை அங்குள்ள இரண்டாவது மூலோபாய முக்கியம் வாய்ந்த பாலம் ஒன்றையும் தகர்த்துள்ளது.

ஸ்னாவ் பகுதியில் செயிம் நதிக்கு மேலால் இருக்கும் பாலத்தை தாக்கி அழிக்கும் வீடியோ ஒன்றை உக்ரைன் இராணுவம் கடந்த ஞாயிறன்று (18) வெளியிட்டது. இதற்கு சில மணி நேரத்தின் பின் பேசிய உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி, ரஷ்ய தாக்குதல்களை நிறுத்தும் தடை வலயம் ஒன்றை அமைக்கவே ரஷ்யாவுக்குள் ஊடுருவியதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2022இல் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தது தொடக்கம் ரஷ்யாவுக்கு எதிரான மிகப்பெரிய தாக்குதலாகவே கடந்த இரண்டு வாரங்களால் உக்ரைன் ரஷ்யாவுக்குள் ஊடுருவி வருகிறது.

இந்த ஊடுருவலை பெரும் ஆத்திரமூட்டும் செயல் என குறிப்பிடும் ரஷ்யா, முறையான பதிலடி கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப்பின் ரஷ்ய எல்லையில் ஒரு நாடு முதன்முறையாக ஊடுருவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீன–பிலிப்பைன்ஸ் கப்பல்கள் மோதல்: பரஸ்பரம் குற்றச்சாட்டு



சர்ச்சைக்குரிய தென் சீன கடல்பகுதியில் சீன மற்றும் பிலிப்பைன்ஸ் கப்பல்கள் மோதிக்கொண்டது குறித்து இரு நாடுகளும் பரஸ்பரம் குற்றம்சாட்டி வருகின்றன.

நேற்றுக் காலை இடம்பெற்ற சம்பவத்தில் பிலிப்பைன்ஸ் கப்பல் எச்சரிக்கையை பொருட்படுத்தாமல் தொழில்முறையற்ற மற்றும் ஆபத்தான வகையில் சீனக் கப்பலுடன் மோதியதாக சீன காடலோர காவல் படை வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இது உண்மைக்கு மாறானது என்று குறிப்பிடும் பிலிப்பைன்ஸ், தனக்குச் சொந்தமான கடற்பகுதிக்குள் சீனக் கப்பல்கள் இருந்ததாகவும் அவை பிலிப்பைன்ஸ் கடலோரக் காவல் படையின் கப்பல்களை மூர்க்கத்தனமாக எதிர்கொண்டதாகவும் குற்றம் சாட்டியது.

தென் சீனக் கடலில் உள்ள இரண்டு தீவுகளில் பிலிப்பைன்ஸ் கடற்படை வீரர்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை அனுப்பிவைக்க பிலிப்பைன்ஸைச் சேர்ந்த கப்பல் சென்றுகொண்டிருந்தபோது சீனக் கப்பல்கள் அதை வழிமறித்ததாகத் தெரிவிக்கப் பட்டது.



# காசா போர் நிறுத்தத்தில் அமெரிக்கா மும்முரம்: 'சிறந்த, கடைசி வாய்ப்பு'

## ஹமாஸ், இஸ்ரேல் பரஸ்பரம் குற்றச்சாட்டு

காசா போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான சிறந்த மற்றும் கடைசி வாய்ப்பாக இது இருக்கக் கூடும் என்று பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் ஆரம்பமான போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நீடிப்பதோடு காசாவில் மோதல் மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையிலேயே பிளிங்கன் பிராந்தியத்திற்குச் சென்றுள்ளார்.

கடந்த ஒக்டோபரில் காசாவில் போர் வெடித்த பின்னர் ஒன்பதாவது முறையாக மத்திய கிழக்கு சென்றிருக்கும் பிளிங்கன் நேற்று (19) இஸ்ரேல் ஜனாதிபதி இசாக் ஹெர்சொக்கை சந்தித்துப் பேசினார்.

'ஒக்டோபர் 7 தொடக்கம் இது எனது ஒன்பதாவது இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கிற்கான பயணமாக உள்ளது. இது ஒரு தீர்க்கமான தருணமாகும். பணயக்கைதிகள் வீடு திரும்புதவற்கான பெரும்பாலும் சிறந்த, சிலவேளை கடைசி வாய்ப்பாக இது இருக்கக் கூடும்' என்று இஸ்ரேல் ஜனாதிபதியை சந்தித்த பின்னர் பிளிங்கன் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

காசா போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக மரதன் பேச்சுவார்த்தை கடந்த பல மாதங்களாக எந்த முடிவும் இன்றி நீடித்த நிலையில் புதிய சுற்று பேச்சுவார்த்தை கட்டார் தலைநகர் டொஹாவில் கடந்த வாரம் இரண்டு நாட்கள் இடம்பெற்றது. தற்போது அந்தப் பேச்சுவார்த்தைகள் எகிப்து தலைநகர் கெய்ரோவில் இந்த வாரம் ஆரம்பமாகவுள்ளது.

அமெரிக்காவால் முன்வைக்கப்பட்ட திருத்தப்பட்ட முன்மொழிவு ஒன்றின் அடிப்படையிலேயே தற்போதைய பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படுகிறது. இது தொடர்பில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே உள்ள இடைவெளியை நிரப்பும் முயற்சியிலேயே அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

போர் நிறுத்தம் நெருங்கி இருப்பதாகவும் அடுத்த வாரத்தில் அதனை எட்ட வாய்ப்பு இருப்பதாகவும் அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்து வருகிறது. எனினும் ஒப்பந்தம் ஒன்றை எட்டுவதைத் தடுத்து வருவதாக இஸ்ரேல் மற்றும் காசாவில் ஆட்சி புரியும் ஹமாஸ் அமைப்பு பரஸ்பரம் குற்றம் சாட்டி வருகின்றன. ஹமாஸ் அமைப்பு கடந்த ஞாயிறன்று வெளியிட்ட அறிவிப்பில், உடன்பாடு ஒன்றை எட்டுவதை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தடுத்து வருவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. போரை தொடரும் நோக்குடன் அவர் புதிய நிபந்தனைகள் மற்றும் கோரிக்கைகளை விடுத்திருப்பதாகவே ஹமாஸ் குற்றம்சாட்டுகிறது.

'மத்தியஸ்தர்களின் முயற்சிகளை முறியடிப்பதற்கும், போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை எட்டுவதை தடுப்பதற்கும் அவரே முழு பொறுப்பாவார்' என்று ஹமாஸ் அமைப்பு குற்றம்சாட்டியது.

### ஹமாஸ் 'பிடிவாதம்'

காசாவில் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கும் காசாவில் இருந்து இஸ்ரேலிய படையினர் வெளியேறுவதற்கும் ஹமாஸ் வலியுறுத்தி வருகிறது. காசாவின் எகிப்துடனான எல்லையான ரபா கடவை, நெட்சரிம் சந்தி மற்றும் பிலடெல்பியா எல்லைப் பகுதிகளின் பல்வேறு மூலோபாய இடங்களில் தொடர்ந்து நிலைகொள்ள இஸ்ரேல் விரும்புகிறது.

நெட்சரிம் தளங்கள் வடக்கு மற்றும் தெற்கு காசாவுக்கு இடைப்பட்ட பகுதி என்பதோடு எகிப்துடனான எல்லையில் இருக்கும் ரபா கடவை மற்றும் பிலடெல்பியா எல்லைப் பகுதி ஹமாஸ் ஆட்சியில் உள்ள காசாவுக்கு ஆயுதங்கள் செல்வதை தடுப்பதற்கு முக்கியமானது என்று இஸ்ரேல் கருதுகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் அமைச்சரவை கூட்டத்தில் பேசிய நெதன்யாகு, பணயக்கைதிகளை மீட்பதற்கான சிக்கலான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் ஆனால் இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு சில கொள்கைகள் தேவையாக உள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

'சில விடயங்களில் எம்மால் நெகிழ்வுப் போக்கை காண்பிக்க முடியும் என்றபோது சில விடயங்களில் நெகழ்வுப் போக்கை காண்பிக்க முடியாது. அதனை நாம் அவர்களுக்கு வலியுறுத்தியுள்ளோம். இந்த இரண்டுக்கும் இடையிலான வித்தியாசம் எமக்கு நன்றாகத் தெரியும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



பேச்சுவார்த்தையில் ஹமாஸ் 'பிடிவாதமாக' இருப்பதாகவும் அதன் மீது அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

மறுபுறம் ஹமாஸ் மூத்த அதிகாரி ஒருவர் கடந்த சனிக்கிழமை பி.பி.சி. செய்தி நிறுவனத்திடம் பேசியபோது, 'மத்தியஸ்தர்களிடம் இருந்து எமக்குக் கிடைத்த செய்தி அதிருப்தி தருகிறது. இதில் (பேச்சுவார்த்தையில்) எந்த முன்னேற்றமும் இல்லை' என்றார்.

ஹமாஸ் அமைப்பு புதிய சுற்று பேச்சுவார்த்தையில் பங்கேற்காதபோதும் பேச்சுவார்த்தை முடிவுகள் மத்தியஸ்தர்களால் அந்த அமைப்பின் கட்டார் அலுவலகத்திற்கு அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அன்டனி பிளிங்கன் நேற்று பின்னேரம் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை சந்தித்ததோடு தொடர்ந்து போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவுள்ள கெய்ரோ பயணமாகியுள்ளார்.

அமெரிக்காவில் விரைவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதில் அமெரிக்க அரசு தீவிரம் காட்டி வருகிறது. மறுபுறம் ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே டெஹ்ரானில் படுகொலை செய்யப்பட்டதற்கு இஸ்ரேல் மீது பழிதீர்ப்பதாக ஈரான் எச்சரித்து வரும் நிலையில் பிராந்தியத்தில் போர் பரவும் அச்சுறுத்தலை தவிர்க்கவும் காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவது தீர்க்கமானது என்று பார்க்கப்படுகிறது.

### டெல் அவிவில் குண்டு

எவ்வாறாயினும் காசாவில் 318 ஆவது நாளாகவும் இஸ்ரேலின் தாக்குதல்கள் நேற்றும் இடம்பெற்றன. மத்திய காசாவின் டெயர் அல் பலாஹ்வில் இஸ்ரேலியப் படை மற்றும் பலஸ்தீன போராளிகள் இடையே தரைவழி மோதம் உக்கிரம் அடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இங்கு இஸ்ரேல் நேற்று முன்தினம் நடத்திய வான் தாக்குதலில் ஒட்டுமொத்த பலஸ்தீன குடும்பம் ஒன்று கொல்லப்பட்டுள்ளது. உறங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஆறு குழந்தைகள் உட்பட எட்டுப் பேர் கொண்ட குடும்பத்தினரே கொல்லப்பட்டதாக அல் ஜசீரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தெற்கு நகரான ரபாவின் அல் ஷகூரா பகுதியில் இஸ்ரேலின் குண்டு வீச்சில் இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா கூறியது. இஸ்ரேலிய உளவு விமானம் குழு ஒன்றை இலக்கு வைத்து குண்டு வீசியதாக அந்த செய்தி கூறுகிறது.

கடந்த பத்து மாதங்களுக்கு மேலாக காசாவில் இஸ்ரேல் இடைவிடாது நடத்தும் தாக்குதல்களில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 40,130 ஆக அதிகரித்துள்ளது. 92,743 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு குறிப்பிடுகிறது. பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

குறிப்பாக கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் 40 பேர் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இஸ்ரேலின் பிரதான நகராக டெல் அவிவில் நேற்று முன்தினம் இரவு குண்டு வெடிப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் அந்த குண்டை கொண்டுவந்தவர் தவறுதலாக வெடிக்கச் செய்ததில் கொல்லப்பட்டிருப்பதாக இஸ்ரேல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தாக்குதல் நடத்த வந்தவர் மேற்குக் கரையைச் சேர்ந்த பலஸ்தீனர் ஒருவராக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இஸ்ரேலின் லெபனான் எல்லையில் தொடர்ந்து பதற்றம் நீடிப்பதோடு தெற்கு லெபனானில் உள்ள ஹெலா சிறு நகரில் இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் இருவர் கொல்லப்பட்டதாக லெபனான் சுகாதார அமைச்சு குறிப்பிட்டது.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புகள் கிட்டத்தட்ட தினசரி பரஸ்பரம் தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் அது முழு அளவில் போர் ஒன்றாக வெடிக்கும் அச்சுறுத்தலும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 20ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.